ஞானம் சென்ரர்
இலங்கை
45 நிமிடம்
அனைவருக்கும் எமது புதுவருட வாழ்த்துக்கள்

Euro 1.55 France: 10FFrs. Germany: 2.50DM Swiss: 2.50SFrs. GB: 90P

# ஈழமுரசு

Eelamurasu Weekly

முரசு: 4 31 டிசம்பர் 1998 – 06 ஜனவரி 1999 முழக்கம்: 207

Gnanam Center




ஐரோப்பா எங்கும் எமது கிளை ஸ்தாபனங்கள் ஆரம்பமாகியுள்ளன. விபரங்கள் உள்ளே

## சிறீலங்கா உளவு நிறுவனத்தில் விரிசல்

# லண்டனில் அம்பலமான சிறீலங்கா இராணுவ உளவாளி

(28.12.98)

சிறீலங்கா இர்ராணுவத்தின் 51- 2ம் படைப்பிரிவைச் சேர்ந்த இராணுவ உயரதிகாரி மேஜர் ஜெனரல் செனிவரத்தினா லண்டனில் உள்ள சிறீலக்கா தூதர்கத்தின் உளவு அதிகாரியாக நியமிக்கப்பட்டமை உளவுத் துறையினரிடையே விரிசலை ஏற்படுத்தியுள்ளது.

சிறீலங்காவின் வெளிவிவகார உளவுப்பணிகளுக்கு பொறுப்பான டிஎவ்ஐ எனப்படும் சிறப்பு உளவுத்துறையினருக்கு அறிவிக்கப்படாமல் இவ் இராணுவ உயரதிகாரி ல்ண்டனுக்கான பிரதான உளவாளியாக நியமிக்கப்பட்டுள்ளார் என பெடரிக்கா ஜன்சி எனும் கொழும்பு செய்தி நிருபர் தகவல் வெளியிட்டுள்ளார்.

எதிர்வரும் ஜனவரி 25ம் திகதி முதல் லண்டனில் உள்ள தூதுவரகத்தில் உத்தியோகபூர்வமாக கடமையேற்க உள்ள செனிவரத்தினா வழமையான உளவாளிக்குரிய நடைமுறைக்குப்புறம்பாக அண்மையில் பகிரங்க மாநாடு ஒன்றில் இராணுவ நிலைபற்றி கருத்து வெளியிட்டுள்ளார். இது பலத்த சர்ச்சையை கொழும்பில் ஏற்படுத்தியது. வெளியே தெரியாத வகையில்

(☞ 2ம் பக்கம்)

## புலிகளுக்கு மக்கள் ஆதரவு உள்ளது! சிறீலங்கா இராணுவத் தளபதி அச்சம்

(28.12.98)

'புலிகள் தனிமைப்படுத்தப்பட்ட சக்தி அல்ல அவர்கள் ஆயுதங்களை வாங்குவதற்கான நிதியை வெளிநாட்டு நிறுவனங்கள் ஊடாக திரட்டுகின்றனர். வெளிநாடுகளிலும், வடக்கிலும் அவர்களுக்கு மக்கள் ஆதரவு உள்ளது' என சிறீலங்கா இராணுவத்தளபதி சிறீலால் விஜய சூரியா அறிவித்துள்ளார்.

நீண்டுசெல்லும் போரில் ஆட்சேர்ப்பு நடவடிக்கையும், பயிற்சியும் தொடர்ச்சியானதொரு விடயங்கள். இத்தகைய பாரிய இராணுவத்தை பாராமரிப்பது செலவீனமானது எனச் சுட்டிக் காட்டிய இராணுவத் தளபதி ஆட்சேர்ப்பு பணியில் பாரிய தயக்கம் நிலவுகிறது எனத் தெரிவித்துள்ளார்.

புலிகளை அழிப்பது எமது

(☞ 2ம் பக்கம்)

## 195000 பீரங்கிக் குண்டுகள் கொள்வனவு

(28.12.98)

152மி.மீ பீரங்கிக்குரிய 195000 குண்டுகளை 1314.8 மில்லியன் ரூபாய்கள் செலவில் சிறீலங்காப் படைகள் கொள்வனவு செய்துள்ளன.

பொம்ரெக் எனும் சீன ஆயுத முகவர் நிறுவனம் ஊடாக இக் கொள்வனவு இடம்பெற்றுள்ளது.

எனினும் சிறீலங்காவில் உள்ள 152 மி.மீ பீரங்கிகளின் எண்ணிக்கை இப் பெருந்தொகை குண்டுகளை வீசுவதற்கு போதுமானதல்ல என கொழும்பு இராணுவ விமர்சகர் இக்பால் அத்தாஸ் கருத்துத் தெரிவித்துள்ளார்.

ஒரு பீரங்கியினால் 2000 குண்டுகளையே வீச முடியும் எனவும் அதன் பின்னர் பீரங்கியின் பிரதான பாகங்களை மாற்றீடு செய்ய வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ள விமர்சகர் சிறீலங்கா

(☞ 2ம் பக்கம்)

## நெடுந்தீவில் புலிகள் தாக்குதல்
### ஈபிடிபி முகாம் தாக்கப்படவில்லை–டக்ளஸ்

(28.12.1998)

நெடுந்தீவில் அமைந்திருந்த ஈபிடிபி முகாம் மீது நேற்றுக் காலை புலிகள் அதிரடி தாக்குதலை நடாத்தியதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் விபரம் தருகின்றன.

சிறீலங்கா இராணுவத்தின் துணைப்படையாக இயங்கும் ஈபிடிபி குழுவின் பிரதான முகாமொன்று புலிகளின் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது. இம்முகாமில் ஆயுதம் தரித்த 50ற்கும் மேற்பட்ட ஈபிடிபி உறுப்பினர்கள் நிலைகொண்டிருந்ததாகவும், இவர்களது நிலைபற்றி எதுவித தகவல்களும் தெரியவில்லை எனவும் அங்கிருந்துகிடைக்கும் செய்திகள் மேலும் விபரம் தருகின்றன. தாக்குதலின் பின் முகாமிலிருந்த ஆயுதங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

எனினும் தமது உறுப்பினர்களில் எவரும் ஆயுதம் தரித்து

(☞ 2ம் பக்கம்)

## பிரித்தானியா பாராளுமன்ற உறுப்பினரின் மத்தியஸ்த அறிவிப்பு நிராகரிப்பு

பிரித்தானிய லிபரல் டெமோகிரட்டிக் கட்சியை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினரான சிமோன் கூகேஸின் மத்தியஸ்த முயற்சியினை சிறீலங்கா அரசு நிராகரித்துள்ளது.

சிறீலங்கா அரச பிரதிநிதிகளையும் வன்னியுள்ள விடுதலைப் புலிகளையும் இவர் சந்திக்க விருப்பம் கொண்டுள்ள போதிலும் சிறீலங்கா அரசு இவரை சந்திக்க மறுப்பு தெரிவித்ததுடன் வன்னிக்கு செல்வதற்கான அனுமதியையும் மறுத்துள்ளது.

எதிர்வரும் புத்தாண்டு காலப் பகுதியில் இவர் கொழும்பு செல்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## புலிகளின் தாக்குதல்
## 4 பெரிய கலங்கள் இழப்பு 38 கலங்கள் கடும் சேதம்

தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதல் காரணமாக இவ் வருடத்தில் தமது பாரிய கலங்களான பப்தா, வலம்புரி, P-195, P-498 ஆகியன இழக்கப்பட்டிருக்கின்றன எனவும், வேறு 38 கலங்கள் கடும் சேதத்திற்கு உள்ளானதாகவும் சிறீலங்கா கடற்படை அறிவித்துள்ளது.

இத் தாக்குதல்களில் கொல்லப்பட்ட கடற் படையினர் போக மேலும் 64 பேர் காணாமற் போயுள்ளனர் எனவும் 94 பேர் படுகாயமடைந்துள்ளனர் எனவும் தெரிவித்துள்ளது.

வாசகர்களுக்கு 1999 எமது புதுவருட வாழ்த்துக்கள்



## ஜெயலலிதாவிற்கு எதிராக வை.கோ எதிர்ப்புக்குரல்

(28.12.98)

ஜெயலலிதா ஆட்சிக்காலத்தில் இடம் பெற்ற ஊழல் புகார்கள் குறித்து விசாரிக்கும் தனி நீதிமன்றங்களை அமைக்கும் அதிகாரம் குறித்த மத்திய அரசின் உடன்பாட்டில் ம.தி.மு.க விற்கு உடன்பாடு இல்லை என ம.தி.மு.க பொதுச் செயலாளர் வை. கோபால்சாமி தெரிவித்துள்ளார்.

ஞாயிற்றுக் கிழமை வேலூரில் இடம்பெற்ற ம.தி.மு.க பொதுக்குழு கூட்டம் தொடர்பாக செய்தியாளர்களை சந்தித்தபோதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தமிழக அரசைக்கலைக்கக் கோரி அ.தி.மு.க மக்களவை உறுப்பினர்கள் குடியரசுத் தலைவரிடம் மனு கொடுத்துள்ளனர். அரசியல் சட்டத்தின் 356 வது பிரிவை ரத்துசெய்ய வேண்டும் என இக் கூட்டத்தில் ம.தி.மு.க தீர்மானம் நிறைவேற்றியுள்

(☞ 2ம் பக்கம்)

வாடிக்கையாளர், நண்பர்கள் அனைவருக்கும் எமது புதுவருட வாழ்த்துக்கள்

Kumars Shop
S. A. R. L.
80, Bld. Barbes, 75018 Paris. M°: Marcadet Poissonniers
Tél: 01 42 59 35 10 / Fax: 01 42 59 35 00



Singapore Exchange Co.
90, Bld. Rochechouart,
75018 Paris. Mo: Anvers ou Pigalle
Tel: - Fax: 01 42 23 03 10
ou 01 42 59 53 91

தமிழ் மக்களின் இதயநாதமாய் என்றும் முழங்குவது ஈழமுரசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழமுரசு
Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris.

**RCS PARIS**
B 399 673 110 (95B01491)

**Directeur de la publication:**
P. Velupillai

**Redacteur:**
P. Sivaguru

**Impression:**
IMPRIMERIE MEAULLE

நிர்வாகி:
ப. வேலுப்பிள்ளை

நிறுவக ஆசிரியர்:
அமரர் க. கஜேந்திரன்

ஆசிரியர்:
பி.சிவகுரு

தபால் தொடர்புகளுக்கு:
EELAMURASU
22, Rue Perdonnet,
75010 Paris,
France
E.Mail-eelamurasu@aol.com

விளம்பர விநியோக தொடர்புகட்கு:

பாரிஸ்:
TeL: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

ஜேர்மனி:
**Leama**
**Tel: 0208 2053650**
**Fax: 0208 2053651**

டென்மார்க்:
T. சுரேஸ்காந்த்
Møller vcj - 23
5800 Nyborg, Denmark.
Tel: 65316155 - Fax: 65302588

சுவிஸ்: மக்கள் கடை
Verlag: People Shop
Henrich Str-85; 8005 Zürich.
Druckerci: Frankreich.
Tel: 01-271 7374

லண்டன்:
ஜெயந்தன்: - Tel: 0956908145
குணம்: - Tel: 0956277718

இத்தாலி:
மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056

நோர்வே:
JAFFNA FOOD -
Tel: 22425527

நெதர்லாந்து:
த.லிங்கரட்ணம்
Tel: 076 5425804

# சர்வதேச ஸ்கந்த முருகன் மாநாடு

(28.12.98)

முதலாவது சர்வதேச ஸ்கந்த முருகன் மாநாடு இன்று காலை சென்னையில் ஆரம்பமாகின்றது. இன்றிலிருந்து நான்கு நாட்கள் இம் மாநாடு தொடர்ச்சியாக நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாநாட்டில் கலந்துகொள்ள பல முக்கிய பிரமுகர்கள் பல்வேறு நாடுகளில் இருந்து சென்னை சென்றுள்ளனர். இம் மாநாட்டில் ஸ்கந்த முருகன் பற்றிய ஆய்வுகள் நடைபெறும்.

# கூட்டணிப் பிரமுகர் பொன். மதிமுகராஜா சுட்டுக்கொலை

தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ்.மாவட்டச் செயலாளரும் எம்.ஜி.ஆர். பேரவை தலைவருமான பொன். மதிமுகராஜா கடந்த சனியன்று யாழ்ப்பாணத்தில் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

நல்லூர் கந்தசாமி கோவில் பின்வீதியில் நடைபெற்ற முன்னாள் தமிழக முதலமைச்சர் எம்.ஜி.ஆர் நினைவுதின கூட்டத்திலேயே இனம் தெரியாத துப்பாக்கி நபர் ஒருவர் மதிமுகராஜா மீது துப்பாக்கிப் பிரயோகத்தினை மேற்கொண்டுவிட்டுத் தப்பிச்சென்றுவிட்டார்.

பிற்பகல் 4.00 மணியளவில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது. குண்டுகள் தலையிலும் மார்பிலும் பாய்ந்த நிலையில் இவர் வீழ்ந்து சிறிதுநேரத்தில் இறந்துவிட்டார்.

இச் சம்பவத்தில் வேறு எவரும் காயமடையவில்லை.

# 'கென்பாம்' முகாமில் குண்டு வெடிப்பு அதிகாரி பலி

(28.12.98)

சிறீலங்கா இராணுவம் ஆக்கிரமித்துள்ள மணலாற்று பகுதியில் உள்ள கென்பாம் இராணுவ முகாமில் கடந்த வியாழனிரவு குண்டு வெடிப்பு சம்பவமொன்று இடம் பெற்றுள்ளது. இக் குண்டுவெடிப்பின் காரணமாக படை அதிகாரி ஒருவர் கொல்லப்பட்டுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இக் குண்டு வெடிப்பின் காரணம் என்னவென்று இதுவரை தெரிவிக்கப்படவில்லையாயினும். முகாமிற்கு வெளியிலிருந்து அனுப்பப்பட்ட பொருட்களுள்ளே குண்டும் வைக்கப்பட்டிருக்கலாமெனவும் கருதப்படுகிறது.

இக் குண்டு வெடிப்பின் காரணமாக முகாமின் சில பகுதிகளும் சேதத்திற்கு உள்ளாகியுள்ளது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
## 130 கோடி...

இராணுவத்தின் பீரங்கிப்பலத்தை எடுத்து ஆராயின் 80000 குண்டுகளை மாத்திரமே வீசமுடியும் என தெரிவித்துள்ளார். எனவே புதிய பீரங்கி கொள்வனவில் சிறீலங்கா அரசு ஈடுபடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
## ஜெயலலிதாவுக்கு...

ளது. மத்திய அமச்சரவை விரிவாக்கத்தின் போது ம.தி.மு.க சார்பில் செஞ்சி ராமச்சந்திரனைச் சேர்த்துக் கொள்ளப் பரிந்துரை செய்துள்ளோம். அமைச்சரவையில் நான் பங்கேற்பதில்லை என்ற முடிவில் எவ்வித மாற்றமும் இல்லை என வை.கோ தெரிவித்தார்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
## புலிகளுக்கு...

குறிக்கோள் அல்ல. அவர்கள் தமக்கு சரியெனப்பட்ட நோக்கம் ஒன்றிற்காக போராடுகின்றனர். புலிகளை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதற்காகவே நாம் போராடுகிறோம். அல்லது புலிகள் ஈழக்கோரிக்கையை கைவிட்டுவிட்டு பேச்சுவார்த்தையூடான தீர்வுக்கான சாதகமான அணுகுமுறையை கையாளவேண்டும் எனக் கூறிய அவர், புலிகளின் கிளிநொச்சி நடவடிக்கை 'செய் அல்லது செத்துமடி' நடவடிக்கையாகும். எனினும் பாரிய மனித இழப்பை அவர்கள் பெற்றுக்கொண்டனர் எனவும், புலிகளுக்கு ஆட்களை இழப்பதும் தமக்கு நிலத்தை இழப்பதும் பிரதானமான பிரச்சினைக்குரிய விடயங்கள் எனத் தெரிவித்துள்ளார்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
## சிறீலங்கா...

இயங்கி தமிழர்கள் பற்றிய குறிப்பாக புலிகள் பற்றிய தகவல்களை திரட்டி வழங்குவதே இவருக்கு இடப்பட்ட பணியாகும்.

சிறீலங்காவின் வெளிவிவகார உளவுத்துறையாக இவ் வருடம் புதிதாக உருவாக்கப்பட்ட டி.எப்.ஐ. முன்னாள் பொலிஸ் ஆணையாளர் பிராங் சில்வா தலைமையில் இயங்கிவருகிறது. சிறீலங்காவின் பாதுகாப்பு ஆணைக் குழு மற்றும் ஜனாதிபதிக்கு மட்டுமே கட்டுப்பட்ட இப் பிரிவு தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச நடவடிக்கைகளை கண்காணிப்பதிலும், எதிர் நடவடிக்கைகளை திட்டமிடுவதிலும் பங்கேற்று வருகிறது.

பல்வேறு நாடுகளில் உள்ள சிறீலங்கா தூதுவரங்களில் வெவ்வேறு பெயர்களில் இவ் உளவு அதிகாரிகள் இயங்கி வருகின்றனர்.

தாம் வெளிநாடுகளில் திரட்டும் தகவல்களை இவ் உளவு நிறுவனம் சிறீலங்காவின் முதன்மை உளவு அதிகாரியான சிறில் ஹெரத் ஊடாக இராணுவத் தலைமையிற்கு வழங்கிவருகின்றது.


(1ம் பக்கத் தொடர்ச்சி)
## நெடுந்தீவில்...

நெடுந்தீவில் தங்கியிருக்கவில்லை எனவும், புலிகள் தமது உறுப்பினர்களை தாக்கவில்லை எனவும் ஈபிடிபி டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். தமது குழு சிறீலங்கா படையினருடன் சேர்ந்து பணியாற்றவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நெடுந்தீவு தாக்குதல் தொடர்பான உத்தியோகபூர்வ செய்திகளை விடுதலைப் புலிகள் இதுவரை வெளியிடவில்லை. கொழும்பு செய்திகளை மேற்கோள் க்காட்டி புலிகளின் குரல் வானொலி தாக்குதல் பற்றிய மேலோட்டமான செய்திகளையே வெளியிட்டுள்ளது.

பாரிஸ் தமிழர் கல்வி நிலையத்தின்
12வது ஆண்டு நிறைவு விழா
காலம்: 03.01.99 ஞாயிறு
நேரம்: பி.ப 3.00மணி
இடம்: 199 Bis Rue Saint Martin, 75003 PARIS.
M°: Etienne Marcel
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

கடை விற்பனைக்கு
Aubervilliers Quatre Chemins மெற்றோவுக்கு அருகாமையில் உள்ள மளிகைக்கடை விற்பனைக்கு உண்டு
தொடர்புகட்கு:
T.P: 0607185901 / 0141713470

சிவாசினி வாகன சேவை
Chivashini Transport
வாகன தேவைகளுக்கு 24 மணி சேவை
தொடர்புகட்கு: ஜெயா
0614616984 / 0611289118 /
0614424117 / 01 42 05 44 04
டிஸ்னி றெஸ்றோறன்ட்

Pub

ERRANCES TRAVELS
Tel: 01 42 09 70 00
Fax: 01 42 09 53 39
55, Rue Louis Blanc,
75010 Paris.
M°: La Chapelle ou Louis Blanc
à partir de

| | | |
|---|---|---|
| Bombay | - | 3,900 Frs. |
| Delhi | - | 3,900 Frs. |
| Bangkok | - | 3,400 Frs. |
| Colombo | - | 3,900 Frs. |
| Singapour | - | 3,980 Frs. |
| Madras | - | 4,300 Frs. |
| Londres | - | 790 Frs. |
| New york | - | 2,300 Frs. |
| Montreal | - | 2,800 Frs. |
| Oslo | - | 2,010 Frs. |
| Toronto | - | 2,800 Frs. |
| Nepal | - | 4,820 Frs. |

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது
Li: 075 95 01 37
(ADV)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில் காணாமல்போன இளைஞர்கள்
## சர்வதேச மன்னிப்புச்சபை கவலை!

வவுனியா மாவட்டத்தில் கடந்த ஒக்டோபர் 27ம் திகதி தொடக்கம் கடந்த திங்கட்கிழமை வரை காணாமல்போன 8 இளைஞர்கள் தொடர்பாக சர்வதேச மன்னிப்புச்சபை கவலையை வெளிப்படுத்தியுள்ளது.

கடத்தப்பட்டவர்களில் 4 பேர் பராயமடையாதவர்கள் என்று குறிப்பிட்ட மன்னிப்புச் சபை, இவர்களைக் கடத்தியவர்கள் புளொட் குழுவினரும் சிறீலங்கா இராணுவத்தினரும் எனத் தெரிவித்துள்ளது.

கடந்த 27ம் திகதி சிதம்பரபுரத்தில் வசிக்கும் வீரையா உதயகுமார் என்பவரை அவரது வீட்டிலிருந்து புளொட் உறுப்பினர்கள் அழைத்துச்சென்றனர். அதே தினம் லக்ஷ்மன் கேதீஸ்வரன் என்பவரும் புளொட் உறுப்பினர்களால் கைது செய்யப்பட்டார். நவம்பர் 4ம் திகதி நடராஜன் இராஜரட்ணம் என்பவர் சிதம்பரபுரத்திலுள்ள அவரது வீட்டிலிருந்து புளொட் உறுப்பினர்களால் கைதுசெய்யப்பட்டார். இவர்கள் அனைவரும் புளொட்டின் கோவில்குள முகாமிற்குக் கொண்டுசெல்லப்பட்ட போதிலும் புளொட் உறுப்பினர்கள் இக் கைதுகள் பற்றி மறுத்துள்ளனர்.

தமிழகத்திலிருந்து மீண்டும் வரும் அகதிகளை தங்கவைப்பதற்கெனவே சிதம்பரபுரமுகாம் உருவாக்கப்பட்டது. அவ்வாறான இடத்திலிருந்து இளைஞர்கள் கைது செய்யப்பட்டு சட்டபூர்வமற்ற இடங்களில் தடுத்துவைக்கப்படுவது குறித்து சர்வதேச மன்னிப்புச்சபை தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளது. கடந்த செப்டெம்பர் மாதம் சர்வதேச மன்னிப்புச் சபையின் தூதுக்குழு வவுனியாவிற்குச் சென்றபோது அங்கு இவ்வாறான இரு முகாம்கள் இயங்குவதற்கான சான்றுகளை கண்டுள்ளனர்.

இதேவேளை சிறீலங்காப் படையினரால் கைதுசெய்யப்பட்டு காணாமல்போன குணகுலராஜா தனுசன், பாக்கியரட்னம் யோகேஸ்வரன், மயில்வாகனம் ஜெயசீலன் என்பவர்களின் நிலை குறித்தும் மன்னிப்புச்சபை தனது கவலையைத் தெரிவித்துள்ளது.

## 'இராணுவத்திற்கு வந்த பொதிகள்' நால்வர் கைது!

இராணுவத்தினரின் பெயருக்கு டுபாயில் இருந்து அனுப்பப்பட்ட 39 பொதிகள் கட்டுநாயக்கா விமானநிலைய சுங்கப் பகுதியினரால் கைப்பற்றப்பட்டதையடுத்து இதுவரை 6 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், சிப்பாய் ஒருவர் உட்பட மேலும் இருவர் தேடப்பட்டு வருகின்றனர்.

சிறீலங்கா இராணுவம் என முகவரி இடப்பட்டுவந்த இப் பொதிகள் சுங்கப் பகுதியினரால் கைப்பற்றப்பட்டதுடன், அவற்றில் இருந்து ஒருகோடிரூபா பெறுமதியான சிகரெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இது தொடர்பாக புறக்கோட்டை வர்த்தகர்கள் உட்பட அறுவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இதற்கு முன்னரும் 10 தடவைகள் இராணுவத்தின் பெயரில் பொதிகள் அனுப்பப்பட்டதாகவும் சுங்கப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

## மருதானைப் பொலிஸ் நிலையம் முன்பாக ஐ.தே.க. மறியல்

சிறீலங்காவின் வடமேல் மாகாணசபைத் தேர்தல் நடக்க இருக்கும் பகுதிகளில் பொ.ஐஐ. முன்னணி ஆதரவாளர்களுக்கும் ஐ.தே.க ஆதரவாளர்களுக்கும் இடையில் மோதல் சம்பவங்கள் எழுந்துவருகின்றன. இம் மோதல்களுக்கும் பொ.ஐஐ. முன்னணியே காரணம் எனவும் தோல்வியைத் தழுவுவது நிச்சயம் என தெரிந்த காரணத்தால் தான் அவர்கள் அவ்வாறு மேற்கொள்ளுகிறார்கள் எனவும் ஐ.தே.க ஆதரவாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தேர்தல் களத்தில் தனது குண்டர்களைவிட்டு அரசு தாக்குதல் நடாத்துவதைக் கண்டித்து ஐ.தே.கட்சியினர் கடந்த வியாழக்கிழமை (24) மாலை மருதானை பொலிஸ் நிலையம் முன்பாக திடீர் மறியல் போராட்டம் ஒன்றினை நடாத்தினார்கள். அரசின் தாக்குதல்களுக்கு பொலிசாரும் உதவி செய்வதாகவே இவர்கள் இம் மறியல் போராட்டத்தை நடாத்தினர். சுமார் 1000 இற்கும் மேற்பட்டோர் இம் மறியல் போராட்டத்தில் கலந்துகொண்டனர். மறியல் போராட்டத்தின் முடிவில் ஐ.தே.கட்சி பிரமுகர்கள் பலர் உரையாற்றினர்.

## இருபாலையில் யுவதியின் சடலம்

நிர்வாணமான நிலையில் இருந்த இளம் பெண்ணின் சடலமொன்று இருபாலைப் பகுதியில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

கழுத்தில் கறுத்த கயிறு கட்டப்பட்ட நிலையில் பற்றையொன்றின் பின்னால் இச் சடலம் பொதுமக்களினால் கண்டெடுக்கப்பட்டுள்ளது. முகம் அடையாளம் காண முடியாதவாறு இருந்ததாகவும் இச் சடலத்தை கண்டெடுத்தவர்கள் தெரிவித்துள்ளனர். இப்பெண் கொலை செய்யப்பட்ட பின்னர் இப் பகுதியில் வீசி எறிந்திருக்கலாம் எனவும் இப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ். குடாவில் கடந்த சில தினங்களாக பாலியல் வல்லுறவுகளும், கொலைகளும் மிக அதிகளவில் நடந்து வருவது குறிப்பிடத்தக்கது.

## மன்னார் கரையில் ஒதுங்கும் சடலங்கள்

மன்னார் கடற்பகுதியில் கடந்தவாரத்தில் 3 சடலங்கள் கரையொதுங்கியுள்ளன. காலொன்று முறிந்த நிலையில் மிக மோசமாக சிதைவடைந்த நிலையில் ஆணொருவரின் சடலம் பேசாலைக் கடற்கரையில் கரையொதுங்கியுள்ளது. பின்னர் அச் சடலம் அடையாளம் காண்பதற்காக மன்னார் வைத்தியசாலைச் சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மேலும் இரு சடலங்கள் எரிக்கரம்பிட்டிப் பகுதியில் கரையொதுங்கியுள்ளது. இச் சடலங்களும் அடையாளம் காண்பதற்காக மன்னார் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

## வவுனியாவில் ஆயுத முனையில் கொள்ளை

வவுனியா நீர்ப்பாசன திணைக்களத்தில் ஆயுதபாணிகள் சிலர் நடாத்திய கொள்ளைச் சம்பவமொன்றில் ஐம்பத்தியோராயிரம் ரூபா கொள்ளையடித்துச் செல்லப்பட்டுள்ளது.

பகல்வேளையில் ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கிக்கொண்டிருந்தபோதே திடீரென அங்கு இரு ஆயுத பாணிகள் வந்து காசாளரை மிரட்டி மேற்படி பணத்தைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

## கண்ணிவெடியில் பலியான பொதுமக்கள் ஒரே இடத்தில் தகனம்

நெடுங்கேணிப் பகுதியில் கடந்தவாரம் திங்கட்கிழமை இடம்பெற்ற கண்ணிவெடிச் சம்பவமொன்றில் கொல்லப்பட்ட 5 பொது மக்களின் இறுதிக் கிரியைகள் ஒரே இடத்தில், ஒரே நேரத்தில் இடம்பெற்றுள்ளன. நெடுங்கேணி முல்லைத்தீவு வீதியில் 8ம், 9ம் கட்டைப் பகுதிகளில் உள்ள தங்களது நெல்வயல்களைப் பார்க்கச் சென்றபோதே இராணுவத்தினரின் கண்ணிவெடித் தாக்குதலுக்கு பலியாகினர். இச் சம்பவத்தினை அடுத்து இப் பகுதி மக்கள் மத்தியில் அச்சமும், பீதியும் உருவாகியுள்ளது.

தங்களுடைய வயல்களுக்குச் செல்வதற்கு பல விவசாயிகள் அச்சம்கொண்டுள்ளதால் பல் வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் செய்கை பண்ணப்பட்ட நெற்செய்கை மிகவும் பாதிப்படைந்துள்ளது.

## புலிகளிடம் இருப்பது உக்ரேயின் ஹெலியாம்

விடுதலைப் புலிகளின்வசம் இருப்பது உக்கிரேயின் நாட்டு ஹெலிக்கொப்டர்களென . சிறீலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. உக்கிரேயின் நாட்டிலுள்ள தனியார் ஆயுத வியாபாரிகளிடமிருந்து புலிகள் இவற்றைக் கொள்வனவு செய்திருக்கலாம் எனவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

கொள்வனவு செய்யப்பட்ட இக் ஹெலிகளை தென்னாபிரிக்காவிலுள்ள ஆயுதத்தரகர்கள் மூலம் புலிகள் வன்னிக்குக் கொண்டுவந்ததாகவும் அச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## யாழ்.குடாவில் நத்தார் நள்ளிரவு ஆராதனை இல்லை

யாழ்.குடாநாட்டில் நத்தாரை முன்னிட்டு இரவு நேர ஊரடங்குச்சட்டம் தளர்த்தப்படமாட்டாதென படைத்தரப்பினர் தெரிவித்ததையடுத்து, குடாநாடுகளில் உள்ள தேவாலயங்களில் இம்முறை நள்ளிரவு நத்தார் ஆராதனைகள் நடைபெறவில்லை.

வெள்ளிக்கிழமை காலையிலேயே தேவாலயங்களில் நத்தார் ஆராதனைகள் நடாத்தப்பட்டன.

ஈழவர் விளையாட்டுக் கழகம் - பிரான்ஸ்
நடாத்தும்
ஈழவர் கலைமாலை-99

நிகழ்ச்சிகள்
பரதநாட்டியம், மேற்கத்தேய நடனம், தாளலயம், நகைச்சுவை நாடகம், இசை நிகழ்ச்சி

காலம்: 10.01.1999 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: மாலை 4.00 மணி (நேரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் நிகழ்ச்சிகள் குறித்த நேரத்திற்கு ஆரம்பமாகும்)
இடம்: ESPACE SAINT-MARTIN
199bis, Rue Saint Martin, 75003 Paris - Métro: Etienne Marcel

மேலதிக விபரங்களுக்கு:
01 39 83 78 25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் உரிமையுடன் வாழ உதவ முன்வாருங்கள்

## தென்னாபிரிக்கா குழுவுக்கு வன்னியில் இருந்து மனு

தமிழ் மக்களாகிய நாம் சுய நிர்யண உரிமையுடனும் கௌரவத்துடனும் எம் தாயகத்தில் வாழ்வதற்குரிய வழியை உருவாக்குவதற்கு உதவுமாறு வன்னியில் இயங்கிவரும் இடம்பெயர்ந்த மக்கள் நலன்காப்பகம் தென்னாபிரிக்கப் பாராளுமன்றக் குழுவிற்கு கோரிக்கைவிடுத்துள்ளது.

இது சம்பந்தமாக அவ் அமைப்பு தென்னாபிரிக்கத் தூதுக்குழுவிற்கு முறையீட்டு மனு ஒன்றினையும் அனுப்பிவைத்துள்ளது. அம் மனுவில் சிறீலங்காவின் இன நெருக்கடியான பாதிப்புக்களை நேரில் பார்வையிட வந்துள்ள தாங்கள் இங்குள்ள உண்மை விபரங்களை கண்டிருப்பீர்கள் என நம்புகிறோம். சிறீலங்கா அரசின் பெரும்போர் நடவடிக்கையும் பொருளாதாரத் தடைகளும் பெரும் இன்னலை ஏற்படுத்தும் வன்னிப் பகுதிக்கும் விஜயம் செய்வீர்கள் என எதிர்பார்த்தோம் ஆனாலும் நீங்கள் வன்னிப் பகுதிக்கு விஜயம் செய்யாதமை குறித்து பெரும் ஏமாற்றம் அடைந்தோம். ஆயினும் வன்னியில் இடம்பெயர்ந்து வாழும் 5 இலட்சம் மக்களின் ஏக்கங்களையும் எதிர்பார்ப்புக்களையும், தங்களிடம் நேரில் தெரிவிக்க இருந்த விடயங்களையும் சுருக்கமாக இந்த முறையீட்டு மனுமூலம் விளக்குகிறோம்.

இன அழிப்பிற்கான இராணுவ நடவடிக்கையை உடன் நிறுத்தி அப்பாவி மக்களின் உயிர்களைக் காப்பாற்ற நீங்கள் முன்வரவேண்டும். மனித குலத்தின் சமாதான சகவாழ்வை உறுதிப்படுத்தும் உன்னத நோக்குடன் அடக்கி ஒடுக்கப்படும் இனங்களின் விடுதலைக்காக குரல்கொடுத்துவரும் தென்னாபிரிக்க ஜனநாயக குடியரசானது தேசிய இனமாகிய எம்மையும் எமது அரசியல் சமூக பொருளாதார விழுமியங்களையும் அறிந்திருக்கும்.

ஆனால் கடந்த நான்கு தசாப்த காலமாக அரசியல் பொருளாதார சமூக பண்பாட்டு ரீதியாக சிறீலங்கா அரசின் திட்டமிட்ட இனவாத அரசியல், இராணுவ நடவடிக்கையால் பெரும் இன்னல் அடைந்து வருகின்றோம். தனிமனித சுதந்திரம், உயிர்வாழும் உரிமை, உணவு, சுகாதாரம், கல்வி, இருப்பிடம் ஆகிய அடிப்படை உரிமைகள் கூட மறுக்கப்பட்ட துன்பத்தின் உச்ச நிலையில் நாம் வாழ்ந்து வருகின்றோம்.

இந்த அவல நிலைகள் பற்றி காலத்திற்குக் காலம் சர்வதேச சமூகத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தபோதிலும் சிறீலங்கா அரசு மேலும் மேலும் எம் மீது இராணுவ அழுத்தங்களைப் பிரயோகித்து வாழும் உரிமையை மறுத்து நிற்கிறது. அரச பயங்கரவாத நடவடிக்கைகளினால் ஐம்பதினாயிரத்திற்கும் மேற்பட்ட அப்பாவி தமிழ் மக்கள் கொல்லப்பட்டார்கள்.

அதே அளவான மக்கள் அங்கவீனமாக்கப்பட்டார்கள். பாலியல் வல்லுறவுகள் கொலைகள் என்பவற்றுடன் பெரும் சொத்தழிவுகளும் எமக்கு ஏற்பட்டுள்ளது. பல இலட்சம் மக்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளனர். சமாதானத்திற்கான போர் எனச் சொல்லிக்கொள்ளும் சிறீலங்கா அரசு தமிழினத்தை அழித்தொழிக்கும்வரை போரை நிறுத்துவதில்லை என்ற முனைப்போடு செயற்பட்டு வருகிறது.

சிறீலங்கா அரசின் மீதும் அதன் ஜனாதிபதிமீதும் எமக்கு நம்பிக்கை இல்லை. ஆனால் ஒடுக்கப்பட்ட மக்களிற்காக உழைக்கும் தென்னாபிரிக்க தலைமை மீது நாம் மிகுந்த நம்பிக்கை வைத்துள்ளோம். தமிழ் மக்களாகிய நாமும் உலகின் ஏனைய மக்களைப்போல அடிப்படை மனித உரிமைகளுடனான சுயநிர்ணய உரிமையுடன் வாழ்வதற்குரிய சூழலை காலதாமதமின்றி உருவாக்க முயற்சி மேற்கொண்டு எமது மக்கள் கௌரவத்துடனும், பாதுகாப்புடனும் தமது தாயகத்தில் வாழ வழியை உருவாக்கித் தருவீர்கள் என நம்புகிறோம். இவ்வாறு அம் முறையீட்டு மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஆட்டின் மீது பரிவு! தமிழன் மீது வெறி

வாழைச்சேனை இராணுவ காவலரணில் கடமைக்கு நின்ற சிப்பாய் ஒருவர் பேருந்துச் சாரதியான கந்தையா கோபாலசிங்கம் என்பவரை மூர்க்கத்தனமாக தாக்கிய சம்பவம் கடந்தவாரம் நடைபெற்றுள்ளது.

மேற்படி சாரதி தனது பேருந்து வண்டியினை செலுத்திக் கொண்டு வந்தவேளை இராணுவக் காவலரணுக்கு அருகே நின்ற ஆடொன்று பேருந்துக்கு முன்னால் பாய்ந்ததன் காரணமாக சிறிதளவு காயங்களுக்கு உள்ளதானது.

இச் சம்பவத்தை அவதானித்த சிப்பாய் சாரதியை பேருந்திலிருந்து இழுத்தெடுத்து மிக மூர்க்கத்தனமாக தாக்கியுள்ளார்.

சாரதி தாக்கப்பட்டுக் கொண்டிருந்தவேளை அவ் வழியே இராணுவப் பொலிசார் வந்துள்ளனர். அவர்கள் இச் சம்பவத்தை கண்ணுற்று சிப்பாயிடம் சாரதியை தாக்குவதற்கான காரணத்தை வினாவியுள்ளனர். சாரதியும் சிப்பாயும் நடந்ததை கூறவே, சிப்பாய் மிக அதிகளவான போதையில் உள்ளதை கண்ணுற்ற இராணுவ பொலிசார் சிப்பாய் அருந்தும் நீர்ப் போத்தலை சோதனை செய்த போது அதற்குள்ளே கசிப்பு இருப்பதை கண்டுபிடித்தனர்.

இதன்பின்னர் இராணுவப் பொலிசார் சிப்பாயை தாக்கியுள்ளனர். ஆனாலும் ஒரு ஆட்டிற்காக மூர்க்கத்தனமான தாக்குதலுக்கு உள்ளான சாரதி வாழைச்சேனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## ஏறாவூர்நகரில் தாக்குதல்

கடந்த 25-ம் திகதி காலை எட்டு மணியளவில் ஏறாவூர் நகரிலுள்ள வம்மியடிப் பகுதியில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதல் ஒன்றில் சிறீலங்கா பொலிசார் ஒருவர் பலியாகியும் மேலும் இருவர் படுகாயப்படுத்தப்பட்டுள்னர்.

ரோந்து சென்ற பொலிஸ் அணி மீது விடுதலைப் புலிகள் கிளைமோர் தாக்குதலை நடாத்தியதுடன், தன்னியக்க ஆயதங்களாலும் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

இந்த பொலிஸ் அணி மீது தாக்குதல் நடாத்தப்பட்ட வேளை அவ்வழியால் இராணுவத்தினரும் தமிழ்க் குழுக்களும் வந்த போதிலும் தாக்குதல் பற்றிய செய்தி அறிந்ததும் உடனடியாக முகாங்களுக்குத் திரும்பி விட்டனர்.








எங்கும்
கிடைக்கிறது

*Marketed & Distributed by*
**Ayngaran Limited**
172, Woodmansterne Road,
London SW16 5TZ,
United Kingdom.
Tel: 0181 7645200
Fax: 0181 764 5255
*E-mail:*
*bhasky@aol.com*

நத்தார், புதுவருடத்தை
முன்னிட்டு மலிவுவிலை
செய்யவிருக்கும் வியாபாரிகள்
எம்முடன் தொடர்புகொள்ளவும்.

விரைவில்...







போலி CD க்களை வாங்கி ஏமாறாதீர்கள். Bhasky முத்திரைகளை கவனித்து வாங்குங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15வது வாரமாக பிரித்தானியப் பிரதமரின் வதிவிடத்தின் முன்பாக நத்தார் தினத்தன்று நடைபெற்ற எழுச்சிமிகு விழிப்புப் போராட்டம்!

## பட்டினிச் சாவை நோக்கி வாழ்க்கைப் பயணத்தைத் தொடரும் வன்னி மக்களின் நிலை!

*(25.12.1998)*

தோல்வி பெற்ற 'வெற்றி நிச்சயம்' என்ற பாரிய இராணுவத் தாக்குதலின் மத்தியில் தமிழ் பகுதிகள் மீதான சிறீலங்கா அரசின் திட்டமிட்ட உணவு நிவாரண வெட்டால், வன்னியில் உள்ள மக்களின் நிலை நாளுக்குநாள் தொடர்ந்து கவலைக்கிடமாகி வருகின்றது. அரச படையினரின் தொடர் இராணுவ நடவடிக்கைகள், விமானக்குண்டு வீச்சுக்கள், எறிகணைத் தாக்குதல்கள் காரணமாக தொடர்ச்சியான இடப் பெயர்வினால் தமது சொந்த இடங்களிலிருந்து இடம் பெயர்ந்து தொழில்வாய்ப்புக்கள் ஏதுமின்றி நிவாரண உதவிகளை மட்டுமே நம்பியிருந்த மக்களின் வயிற்றில் அடிப்பது போன்றே சிறீலங்கா அரசின் நடவடிக்கைகள் அமைந்துள்ளதாகப் பல அறிக்கைகள் தெரிவிக்கின்றன. தற்போது நடந்த 'ரிவி பல' என்ற சிறீலங்காவின் புதிய இராணுவ நடவடிக்கைகளால் மேலும் 15,000 பொது மக்கள் இடம் பெயர்ந்துள்ளார்கள். தொடரும் மனித நேயமற்ற நடவடிக்கைகள் தமிழ் மக்களின் பொறுமையின் எல்லைகளை சோதிப்பது போலுள்ளது. இதனால் தமிழ் மக்கள் மென்மேலும் சிறீலங்கா அரசிடமிருந்து தம்மை அந்நியோன்னியப்படுத்திக் கொள்ளுகிறார்கள் எனப் பல சர்வதேச அமைப்புகள் அறிவிக்கின்றன.

வன்னியில் மக்கள் நடாத்தி வரும் தொடர்ச்சியான மறியல் உண்ணாவிரதப் போராட்டத்திற்கு ஆதரவாகவும் இந்த மனித அவலத்தை உலகிற்கு எடுத்துக் காட்டும் முகமாகவும் 15 வது வாரமாக 25.12.1998 அன்று நத்தார் தினமான வெள்ளிக்கிழமை பிரித்தானியப் பிரதமமந்திரியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தின் முன்பாக விழிப்புப் போராட்டம் மதியம் 12 மணிக்கு ஆரம்பித்து மாலை 4 மணிவரை நடைபெற்றது.

மாலை 3 மணியளவில் பிரித்தானிய பிரதமருக்கான மனுவொன்றும் இலண்டனின் நான்கு பிராந்திய மனித உரிமை அமைப்புகளும், தமிழர் மனித உரிமை மைய பிரித்தானிய இணைப்பாளர், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பிரித்தானியப் பொறுப்பாளர் தமிழ்ச் சங்கங்கள் கையெழுத்திடப்பட்ட மனுவொன்றும் கையளிக்கப்பட்டது. இதில் வன்னி மக்களின் நிவாரணவெட்டு அர்சினால் இன்னமும் நடைமுறையில் உள்ளது எனவும், அரசு உணவையும் மருந்தையும் ஆயுதமாகப் பாவிப்பதை உடனடியாக தடுப்பதற்கு சிறீலங்காவிற்கு மிக உறுதியாக அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளதுடன், உணவு மருந்துகள் தாமதமின்றி அவர்களுக்குச் செல்வதற்குரிய நடவடிக்கைகள் துரிதமாக எடுக்கப்பட வேண்டும் எனவும்; செம்மணி புதைகுழிகள் உடனடியாகத் தோண்டப்பட்டு காணாமல் போனவர்களை அடையாளம் காணும் சர்வதேச வல்லுனர்களுக்கு பாதுகாப்பு அரசு வழங்கவேண்டும்; மற்றும் சகலவிதமான மனித உரிமைகள் மீறப்படுவதை உடன் நிறுத்த வேண்டும் எனவும் மனிதநேயமற்ற முறையில் மனித வர்க்கத்தை அழிக்கும் இராணுவத் தளவாடங்களை சிறீலங்காவிற்கு விற்பதை உடன் நிறுத்தப்பட வேண்டும் எனவும்; மூன்றாந்தர மத்தியஸ்தரின் உதவியுடன் சிறீலங்கா அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளும் பேசித் தமிழரின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் நீதியான நிலையான சுதந்திரமுள்ள சமாதான தீர்வு வர பிரித்தானியா அரசு முயற்சி எடுக்கவேண்டும் எனவும் அம் மனுவில் கோரப்பட்டுள்ளது.

**மேலதிக விபரங்களுக்கு:**

**தமிழர் மனித உரிமைகள் மையம்**
**பிரித்தானிய பணியகம்:**
**தொலைபேசி: 0956122394**
**தமிழர் புனர்வாழ்வுக் கழகம்**
**பிரித்தானிய பணியகம்:**
**தொலைபேசி: 0181 520 5876**

# கொழும்பில் கொள்ளைச் சம்பவங்கள் அதிகரிப்பு

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளிலும் கடந்த சில வாரங்களாக அதிகரித்துவரும் ஆயுதபாணிகளின் துணிகரக் கொள்ளைச் சம்பவங்கள் குறித்து சிறீலங்காப் பொலிசார் பெரும் குழப்பமடைந்துள்ளனர். கடந்த இரு வாரங்களில் மட்டும் இக் கொள்ளைச் சம்பவங்கள் மூலம் பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்களும், பணமும் கொள்ளையடிக்கப்பட்டதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

தெகிவளை காலி வீதியில் துணிக்கடை ஒன்று உடைக்கப்பட்டு சுமார் 7 இலட்சம் ரூபா பெறுமதியான ஆடைகளும் பணமும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. பட்டப்பகலில் இக் கொள்ளை நடைபெற்றபோது கடை ஊழியர்களும் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர். கொள்ளுப்பிட்டியில் உள்ள நகைக்கடை ஒன்றினுள் புகுந்த இரு ஆயுதபாணிகள் அங்கிருந்து 5 இலட்சம் பெறுமதியான நகைகளைக் கொள்ளையடித்துள்ளனர்.

அத்துடன், மொறட்டுவ, பொரள்ளை, கோமாகம, நவகமுவ, மட்டக்குளி போன்ற இடங்களிலும் பல கொள்ளைச் சம்பவங்கள் நடைபெற்றதாகவும் தெரிவித்த பொலிசார், இக் கொள்ளைச் சம்பவங்களின் சூத்திரதாரிகளை கைதுசெய்ய முடியாது இருப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

# லெப்.கேணல் வள்ளுவன் உட்பட பன்னிரு போராளிகள் வீரச்சாவு

இம்மாதம் பன்னிரண்டாம் திகதி தமிழீழக் கடற்பரப்பில் இடம்பெற்ற படகு விபத்தொன்றில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பன்னிரு போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர். இவர்களில் லெப். கேணல் வள்ளுவனும் (குமாரசாமி திலக்மோகன் யாழ்.) அடங்குவதாக விடுதலைப் புலிகளின் குரல் தெரிவித்துள்ளது.

இப் படகு விபத்தில் இவருடன் வீரச்சாவடைந்த ஏனைய போராளிகள் மேஜர் உலகப்பன் (ஹரிதாஸ் ரொசான் யாழ்.), மேஜர் மருதவாணன் (லோகச்சந்திரன் சதீஸ்குமார் யாழ்), கப்டன் வானரசன் (நாகூர் ராஜேந்திரன் யாழ்.), கப்டன் செங்கண்ணன் (சற்குணம் சிவகுமார் மட்டு.), கப்டன் பவளரட்ணம் (ஜோசப் கணேசகுமார் மட்டு.), கப்டன் உமா (சிங்கராசா உதயமலர் பூநகரி), கப்டன் முடியரசி (தங்கராசா கலைமதி யாழ்.), கப்டன் உதயச்செல்வி (குமாரவேலு தீபா யாழ்.), கப்டன் தர்சனா (சண்முகரட்ணம் விஜயகலா யாழ்.), லெப்.ரஜாகரண் (சுவைகின் ஸ்ரீச் மன்னார்), லெப். கனிவளவன் (கறுப்பையா யோகராஜா உடையார்கட்டு) ஆகியோர் அடங்குவர்.

# மனித உரிமை மறுக்கப்பட்ட மண்ணில் இருந்து நத்தார் கொண்டாடுகிறோம்

## - யாழ். ஆயர் -

மனித உரிமைகள் முற்றிலுமாக மறுக்கப்பட்ட இந்த சூழலில் நாம் நத்தார் கொண்டாடுகிறோம். இந்த வேளையில் எமது உரிமைக்காகவும் சமாதானத்துக்காகவுமே நாம் பிரார்த்திக்க வேண்டும்.

இவ்வாறு யாழ். ஆயர் வண. தோமஸ் சௌந்தரநாயகம் தனது நத்தார் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். உலகின் பல பாகங்களில் இருந்தும், உள்நாட்டில் இருந்தும் எமது சமாதானத்திற்காக பல அழைப்புக்கள் வந்துள்ள இந்த வேளையில், எம்மைச் சுற்றி ஆயிரக்கணக்கான அகதிகளும் அங்கவீனர்களும் ஆதரவற்றவர்களும் தொடர்ந்தும் பெருகியபடியே உள்ளனர். யுத்தத்தின் காரணமாக எமது வாழ்வு பலத்த இன்னல்களை எதிர்நோக்கி உள்ளது எனவும் யாழ். ஆயர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை மன்னார் ஆயர் ஜோசப் இராயப்பு விடுத்துள்ள நத்தார் செய்தியில், நீதியும் உண்மையுமுள்ள சமாதானமே எமக்கு விடிவினைத் தரும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# இராணுவத்தில் 10 நாட்கள் திருட்டில் 20 நாட்கள்

மாதத்தில் 10 நாட்கள் இராணுவத்திலும், மிகுதி 20 நாட்கள் திருட்டுத் தொழிலிலும் ஈடுபட்டு வந்த சிறீலங்காச் சிப்பாய் ஒருவர் சிறீலங்காப் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இராணுவத்தில் கடமையாற்றிய இவர் விடுமுறைக்கு வீடு வந்தால் அவ்வூரிலே தனது திருட்டுத் தொழிலை நடத்துவாராம். இதுவரை பல வீடுகளில் திருட்டினை மேற்கொண்ட இவர் 2,0000 ரூபாவிற்கும் மேலான தொகையை சேகரித்துவைத்துள்ளார்.

அத்துடன், இராணுவமுகாமிலிருந்தும் இவர் சில பொருட்களை திருடி வந்துள்ளதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர். தற்பொழுது இச் சிப்பாய் கோமாகம நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளார்.

# சவூதியில் இருந்து திரும்பிய பெண் கைது

சவூதியரேபியாவில் தொழில் புரிந்துவிட்டு கொழும்பு திரும்பிய தமிழ்ப் பெண் ஒருவர் சிறீலங்கா பொலிசாரினால் கொழும்பில் கைது செய்யப்பட்டுள்ளார். ஏறாவூர் சேனைக்குடியிருப்பைச் சேர்ந்த சுப்பையா நேசம்மா என்பவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டவராவர்.

விடுதலைப் புலிகளின் உறுப்பினர் எனக் கூறியே பொலிசார் இவரைக் கைதுசெய்துள்ளனர்.


வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும்
எமது புதுவருட வாழ்த்துக்கள்

உங்கள் அனைத்து விதமான அச்சுத் தேவைகளுக்கும்

**தமிழ் அச்சகம்**

(மக்கள் கடை முன்பாக)

அனைத்து அச்சு வேலைகளும் குறித்த தவணையில் மிகக் குறைந்த விலையில் சிறந்த தரத்துடன் செய்து கொடுக்கப்படும்.

இலண்டன், இந்தியா, இலங்கை, பிரான்ஸ், சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் 500-க்கு மேற்பட்ட திருமண அழைப்பிதழ் மாதிரிகள் உங்கள் தெரிவிற்காக உள்ளன.

**திங்கள் முதல் - சனி வரை 09.00 – 22.00 மணிவரை**

**60, Rue Louis Blanc, 75010 Paris - Tel&Fax: 01 42 09 60 64 *ou* 06 13 12 35 42**

**அழைப்பிதழ் தயாரிப்பாளர்களுக்கு!**
திருமண அழைப்பிதழ், பூப்புனித நீராட்டு விழா அழைப்பிதழ்கள், பிறந்த தின விழா அழைப்பிதழ், முதன் நன்மை அழைப்பிதழ், கேக் பெட்டிகள் மொத்தமாகப் பெற்றுக் கொள்ளலாம். அழைப்பிதழ் மாதிரித்தாள் தெரிவிற்காக இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.


24 மணி நேரத்தில் உங்கள் அழைப்பிதழ்கள் அனைத்தும் **Print** செய்து கொடுக்கப்படும்

Pub



**நித்தி வாகன் சேவை**

உங்களின் வீட்டுத் தளபாடங்களை பெரிய $20M^3$ வாகனத்தில் பாதுகாப்பாக ஒரே தரத்தில் ஏற்றி இறக்கவும் மற்றும் லூர்த், ஐரோப்பிய நாடுகளுக்குமான வாகன தேவைகளுக்கு தொடர்பு கொள்ளுங்கள்.



**நித்தி:**
**தொலைபேசி: 0148050214**
**0613342518**
**0607348051**
**0148385825**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறீலங்கா 1998

# புலிகள் மீதான தடையிலிருந்து டெல்லி விஜயம் வரை

சமாதானப் பூக்கள் மலரட்டும்.... போர் ஓயட்டும் என்ற எதிர்வுகூறல்களுடன் ஆரம்பித்த 1998ம் ஆண்டும் முடிவிற்கு வருவதற்கு இன்னும் ஓரிருநாட்களே இருக்கின்றன. ஆயினும் 99ம் ஆண்டிற்கும் இதே போன்ற பழைய வாழ்த்துப் பல்லவியை முன்வைத்த சகலரும் சமாதானப் பூக்களுக்காக ஏங்கி உள்ளனர். கொழும்புப் பத்திரிகைகளோ வெள்ளைப்புறாக்களின் படத்தை முன்பக்கத்தில் பிரசுரித்து இந்த சமாதானப்புறா எதிர்வரும் வருடத்திலாவது பறக்காதா என்ற நப்பாசையை வெளியிட்டுள்ளார்கள். தமிழ்த் தேசியத்தை நசுக்கும் பெரும்போருக்கு முண்டுகொடுப்பது ஒரு பக்கமாகவும், சமா



தானத்திற்கு ஏங்குவது மறுபக்கமுமாகச் சிந்திக்கும் இவர்கள், யதார்த்தத்தை புரிந்துகொண்டு 'உண்மையான சமாதானம்' என்றால் என்ன என்பதை இன்னும்தான் புரிந்துகொள்ளவில்லை.

1998ம் ஆண்டானது உண்மையிலே சந்திரிகா அரசிற்கு பெரும் நெருக்கடிகளையும் தோல்விகளையும் கொடுத்த ஒரு வருடமாகும். இவ் வருடத்தின் முற்பகுதியில் **(ஜனவரி-25)** கண்டியில் உள்ள தலதாமாளிகை மீது நடாத்தப்பட்ட குண்டுத்தாக்குதலையடுத்து மறுநாள் பௌத்த பேரினவாதப் பிக்குகளின் அழுத்தம் காரணமாக சந்திரிகா அவசர அவசரமாக விடுதலைப் புலிகள் மீதான தடையினை அறிவித்தார். அதாவது சிறீலங்காவின் நீதி அமைச்சினை கலந்தாலோசனை செய்யாது, சந்திரிகா அவசரமாக வர்த்தமானி அறிவித்தலினூடாகவே இத் தடையினை அறிவித்தார். தடைகள் அறிவீக்கப்பட்டதன் மூலம் சர்வதேச ரீதியில் புலிகளை ஒடுக்கிவிடலாம் என மனப்பால் குடித்த சந்திரிகா குழுவினர், விடுதலைப் புலிகள் மீதான தடை அறிவிப்பால் அடைந்த 'இலாபம் என்ன' என்பது தெரியாமல் இன்னும் குழப்பமடைந்த நிலையிலே தான் காணப்படுகின்றனர்.

விடுதலைப் புலிகள் மீதான தடை அறிவிப்புடன், தனது முற்பகுதியை ஆரம்பித்த கடந்த வருடம், தனது இறுதிப் பகுதியை மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் ஊடான பேச்சுக்கள் என்ற ஊகங்களுடன் கடந்துள்ளது. 98ம் ஆண்டு தமிழீழ தேசம் எத்தகைய அரசியல் இராணுவ வெற்றிகளைப் பெற்றுக்கொண்டதென்பது சர்வதேசத்திற்கும் நன்கு புலப்பட்ட ஒரு விடயமாகும். (பார்க்க 1998 பதிவுகள்) ஆனால் இதே காலப்பகுதியில் சிறீலங்கா தேசமும் என்ன பதிவுகளைக் கொண்டிருந்ததென்பதை சுருக்கமாகப் பார்ப்பது பொருத்தமானதாகும்.

விடுதலைப் புலிகளின் தடை அறிவிப்பினை அடுத்து சந்திரிகாவுடன் நீதி அமைச்சு முரண்பட்டுக்கொண்டிருந்த அதே வேளை 'லியாம்பொக்ஸ்' ஒப்பந்தத்தை தன்னைக் கலந்தாலோசியாது சந்திரிகா தன்மீது திணித்துவிட்டார் என்ற குற்றச்சாட்டு ஐ.தே.க. ரணில் தரப்பிடம் இருந்து எழுந்தது. உட்கட்சி மோதல்களால் (சிறீசேனகுரே—ரணில்) பிளவுபட்டுப் போயிருந்த ஐ.தே.க. விற்கு லியாம் பொக்ஸ் ஒப்பந்தம் மேலும் ஒரு அழுத்தத்தைக் கொடுக்கும் விஷயமாகவே அமைந்திருந்தது. இந்த வேளையில் சிறீலங்கா தனது 50வது சுதந்திர தினப்பொன் விழாக் காலகட்டத்திற்குள் நகர்ந்தது. பிரித்தானிய இளவரசர் சாள்ஸ் அவர்களின் வருகையுடன் இவ்விழா கொண்டாடத் திட்டமிட்டபோதிலும் கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளால் கொடுக்கப்பட்ட பொன் விழாப் பரிசினை அடுத்து அது பிசுபிசுத்துப்போனது. இந்த நேரத்தில் ஐ.தே.க.விற்குள் விஜயபாலமென்டிஸ் இன்னொரு பிரச்சினைக்காரனாக உருவெடுத்தார். ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்ட நிலையில் மென்டிஸ் கட்சியிலிருந்து இடைநிறுத்தப்பட்டதையடுத்து ஐ.தே.க. விற்குள் பெரும் கயிறிழுப்புக்கள் தோன்றின. பாராளுமன்றத்தில் மென்டிஸின் குடியுரிமையை ரத்துச் செய்வதற்கான அங்கீகாரம் விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டதையடுத்து, ஐ.தே.க. தான் விஷயத்தில் முந்துவதற்காக மென்டிஸ் மீது சில அழுத்தங்கள் பிரயோகிக்க விழைந்தது. ஆனால் கட்சிக்குள்ளேயே இதன் காரணமாக பிளவுகளும் ஏற்படத் தொடங்கின. தனது கட்சிக்குள் உள்ள பிளவினை வெளியே காட்டாது திசை திருப்புவதற்காக ஐ.தே.க.விற்கு அந்தவேளை, 'எப்பாவெல பொஸ்பேற் ஒப்பந்தம்' கிடைத்தது. இந்தவிடயத்தைத் தூக்கிப்பிடித்த ஐ.தே.க பாராளுமன்றத்தை பகிஷ்கரிக்கப்போவ



தாகவும் அறிவித்து சத்தியாக்கிரகங்களையும் நடாத்தியது. ஐ.தே.க. பாராளுமன்றத்தைப் பகிஷ்கரித்தவேளை விஜயபால மென்டிஸ் மீதான குடியுரிமை நீக்க பிரேரணை, சந்திரிகா குழுவினரால் ஒருதரப்பு விவாதத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது. ஆயினும் இதில் இலாபமடைந்தவர் யாரென்றால் அமைச்சர் டி.எம்.ஜெயரத்தினாதான். ஐ.தே.க. இல்லாத நிலையிலேயே அவர் சமர்ப்பித்த பிரேரணை ஒன்று பாராளுமன்றத்தில் [illegible] வேற்றம் கண்டது. இந்தப் பிரச்சினைகள் மார்ச் மாதம் நடைபெற்றவேளை ஐ.தே.க.விற்குள்ளே ரொனிடி மெல்லுக்கும் அனுரா பண்டாரநாயக்காவிற்கும் இடையில் மோதல்கள் வெடித்தன. பண்டாரநாயக்கா குடும்பம் தொடர்பாக ரொனிடிமெல் மேல் தெரிவித்த கருத்துக்களே இம் மோதலுக்கு வடிகால் அமைத்தன.

அடுத்தமாதமான **ஏப்ரல்** மாதம் சிறீலங்கா தலைநகரில் இராஜதந்திரிகள் சிலர் 'முகாமிட்ட' மாதமாக அமைந்தது.

## பேம்பி

பொதுநலவாய நாடுகளில் தலைவர் எமேக்கா அனோயாக்கோ, அமெரிக்காவின் விசேட பிரதிநிதி பில் றிச்சாட்சன் ஆகியோர் குறுகிய கால இடைவெளிக்குள் கொழும்பிற்கு வருகை தந்தார்கள். இவர்கள் இருவரும் இனப் பிரச்சினை சம்பந்தமாகவும் சந்திரிகா குழுவினருடன் பேச்சுக்களை நடாத்தினர். பில்றிச்சாட்சனின் வருகையை அடுத்து,

> **தமிழ்த் தேசியத்தை நசுக்கும் பெரும்போருக்கு முண்டுகொடுப்பது ஒரு பக்கமாகவும், சமாதானத்திற்கு ஏங்குவது மறுபக்கமுமாக சிந்திக்கும் இவர்கள், யதார்த்தத்தை புரிந்துகொண்டு 'உண்மையான சமாதானம்' என்றால் என்ன என்பதை இன்னும்தான் புரிந்துகொள்ளவில்லை.**

வோஷிங்டன் நகருக்குப் பறந்த நிதி—நீதி அமைச்சர் பீரிஸ் விடுதலைப் புலிகளின் தடைமீதான சில பேச்சுக்களை அமெரிக்க அதிகாரிகளுடன் நடாத்தினார். இந்தவேளை தபாற்துறை ஊழியர்களின் நீண்ட வேலைநிறுத்தப் போராட்டத்தின் விளைவாக சிறீலங்காவின் தபால்துறை மிக மோசமாகப் பாதிக்கப்பட்டது.

பில்றிச்சாட்சனின் வருகையை அடுத்து முன்னாள் இந்திய தூதர் நாகேந்திரநாத் ஜா கொழும்பிற்கு வந்தார். வடக்குக் கிழக்கு இணைந்த தமிழர் தாயகமென்ற கோட்பாட்டினை விடுத்து வேறு வகையில் அலசப்படும் விடயங்கள் பிரச்சினைக்குத் தீர்வினைத் தராது என அவர் தெரிவித்த கருத்துக்கள், சிங்கள தேசத்தில் சர்ச்சைகளையும் எதிர்ப்புக்களையும் கிளப்பின. நாகேந்திரநாத் ஜா சொன்ன விடயங்கள் சர்ச்சையைக் கிளப்பிய அதேவேளை, சிறீலங்காவின் இராணுவத் தளபதி ரொகான் தளுவத்தை 'தீர்வுப் பொதி' சம்பந்தமாகச் சொன்ன கருத்துக்கள் அமைச்சர்களையும் அரச உறுப்பினர்களையும் கோபமடைய வைத்தது. தீர்வுப் பொதி மூலம் பிரச்சினைக்கு தீர்வு காணப்படக்கூடாது என்ற வகையிலேயே தளபதியின் கருத்துக்கள் அமைந்தன.

**மே** மாத இறுதிப் பகுதியில் 5 மாகாண சபைகளுக்குமான தேர்தல் அறிவிப்புக்கள் வெளியாகியதையடுத்து, ஜெயசிக்குறுய் வெற்றிக் கனவில் மிதந்த ரத்வத்தைக்கு எரிச்சலாகப் போய்விட்டது. தேர்தலுக்காக படையினரை ஜெயசிக்குறுய் களத்திலிருந்து எடுத்து பாதுகாப்புத் தரமுடியாதென அவர் எதிர்ப்புத் தெரிவித்ததால் அவசரகால சட்ட விதிகளின்படி தேர்தல் அறிவிப்புக்கள் ஒத்தி வைக்கப்பட்டன. ஆனால் எதிர்க் கட்சியான ஐ.தே.க. இந்த ஒத்திவைப்புக்களுக்கெதிராக கருத்துக்களைத் தெரிவித்ததுடன், நடவடிக்கைகளையும் மேற்கொண்டது.

ஆண்டில் நடுப்பகுதியில் அரசு விதித்த சில விற்பனை வரிகள் அமைச்சரவைக்குள்ளேயே கருத்து மோதல்களை ஏற்படுத்தியது. வரிவிதிப்பு சரிதான் என ஒரு சாராரும் அது பிழை என மறு சாராரும் பிளவுபட்டு நின்றனர். இந்தவேளை ஐ.தே.கட்சியின் செயற் குழுவில் இருந்து விஜயபாலமென்டிஸ் ரணில் தரப்பினரால் நீக்கப்பட்டார். ஆனால் ஐ.தே.க.வின் பிரமுகரான ஹமீத் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார். ஹமீத்தும், அநுரா பண்டாரநாயக்காவும் ஐக்கிய தேசியக் கட்சியின் நியமிப்பு சபையில் தோன்றியிராதது அவர்கள் கட்சியிலிருந்து விலக முனைகிறார்களா என்ற ஊகங்களையும் அவ்வேளை கிளப்பியிருந்தது.

**ஓகஸ்ட்** மாதத்திற்கு காலம் நகர சார்க் மாநாட்டினை ஒட்டி சிறீலங்கா சர்வதேசத்தின் முன் கொஞ்சம் சிலிர்ப்புப் பெற்றது. இதேமாதம் ஐ.தே.கட்சி மாகாண சபைத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்ட அரசின் நடவடிக்கையைக் கண்டித்து கொழும்பில் பேரணியொன்றை நடாத்தியதுடன், நாடளாவிய ரீதியில் பிரச்சார நடவடிக்கையை முடுக்கிவிட்டது. இதே மாதம்தான் ஐ.தே.க சிறீலங்காவின் அமைச்சர் மங்களசமரவீர மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை பாராளுமன்றத்திற்குள் கொண்டு வர முயற்சிசெய்தது. அரசவங்கி அட்டைகளைப் பயன்படுத்தி தனிப்பட்ட ரீதியில் ஊழல் செய்தார் என்பதே மங்கள சமரவீரமீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டாகும்.

அடுத்தமாதமான செப்டெம்பர் மாதம் ஐ.தே.க ரணில் விக்கிரமசிங்க விடுதலைப் புலிகளு



டன் நிபந்தனையற்ற பேச்சுக்கள் நடாத்தப்பட வேண்டும் என அறிவித்ததையடுத்து சலசலப்புக்கள் கிளம்பின. இதன் எதிரொலியாக ஐ.தே.கட்சி ஏற்பாட்டில் நடாத்தப்பட்ட சர்வகட்சி மாநாட்டை அரசு பகிஷ்கரிக்க நீதி அமைச்சர் பீரிஸினால் கூட்டப்பட்ட மாநாடொன்றினை ஐ.தே.க. பகிஷ்கரித்து தனது பதில் நடவடிக்கையைக் காட்டிக்கொண்டது. இந்தவேளை சிறீசேனக்கூரே பிரேமதாசாவின் மனைவியான ஹேமாவுடன் புதிய அரசியல் கூட்டொன்றினை ஏற்படுத்திக்கொள்ள, சிறீலங்காவின் வர்த்தகப் பிரமுகர்கள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முகமாக தாமொரு முன்னணியை அமைத்துள்ளதாக அறிவித்தனர். தொடர்ந்துவந்த **நவம்பர்** மாதம் சிறீலங்காவின் அடுத்த வருடத்திற்கான வரவு செலவுத் திட்ட சமர்ப்பிப்பு மாதமாக அமைந்தது. ஆயினும் அரசினுள்ளே ஏற்பட்ட கருத்து முரண்பாடுகளால் வரவுசெலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட சில பிரேரணைகள் பின்னர் மீளெடுக்கப்பட்டன. தொடர்ந்து வடமேற்கு மாகாண சபைக்கான தேர்தல் நடவடிக்கைகள் சூடுபிடிக்க ஆரம்பித்தன. இன்று வரை அத் தேர்தலுக்கான வன்செயல்கள் வடமேற்கு மாகாணத்தில் நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கின்றன. இவ் வருடத்தின் இறுதியில் ஜனாதிபதி சந்திரிகாவின் இந்தியா விஜயம் புதிய ஊகங்களைக் கிளப்பியுள்ளது. ஆனால் அடுத்த ஆண்டு இவ் ஊகங்களின் உண்மை, பொய் உறுதிப்பாட்டினை தெரிவிக்கும் ஆண்டாக ஒருவேளை அமையலாம்.


**தமிழ் ஒளி ஒலி நிகழ்ச்சிகளை பார்த்தும் கேட்டும் மகிழவேண்டாமா?**

இந் நிகழ்ச்சிகளைப் பார்ப்பதற்கும் கேட்பதற்கும் தரமான புதிய Decorder எம்மிடம் உண்டு. இவ் Decorder மூலம் 90 இற்கும் மேற்பட்ட தமிழ், இந்தி, ஆங்கிலம், ஜேர்மன் உட்பட பல நிகழ்ச்சிகளைப் பார்த்து மகிழலாம். இவற்றை ஜேர்மன் தொழில்நுட்ப முறையின் மூலம் பொருத்துவதற்கும், பழுது பார்ப்பதற்கும் நீங்கள் தொடர்புகொள்ளவேண்டியது

**தொலைபேசி இலக்கம்: 0202741937**

**கை.தொலை பேசி இலக்கம்: 01722931266**


*தொடர்பு: கனீந்திரன் (ஜேர்மனி)*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகள் வலுவிழந்துவிட்டனரா?

## கொழும்பு இராணுவ ஆய்வாளர் தராகியின் கட்டுரையைத் தழுவி...

டெல்லி அரசியலிலே சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா வேறெந்த சிறீலங்காவின் அரசியல்வாதிகளை விடவும் நெருக்கமானவராக காணப்படுவதற்கு இந்திய அரசியலுடன் ஒரு தசாப்தத்திற்கு மேலாக அவர்கொண்டிருக்கும் தொடர்புகளே காரணம் எனலாம். அவர் கொண்டிருக்கும் உறவின் பதிவினை எடுத்துக் கொண்டால் அது இந்தியா—சிறீலங்கா ஒப்பந்தத்தின் மூலமாகவே முகிழ்விட்டமையும் புலப்படும்.



இந்திய-சிறீலங்கா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் உருவாக்கப்பட்ட மாகாண சபைகளுக்கு தேர்தல் நடாத்த முன்வந்தபோது சிறீலங்கா சுதந்திரக்கட்சி, ஜே.வி.பி., தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகிய கட்சிகள் தேர்தலைப் பகிஷ்கரிக்க முடிவு செய்தன. இது இந்திய வெளிவிவகாரத்துறையின் புலனாய்வுப்பிரிவுக்கு உண்மையிலேயே இக்கட்டான நிலைமையைத் தோற்றுவித்தது. அப்போது தெற்கில் முதன் முதலாக மாகாணசபைத் தேர்தலுக்கு தன்னை தயார்செய்தது எஸ்.எல்.எம்.பி. கட்சி மாத்திரமே

**சிங்கள குடிமக்களை புலிகள் கொலை செய்கிறார்கள் என குற்றஞ்சாட்டிய வேளையில், விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களது படத்துடன் அவரது பேட்டியினை இதே ராம்தான் பிரசுரித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.**

யாகும். அதாவது டெல்லியை அவ்வேளை 'ஆசுவாசப்படுத்திய' ஒரு கட்சியாக அது தென்பட்டது. அதனால் அக் கட்சியின் பிரமுகர் என்ற வகையில் சந்திரிகா டெல்லிக்கு நட்புறவாளராகவும் விளங்கினார்.

இவ்வேளை ஒப்பந்தத்தில் திருப்தியற்ற கட்சிகளின் குரோத மனப்பான்மை நிலைப்பாடு குறித்து நாம் இக் கட்டத்தில் சொல்லாமல்விடுவதும் குறிப்பிடத்தக்கது.

சந்திரிகா டெல்லியுடன் கொண்ட இவ் உறவு அவருக்கு பல வழிகளிலுமே உதவியுள்ளது. விடுதலைப் புலிகளுடனான போரில்கூட ஜே.ஆர். ஜெயவர்த்தனாவோ அன்றி பிரேமதாசாவோ இந்தியாவுடன் கொண்டிருந்த எதிரும் புதிருமான நிலைபோன்றும் சந்திரிகாவிற்கு ஏற்படவில்லை.

தமிழ் நாட்டிலுள்ள சில புத்திஜீவிகளுக்கும், அரசியல்வாதிகளுக்கும், பத்திரிகையாளர்களுக்கும்கூட சந்திரிகா ஒரு 'தெய்வீகப் பிறவி' போன்ற பிரமைதான் ஏற்பட்டது. இவ்வாறான வர்களின் பின்னணி தமிழருக்கென்ற ஒரு தனிநாடு உருவாவது முற்றாக வேருடன் களையப்பட வேண்டியதென்பதாகும். அவர்களின் இந் 'நோக்கம்' எழுத்துவடிவிலும், அறிக்கை வடிவிலும், ஆய்வுகளாகவும் பல தடவைகள் வெளிப்படுத்தப் பட்டமையை பலரும் அறிவார்கள்.

உதாரணமாக அண்மையில் 'புரொன்ட் லைன்' திரு.ராம் அவர்கள் சந்திரிகாவுடன் செய்த நேர்காணலைப் பாருங்கள். (அதாவது சந்திரிகா இந்திய விஜயமொன்றினை மேற்கொள்வதற்கு சற்று முன்னராக இந்த நேர்காணல் செய்யப்பட்டிருக்கிறது.)

'சந்திரிகாவின் செயற்திட்டம்' (Chandrika's Project) என்பதை பல தடவைகள் கோடிட்டு விளக்கும் ராம், சந்திரிகாவின் திட்டங்கள், முன்னெடுப்புக்கள், அரசியல்பாங்கு ஆகியவற்றை எதிர்ப்பவர்கள், சந்திரிகாவின் மனோதிடத்தை வெறுப்பவர்கள் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வேளை ராம் தொடர்பாக கொஞ்சம் பின்நோக்கி பார்ப்பது பொருத்தமானது. ஜே.ஆர் ஜெயவர்த்தனா அரசு அநுராதபுரம், அரத்தலாவை, ஹபரணை ஆகிய இடங்களில் சிங்கள குடிமக்களை புலிகள் கொலை செய்கிறார்கள் என குற்றஞ்சாட்டிய வேளையில், விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களது படத்துடன் அவரது பேட்டியினை இதே ராம்தான் பிரசுரித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

நடைமுறை அரசியலில் ஐ.தே.க. வின் நடவடிக்கைகள் அக் கட்சியின் நிலைப்பாட்டினை தெளிவாக அறிவதற்கு உதவி செய்கிறது. தலைவரான ரணில் விக்ரமசிங்க அரசியலமைப்பின் 13 வது சரத்து தொடர்பாக யின் அறிகுறியாகத்தென்பட்டது. ஏனெனில் புலிகளின் யாழ்ப்பாணம் மீதான நிதர்சனமான ஆட்சி தமிழகத்தின் பால் இந்தியா கொண்டிருந்த 'அக்கறைக்கு' ஒரு அச்சுறுத்தலை உண்டாக்கியது.

சிங்கள தேசியவாதிகளுக்கு சந்திரிகா ஒருவர்தான் இந்தியாவுடனான உறவினை 'எதிரியின் எதிரி உனக்கு நண்பன்' என்ற உச்சப்பாங்கில் செயல்படுத்திக் கொண்டிருப்பவர் என்ற கருத்து உண்டு. இதனை பல தடவைகள் அவர்கள் சுட்டிக்காட்டியுமுள்ளனர்.

**தமிழரல்லாதவர்களும், பிராமணர்களும் சிங்கள அரசுடன் இணைந்து செயற்படுகின்றார்கள் என்ற மனக்குறை தமிழ் தேசியவாதிகளுக்கு மிகத்தீவிரமாகவே உண்டு. பாக்கு நீரிணைக்கு அப்பாலுள்ள தமது சக இனத்தை கொல்வதற்கு இவ்வாறானவர்கள் சிங்கள அரசிற்கு உதவி செய்கின்றார்கள் என்பதும் இவர்களதுவாதம்.**

சொன்னதையே மீண்டும் மீண்டும் சொல்வதானது இந்தியாவிற்கு ஒரு நல்ல செய்தியாக அமையுமென தெளிவாக எதிர்பார்க்கிறார். அதாவது இந்தியாவுடனான உறவுகளை தான் விருத்திசெய்யும் பட்சத்தில் சந்திரிகாவின் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு எதிரான தனது நிலைப்பாட்டிற்கு அது உதவி செய்யுமெனவும் அவர் கருதுகிறார். இது உண்மையில் ஒரு கனவாகும்.

இந்தியாவின் கொள்கை வகுப்பாளர்களும் ஏனையவர்களும் சந்திரிகாவிற்கு ஆதரவு கொடுக்க முன்வருவதன் மூலம், புலிகளை ஒழிக்கும் அவரது முனைப்பிற்கு சார்பான நிலைப்பாட்டினைக் கொண்டிருக்கிறார்கள்.

புலிகளை இராணுவ ரீதியிலும், அரசியல் ரீதியில் ஒடுக்குவதற்கு சந்திரிகாதான் 'கைதேர்ந்த ஆள்' என்பது அவர்களது கணிப்பு.

யாழ்ப்பாணம் இராணுவத்தால் கைப்பற்றப்பட்டபோது தமிழகத்திலுள்ள தமிழ் தேசியவாதிகளுக்கு அது ஒரு வீழ்ச்சி

ஆனால் இந்த வேளையிலே சந்திரிகாவுக்கு எதிர்பாராத விதமான ஒரு ஆதரவு இந்தியாவின் செய்தித்துறை ஊடகங்களூடாக கிடைத்தது. விடுதலைப் புலிகள் நசுக்கப்பட வேண்டும் என்ற சித்தாந்தப்படி இந்த செய்தித்துறை ஊடகங்கள் இயங்குவன.

இந்தியாவில் பாரதிய ஜனதாக்கட்சி மத்திய அரசாங்கத்தை அமைத்தவுடன் புலிகளுக்கு எதிரான 'மணிகள்' ஒலிக்கத்தொடங்கின. டெல்லியின் நிலைப்பாடு எங்கே மாறிவிடுமோ? என்பது தான் இதற்குக் காரணம்.

வடக்கு-கிழக்கு நிலவரத்தை 'இறுதியான தகுந்த நிலைக்கு' இந்தியா மாற்றுமா என்பதும் இவ்வேளை பரிசோதனைக்குரிய விடயங்களாயிற்று. ஆனால் இந்தியா இரண்டுவிடயங்களை மட்டுமே செய்யக்கூடியதாக இருக்கும்.

1. நேரடியான இராணுவ உதவிகளை வழங்குவது, புலிகளின் ஆதரவு சக்திகளை தனது மண்ணில் ஒடுக்குவது.
2. தமிழகத்திலிருந்து வினியோகங்கள் வன்னிக்குச் செல்வதை தடுப்பது.

இதிலே முதலாவது விடயமானது பரந்த நோக்கிலே பார்க்கும்போது இந்தியாவிற்கு சாத்தியப்படாதது.


ஆனால் இரண்டாவது விடயத்தைப் பொறுத்தவரை தமிழகத்திலுள்ள இந்தியாவின் சக்திமிக்க பத்திரிகைத்துறையும், டெல்லியும் தம்மால் இயன்றதை செய்துள்ளன. உண்மையில் இந்திய செய்தியாளர்களும் தமிழக அறிவு ஜீவிகள் எனக் கருதப்படுவோரும் புலிகள் தொடர்பான 'விழிப்பினை' சிங்கள செய்தி ஊடகங்களை விட மிக அதிகமாக கொண்டிருப்பது நோக்கத்தக்கது.

புலிகளை ஒரு வில்லன் பாத்திரமாக சித்தரிப்பதற்காக சிங்கள தேசியவாதிகளுக்காக இவர்களின் பேனாக்கள் அர்ப்பணிக்கப்பட்டிருக்கின்றன.

'சந்திரிகாவின் செயற்திட்டம்' என இவர்கள் குறிப்பிடுவது சந்திரிகாவின் உபகண்ட தோழமைகளின் எதிர்ப்பாளர்களை குறிப்பாக தமிழகத்தினைக் கருத்திற்கொண்டேயாகும்.

தமிழரல்லாதவர்களும், பிராமணர்களும் சிங்கள அரசுடன் இணைந்து செயற்படுகின்றார்கள் என்ற மனக்குறை தமிழ் தேசியவாதிகளுக்கு மிகத்தீவிரமாகவே உண்டு. பாக்கு நீரிணைக்கு அப்பாலுள்ள தமது சக இனத்தை கொல்வதற்கு இவ்வாறானவர்கள் சிங்கள அரசிற்கு உதவி செய்கின்றார்கள் என்பதும் இவர்களதுவாதம்.

அண்மையில் வெளிவந்த தமிழகத்தின் 'பிரபலவார சஞ்சிகையான ராணியில் ஜெயசிக்குறுய் இராணுவ நடவடிக்கை கைவிடப்பட்டதானது. சிறீலங்கா அரசிற்கு கிடைத்த தோல்வி என



வும், புலிகளை வெல்ல சிங்கள அரசினால் முடியாது என்வும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் அதேவேளை ராம் போன்றவர்களின் 'புரொன்ட் லைன்' ஆங்கில சஞ்சிகை தமிழ் நாட்டிலுள்ள சொற்பளவான ஆங்கில கல்விகற்ற மத்திய தரத்தினராலேயே படிக்கப்படுகிறது. ராணியோ பொதுவாக படிக்கப்படும் ஒரு மக்கள்வார சஞ்சிகையாகும்.

ராம் போன்றவர்களின் எண்ணப்பாட்டின்படி வலுவிழந்த நிலையில் இருக்கும் புலிகள் சில வேளை அவர்களை நினைப்பதைப் போலன்றி 'அதிகமாகவே' பெற்றுக்கொள்ளலாம். அதுவும் பாக்கு நீரிணைக்கு அப்பால் மிக அதிகமாகவே பெற்றுக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'போர்க்கள'மாகிய நாடகமேடை

*– தமிழ்நாட்டிலிருந்து 'சாதாரணன்' எழுதுகிறார்*

## கலைத் தீ

கலைப்படைப்புகள் கலக்கத்தைத்தூண்டும் வல்லமை உடையதுதான். சல்மான் ருஷ்டி, தஸ்லிமா நஸ்ரின் ஆகியோருக்கு எதிராக முஸ்லிம் பழமைவாதிகள் பகைமைகொண்டெழுந்ததை நாம் அறிவோம். அதைப்போலவே ஃபயர் என்னும் திரைப்படத்திற்கு எதிராக இந்துப் பழமைவாதிகள் கொதித்து எழுந்துள்ளனர். குறிப்பாக பம்பாயில் அப்படம் ஓடிய திரையரங்குகள் அடித்து நொறுக்கப்பட்டன. ஃபையர் படத்தை இயக்கிய தீபாமேத்த பெண் திரைப்பட இயக்குநர் சமீபத்தில் சென்னைக்கு வந்திருந்தார். செய்தியாளர்களையும் சந்தித்தார்.

'உலக அளவில் 14 விருதுகளைப்பெற்ற ஒரு படத்துக்குச் சொந்த மண்ணில் கிடைத்த 'வரவேற்புக்கு' மனம் வெதும்புகிறேன்.'

ஃபயர் படத்துக்காகக் கோபப்படும் அமைப்புக்கள் வாத்சாயாயனர் எழுதிய காமசூத்திராவைக் கிழித்துப் போட்டுவிடுமா? அல்லது கஜுரகோ கொனார்க் கோவில் சிற்பங்களைத்தான் கறுப்புத்துணிபோட்டு மூடிவிடுவார்களா?

பெண் ஓரினச் [லெஸ்பியன்] சேர்க்கையாளர்களுக்கு வக்காலத்து வாங்கவில்லை. கணவனால் வஞ்சிக்கப்பட்ட இரு பெண்கள் மனரீதியில் நெருங்கி உடல்ரீதியான உறவாக முடிந்தது என்பதுதான் கதை. இதனால் திருமணம் என்ற அமைப்பே காலியாகிவிடும் என்று ஏன் நினைக்கவேண்டும்? ஃபயர்படம் ஒரு கலாச்சார அதிர்ச்சியைத் தந்துள்ளது என்று வேண்டுமானால் சொல்லலாம்.'

இயக்குநர் தீபா மேத்தா சொல்லியவற்றின் சாரம் இது. சென்னையில் திரையரங்குகளில் இப்படம் ஓடிக்கொண்டிருக்கிறது.

★ ★ ★

## காட்டுக் கடலில் நீந்தும் வீரப்பன்

வீரப்பன் மீண்டும் இந்தியச் செய்திப் பத்திரிகைகளில் அடிபடத்தொடங்கிவிட்டார். சந்தனக் கட்டைத் திருடன், கொலைகாரன் என்று காவல் துறையும் செய்தி ஏடுகளும் படம்பிடிக்கின்றன. உண்மையில் அவர் இப்படி மாறிப்போனதற்குக் காவல் துறையினரே காரணம் என்பதை பலமுறை ஆடியோ கேசட்டுக்களில் பதிவு செய்துள்ளார் வீரப்பன்.

வீரப்பன் தேடுதல் வேட்டைக்குரிய காவல் குழுவின் தலைவர் காளிமுத்துவைப் பலமுறை வீரப்பனே பாராட்டியுள்ளார். ஆனால் வீரப்பனைச் சரியானமுறையில் தொடர்பு கொண்டு அவரைச் சரணடையச் செய்வதற்குரிய முயற்சி அரசியல் ரீதியாகவும் இல்லை. தொண்டு அடிப்படையிலும் இல்லை. காவல்துறையின் நேர்மையான அணுகுமுறை அடிப்படையிலும் இல்லை.

வீரப்பன் இந்தமுறை யாரையும் கடத்தவில்லை. ஈரோடு மாவட்டம் வெள்ளித்திருப்பூர், காவல்நிலையத்தைத் தாக்கி ஆயுதங்களையும் அங்கிருந்த சொற்பப் பணத்தையும் எடுத்துச் சென்றுவிட்டார் என்று செய்தி ஏடுகள் தெரிவிக்கின்றன.

ஆயுதங்களைப் பறிகொடுத்த காவல்துறையினர் வீரப்பனை விரைந்து தேடி கண்டுபிடிப்பதைப்போல ஒரு தோற்றத்தை ஏற்படுத்தி வருகின்றனர். காவல்துறையினர் ஹெலிகாப்பரையும் பயன்படுத்தி ஒளிவெள்ளத்தைப் பாய்ச்சி வீரப்பனைத் தேடப்போகிறார்களாம். தமிழகக் காவல்துறை வரலாற்றில் ஒரு புதிய தொடக்கம்.

வீரப்பனைத்தேடிப்பிடிப்பதில் கர்நாடகக் காவல்துறையும் தமிழகக் காவல்துறையும் கூட்டுக்குழுவாகச் சேர்ந்து செயல்பட்டு வருகின்றன.

வீரப்பனுக்குக் காடே கடல்மாதிரி காட்டின் இண்டு இடுக்குக்கூட அவருக்கு அத்துப்படி. வீரப்பன் என்ற காட்டு மீனை காவல்துறை எப்படி வலை வீசித் தேடினாலும் கிடைக்கமாட்டார். அவருக்குக் காவல்துறை பற்றியும் தெரியும். காடுகள் பற்றியும் தெரியும்.

★ ★ ★

## மேடையைப் போர்க்களமாக்கிய விஸ்வநாததாஸ்

விஸ்வநாததாஸ், மதுரகவி பாஸ்கரதாஸ் என்று தமிழகத்தில் பெரும் கலைக் கூட்டமே வெள்ளையரை எதிர்த்துப் போராட்டத்தில் பங்கேற்றது.

விஸ்வநாததாஸ், நாடகமேடையை விடுதலைக்கான 'போர்க்களமாக' வே மாற்றியவர்.

'கொக்கு பறக்குதடி பாப்பா – வெள்ளை
கொக்கு பறக்குதடி பாப்பா.
கொக்கு என்றால் கொக்கு – நம்மை
கொல்ல வந்தகொக்கு'

என்று தொடங்கிப்பாடும்போதே மக்கள் ஆரவாரம் இடிபோல எழும்பும்.

1886 ஜுன் 16ம் நாளன்று சிவகாசியில் பிறந்தவர் விஸ்வநாததாஸ். 18 வயது முதற்கொண்டே நாடக மேடையில் ஏறி நடிக்கவும் பாடவும் தொடங்கிவிட்டார்.

சுதந்திரப்போரில் ஈடுபட்டு அவர் குடும்பத்தினர் அனைவரும் மூலைக்கொருவராய் தமிழகச் சிறைகளில் வாடிவதங்கினர்.

விஸ்வநாததாஸ் திருமணம் முடிந்து ஒரு சில நாட்களே ஆகியிருந்தன. என்றாலும் வெள்ளையர் ஆட்சி அவரைச் சிறைப்பிடித்து வதைத்தது. சிறை அதிகாரிகள் மன்னிப்புக் கடிதம் எழுதித்தந்தால் விடுதலைபெறலாம் என்று கூறினர். விஸ்வநாததாஸ் வேலூர் சிறையிலிருக்கும் தன் தந்தைக்கு இதுபற்றி கடிதம் எழுதினார். வேலூர் சிறையில் இருந்து விடை எழுதினார் அப்பா. 'மகனே மன்னிப்புக்கேட்டு மானமிழந்து வாழ்வதைவிட சிறையிலிருந்து செத்துமடிவதே மேல்'

இத்தகைய போர்க்குணம் மிக்க விடுதலை போராட்ட மறவனுக்கு மதுரை திருமங்கலத்தில் நினைவில்லம் 27.12.98 அன்று திறக்கப்பட்டது.

★ ★ ★


GLOBAL LINE

உலகை உங்கள் கையில் தேடித் தருகின்றது

உங்கள் அழைப்பிற்கு 89% மீதப்படுத்துங்கள்




NEW Prices NEW Prices

குறைந்த கட்டணத்துடன் நிறைந்த சேவை

தற்போது அதிக கழிவு விலைகளுடன் Global Line Card

இலங்கை 44நிமி. பாகிஸ்தான் 35நிமி. இந்தியா 38நிமி. கனடா 100நிமி. அமெரிக்கா 111நிமி.
இத்தாலி 100நிமி. இங்கிலாந்து 100நிமி. ஜேர்மனி 100நிமி. அவுஸ்திரேலியா 75நிமி.
சிங்கப்பூர் 55நிமி. பிரான்ஸ் 100நிமி. ரஷ்யா 60நிமி. தாய்லாந்து 33நிமி. உக்கிரேன் 50நிமி.
சுவிஸ் (கைத்தொலைபேசிகளுக்கு இடையிலானது) 200நிமி.

மேலதிகத் தொடர்புகளுக்கு: Tel: 41- (061)686 94 94 Fax: 686 94 84 E-mail: Masuta@globalline.ch

CLARAGRABEN 103 CH-4057 BASEL SWITZERLAND


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக அரசை நீக்க வேண்டும் இந்திய குடியரசுத் தலைவரிடம் அதிமுக மனு!

தமிழக அரசை நீக்க வேண்டும் எனக் கோரி அதிமுக பாராளுமன்ற உறுப்பினர்கள் குடியரசுத் தலைவரைச் சந்தித்து மனு சமர்ப்பித்தனர். மூப்பனார் மீதும் தமிழக முதல்வர் கருணாநிதி மற்றும் அவரது குடும்பத்தினர் மீதும் ஊழல் புகார் கூறி அது குறித்து விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்றும் அம்மனுவில் கூறப்பட்டுள்ளது.

அதிமுக ஆட்சியில் நடந்த ஊழல் தொடர்பான வழக்கு விசாரணையில் மத்திய அரசு தலையிடுவதை தடுக்க வேண்டும் என்று தமாகா தலைவர் மூப்பனார் சில நாட்களுக்கு முன்னர் குடியரசுத் தலைவருக்கு கடிதம் அனுப்பி இருந்தார். அதற்கு பதிலளிக்கும் வகையிலேயே அதிமுக பாராளுமன்ற உறுப்பினர்கள் குடியரசுத் தலைவரைச் சந்தித்து மனு சமர்ப்பித்தனர்.

அதில் கூறப்பட்டுள்ளதாவது:- அதிமுக தலைவர்களை பழிவாங்கும் வகையில் திமுக அரசு பல கிரிமினல் வழக்குகளை தொடுத்துள்ளது. இவ் வழக்குகளின் நியாயமான விசாரணைகளை பாதிக்கும் வகையில் திமுகவும், தமாகாவும் பிரச்சாரம் செய்கின்றன. தமாகா தலைவர் மூப்பனார் உங்களுக்கு அனுப்பிய கடிதத்தில் உணமையை மறைத்து தவறான தகவல்களை அளித்துள்ளார். குடியரசுத்தலைவரை திசைதிருப்பும் வகையில் அவரது கடிதம் அமைந்துள்ளது. சிறப்பு நீதிமன்றம் அமைத்தது தொடர்பாக சரியான தகவல்களை நாங்கள் இந்த மனு மூலம் உங்களுக்கு தெரிவிக்கிறோம். தமிழ்நாட்டிலும் பாண்டிச்சேரியிலும் அதிமுக பெரிய கட்சி. கர்நாடகம், ஆந்திரம், மகாராஷ்டிரம், குஜராத், கேரளம், அந்தமான், ஆகிய மாநிலங்களிலும் இக்கட்சிக்கு ஏராளமான கிளைகள் உள்ளன. ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் அதிமுக தலைவர்கள் மீது திமுக பல ஊழல் வழக்குகளை தாக்கல் செய்துள்ளது. 17-4-97 அன்று தமிழக அரசு மூன்று சிறப்பு நீதிபதிகளை நியமித்து உத்தரவு வெளியிட்டது.

அதன்பிறகு 30-4-97 அன்று இந்த வழக்குகள் எல்லாம் மூன்று நீதிபதிகளிடம் மாற்றப்பட்டன. இது போன்ற வழக்குகளை வேறு நீதிபதிகளிடம் மாற்ற தமிழக அரசுக்கு அதிகாரம் இல்லை. எந்த வழக்கை எந்த நீதிபதி விசாரிக்க வேண்டும் என்று முடிவு செய்ய மத்திய அரசுக்கு மட்டுமே அதிகாரம் உள்ளது. இவ்வாறு அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

# இந்திய கப்பற்படை நியமனங்களில் குழப்பம்!

இந்திய கப்பற்படையின் துணைத்தளபதி நியமனத்தில் குழப்பம் நீடிப்பதாக இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்தியக் கப்பற்படையின் முதன்மை அட்மிரல் விஷ்ணு பகத் அவருக்கு கீழ் கப்பற்படை மாலுமிகளின் இணை தளபதியாக நியமிக்கப்பட்டவரை பொறுப்பு ஏற்கவிடாமல் தடுத்து வருகிறாா.

இந்திய கப்பற்படையில் கப்டன் முதல் உயர் அதிகாரிகளை நியமிக்க முதன்மை அட்மிரலின் ஆலோசனை பெற வேண்டும் என்ற விதி உள்ளது. இருந்தாலும் முதன்மை அட்மிரலின் ஆலோசனையை ஏற்றுத்தான் ஆகவேண்டும் என்ற விதி இல்லையென மத்திய அமைச்சரவையின் நியமனக்குழு கூறியுள்ளது.

தற்போது கப்பற்படை தளபதி விஷ்ணு பகத்தின் அதிகாரம் குறித்தும் அவரது நடவடிக்கைகளுக்கு எதிராகவும் பல இணைத் தளபதிகள் போர்க்கொடி தூக்கி உள்ளனர். இந்த பிரச்சனையை இராணுவ அமைச்சகமும் மத்திய அரசும் பேசி முடிவுகாண வேண்டி உள்ளது என்று மத்திய இராணுவ அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் கூறியுள்ளார்.

# சுதேசி இயக்கத்தை மக்களிடம் பரப்ப வலியுத்தும் மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் பெர்னாண்டஸ்!

இந்தியாவில் வலுவாக வேரூன்றி விட்ட பன்னாட்டு நிறுவனங்கள் வலுப்பெற்று விடாமல் தடுக்க முடிந்த இடங்களில் எல்லாம் சுதேசிப் பொருட்களையே வாங்கிப் பயன்படுத்தும் வகையில் புதிய சுதேசி இயக்கம் தேவை என மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் வலியுறுத்தினார்.

அகில் பாரதிய வித்யார்த்தி பரிஷத்தின் பொன்விழா மாநாட்டை மும்பையில் தொடக்கி வைத்து அவர் பேசினார். அவர் பேசியதாவது:- இதற்கு முன்னர் மத்தியில் ஆண்ட கட்சிகள் மாற்றிக் கொள்ள முடியாத பொருளாதாரக் கொள்கையை அமுல்படுத்தி விட்டன. அதன் விளைவாக பன்னாட்டு நிறுவனங்கள் நாட்டில் புகுந்துவிட்டன. 1977-ல் மத்திய அமைச்சரான போது கோகா-கோலா நிறுவனத்தை இந்நாட்டை விட்டே வெளியேற வைத்தேன். சுயச்சார்பு, தேசபக்தி ஆகியவற்றின் அடிப்படையில் நாட்டின் விடுதலைப் போராட்ட காலத்தில் சுதேசி இயக்கம் மக்களிடம் செல்வாக்குடன் திகழ்ந்தது. மக்களிடம் மீண்டும் அதனை பரப்ப வேண்டும். அதேசமயம் அதை நாட்டின் பாதுகாப்பு போன்ற விடயங்களில் கண்மூடித்தனமாக பின்பற்ற முடியாது. அயல்நாடுகளில் இருந்து நவீன ஆயுதங்களை தருவித்துத் தான் தீர வேண்டும்.

நாம் அணுகுண்டுகளை வெடித்து சோதனை செய்தது வல்லரசாகிவிடுவதற்காக அல்ல. எங்களிடம் வாலாட்ட வேண்டாம் என்று விஷமக்காரர்களை எச்சரிக்கத்தான். சுதேசியம் பேசும் பெர்னாண்டஸ் அயல் நாட்டு காரில் போகிறார் என்று என்னை விமர்சிக்கிறார்கள். இந்நாட்டில் தயாராகும் பியட் காரிலேயே அயல் நாட்டு என்னைத்தான் பூட்டுகிறார்கள் என்றார் அவர்.

# கோயில்களில் தமிழில் அர்ச்சனை 1008 போற்றிப் பாடல்கள் ஆய்வுக்கு தேர்வு!

சென்னையில் தமிழ் அர்ச்சனைக் குழுவின் ஏழாவது கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு அமைச்சர் தமிழ்க்குடிமகன் தலைமை ஏற்றார். குழு உறுப்பினருடன் சிறப்பு அழைப்பாளர்களாகப் பல்வேறு பெருநகரங்களில் இருந்து சிவாச்சாரியர்களும், பட்டாச்சாரியர்களும், ஓதுவார்களும் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் அரசு எடுத்துக் கொண்டுள்ள முயற்சியினை அனைவரும் பாராட்டினர். ஏற்கனவே 5 போற்றிகள் வெளியாகி உள்ளன. மேலும் ஆறு போற்றிகள் அச்சில் உள்ளன. நவகோள்களில் சூரியன், ராகு, கேது, சனி ஆகிய நான்கிற்கும் உரிய போற்றிப்பாடல்கள் வரிவரியாக படிக்கப்பட்டும், ஆதீனகர்த்தர்கள் தந்த திருத்தங்கள் அனைத்தும் சேர்க்கப்பட்டும் அரங்கேற்றப்பட்டன. எஞ்சிய கோள்களுக்குரிய போற்றிப் பாடல்களும் விநாயகர், சிவபெருமான், முருகேசன், திருமால், ஆகியோருக்குரிய 1008 போற்றிகளும் அறிஞர்களின் பார்வைக்கும் ஆதீனகர்த்தர்களின் கருத்துக்கும் அனுப்பப்பட்டு அடுத்த கூட்டத்தில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதென்று முடிவு செய்யப்பட்டது.

# எம்.ஜி.ஆர். நினைவுநாள் சமாதியில் தலைவர்கள் அஞ்சலி!

முன்னாள் முதல்வரும் நடிகருமான எம்.ஜி.ஆர் அவர்களின் 11-வது நினைவு நாளையொட்டி சென்னையில் உள்ள எம்.ஜி.ஆர் சமாதியில் தலைவர்கள் மலர் அஞ்சலி செலுத்தினர். எம்.ஜி.ஆர் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்திய ஜெயலலிதாவும் அதிமுக முன்னணியினரும் அங்கு போடப்பட்டிருந்த மேடையில் நின்று உறுதி மொழி எடுத்துக் கொண்டனர்.

எம்.ஜி.ஆர் அதிமுக பொதுச் செயலாளர் திருநாவுக்கரசு தலைமையில் லதா மற்றும் கட்சித் தொண்டர்கள் அண்ணா சிலையில் இருந்து ஊர்வலமாகப் புறப்பட்டு நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர். தி.க. தலைவர் வீரமணி தலைமையில் நூறு பேர் எம்.ஜி.ஆர் சமாதியில் அஞ்சலி செலுத்தினர்.

# வாய் மொழிகளும் கொசுறுச் செய்திகளும்

☺ மலையாளத் திரையுலகிற்கு முதலாவது தேசிய விருதைப் பெற்றுத்தந்த படம் 'செம்மீன்'. இந்தப் படம் தமிழகத்திலும் பெரிய வரவேற்பைப் பெற்றது. செம்மீனில் நடித்த முக்கிய கலைஞர்களான சத்யன், கொட்டாரக்கரா ஸ்ரீதரன் நாயர், எஸ். பி.பிள்ளை, இயக்குநர் ராமு கரியத், ஒளிப்பதிவாளர் மார்க்ஸ் பார்ட்லே, இசையமைப்பாளர் சலீம் சௌத்ரி, பாடலாசிரியர் வயலார் ராமவர்மா ஆகியோர் இன்று உயிருடன் இல்லை. ஆனால் அவர்களின் படைப்பு மறுபடியும் புத்துயிர் கொண்டு ரசிகர்களை மகிழ்விக்கப் புறப்பட்டிருக்கிறது.

*– தமிழன் எக்ஸ்பிரஸ் இதழில் இருந்து*

❀ ❀ ❀

☺ இதுவரையிலான பா.ஜ.க. அரசிற்கு நீங்கள் கொடுக்கும் மதிப்பெண்?

விடைத்தாளை இன்னும் திருத்தி முடிக்கவில்லை. முடிந்ததும் சொல்கிறேன். இதுவரை எழுதியதைப் பார்த்தால் நிறைய 'அடித்தல் திருத்தல்' இருப்பது புரிகிறது.

*– ஜூனியர் விகடனில் தமிழ்க் குடிமகன் பதிலில்*

❀ ❀ ❀

☺ இந்தியாவில் யார், யார் லஞ்சம் வாங்குகிறார்கள் என்று ஒரு பட்டியல் சமீபத்தில் தயாரிக்கப்பட்டது. பட்டியலில் முதலிடம் - அமைச்சர்கள்! கடைசி இடம் - தொலைபேசி அதிகாரிகள்.

*– ராணி வாராந்தரிர இதழில் இருந்து*

❀ ❀ ❀

☺ ஒரு படம் வெற்றியடைவதற்கு நடிகன் மட்டுமே காரணம் அல்ல! இதை அடித்துச் சொல்வதற்கு யாருக்குத் 'தில்' இருக்கிறது? படம் வெற்றி அடைவதென்றால் டைரக்டருக்கு பங்கு இருக்கிறது. வசனகர்த்தா, இசை அமைப்பாளர், பாடலாசிரியர், தயாரிப்பாளர் ஆகியோருக்கும் பங்கு இருக்கிறது. நடிகர் நடிகைகளுக்கும் பங்கு இருக்கிறது. ஆக, நடிகர் நடிகையர் மட்டுமே காரணமாக மாட்டார்கள்?. இதைப் புரிந்து கொள்ளாமல் கதாநாயகன், சிரிப்பு நடிகர் மட்டுமே காரணம் என்று அவர்கள் காலடியில் தொப்பு, தொப்பு தொப்பு என்று விழுகிறீர்களே, சம்பளத்தை கூட்டி கொடுக்கிறீர்களே, தப்பு என்று சொன்னால் கேட்பதில்லை!

சொல்கிற நான் அவர்களுக்கு வேண்டாதவனாகி விடுகிறேன். பிரச்சனைகளை உருவாக்கி அதை தலையிலும் தூக்கி வைத்துக் கொள்கிறீர்களே என்று கேட்டால் தவறாக நினைக்கிறார்கள்! 20 ஆண்டு காலமாக நான் தொடர்ந்து வெற்றி பெற்றுக் கொண்டிருக்கிறேனே அதைப் பார்த்தாவது திருந்தக் கூடாதா? ஒதுக்கி வைத்திருப்பதால் எனக்கு நட்டமேதும் இல்லை!

*– தேவி இதழில் டி. ராஜேந்தர்*

❀ ❀ ❀

☺ இந்த ஆண்டின் தொடக்கத்தில் திருவையாற்றில் நடந்த தியாகபிரும்ம உற்சவத்தில் 'தமிழில் பாடவேண்டும்' என்று மக்கள் கலை இலக்கிய கழகத்தினர் கிளர்ச்சி செய்தபோது 'தியாகையர் தெலுங்கில் மட்டும் தான் பாடினார். அவருக்கு எடுக்கும் விழாவில் தமிழ் பாடல் கேட்பது என்ன நியாயம்?' என்றார்கள். தமிழ்மொழியில் பாடாத தெலுங்கு பாடலாசிரியரின் விழாவில் தமிழ்ப் பாடல் பாடக் கேட்பது தவறு என்றால் - தெலுங்கு தெரியாத தமிழ் மக்களிடம்- தெலுங்கு தெரியாத பாடகர்கள்- முழுக்க முழுக்க தெலுங்கிலும் வடமொழியிலுமே பாடுவது மட்டும் எப்படி சரியாகும்?

*–நக்கீரன் இதழில் சின்னக்குத்தூசி*

❀ ❀ ❀

☺ சென்சார் போர்டோ, கோர்ட்டோ உங்கள் எதிராக தீர்ப்பு சொன்னால் உங்கள் நிலை?

படத்தை இப்போதிருக்கும் நிலையிலேயே 'ஓகே' செய்தால் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியை இங்கே வரவேற்று விளையாட வைப்பேன். இன்னும் நிறைய முஸ்லிம்களை அனுப்பி வையுங்கள் என்ற பங்களாதேஷ் அரசைக் கேட்பேன். இங்கேதான் போதுமான காலியிடம் இருக்கிறதே. தேவைப்பட்டால் தேசநலம் கருதி எங்கள் வீடுகளையும் காலி செய்து கொடுப்போம். இந்த தேசத்தின் மீது உங்களுக்கு இந்தளவுக்கு மரியாதை இல்லையென்றால் இது எக்கேடும் கெட்டுப் போகட்டும். ஃபயர் படத்தை அனுமதிதீர்கள் என்றால் கோட்ஸே நாடகத்தையும் அனுமதிக்க வேண்டும். அது தானே ஜனநாயகம். ஒரு அளவுகோல் தான் இருக்கவேண்டும்.

*– இந்தியா ருடெ இதழில் சினிமா சர்ச்சை பகுதியில் சிவசேனைத் தலைவர் பால்தக்கரே*

❀ ❀ ❀

☺ பெரியாரின் கொள்கைகள் இன்றைக்குப் பொருத்தமாக இல்லை என எவர் கூறியது? சமூக நீதிக்கும் சுய் மரியாதைக்கும் அவரது கொள்கைகள் இன்றும் தேவைப்படுகின்றன. பெரியாரின் கொள்கைள் எக்காலத்திற்கும் பொருந்தும்.

*– அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் சீதாராம் கேசரியின் கூற்று*

❀ ❀ ❀

# டெல்லியில் மூடுபனி! போக்குவரத்து பாதிப்பு

டெல்லி நகரில் அடர் பனிமூட்டம் மற்றும் மோசமான வானிலை காரணமாக போக்குவரத்துகள் பாதிப்படைந்தது. எதிரில் வருபவர்களைப் பார்க்க முடியாத அளவுக்கு பனியின் தீவிரம் இருந்தது. விமான நிலையத்தை சுற்றியுள்ள பகுதிகளில் அடர்ந்த பனிமூட்டம் காணப்பட்டதால் ஆறு நாட்களுக்கும் மேலாக விமானப் போக்குவரத்து பாதிப்புற்றது. இதனால் ஏனைய விமான நிலையங்களில்: பயணிகள் சிக்கித் தவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CLAIR DE LUNE

**Nettoyage Industriel**

# இன் புதிய படைப்பு

## உங்கள் வீட்டில் பூச்சிகள் தொல்லையா ?

## இனி வேண்டாம் கவலை

**புதிய அறிமுகம்**

அமெரிக்க, ஜேர்மன் கூட்டுத்தயாரிப்பில் கரப்பான் பூச்சிகளை அறவே ஒழிக்க பூச்சிநாசினி

பாதுகாப்புடன் கூடிய ஒரு வருடத்திற்கு மேற்பட்ட உத்தரவாதத்துடன் வீடுகள், உணவுவிடுதிகள், அலுவலகங்கள் வியாபார நிலையங்கள், எங்கும் பயன்படுத்தக் கூடியது.

**உங்கள் வீடுவரையான சேவை**

**விலையோ குறைவு = திருப்தியோ அதிகம்**

**துர்மணமற்றது = விஷமற்றது**

பிரான்சின் ஏக வினியோகஸ்தர்கள்

CLAIR DE LUNE

Nettoyage Industriel

வினியோகஸ்தர்கள்

**15.01.1999 வரை 20% விலைக்கழிவுடன்**

**MOTHER SARL**

17 Av.Paul Vaillant Couturier,
93120 Lacourneuve, France
Tel/Fax: 0148351915

**LITTLE INDIA**

15, Av. Paul Vaillant Couturier,
93120 Lacourneuve, France
Tel/Fax: 0148352850


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆபிரிக்கா

# கபிலா: எதிர்த்தரப்பினர் லிபியாவில் பேச்சுவார்த்தை

26.12.98

கொங்கோ ஜனநாயகக் குடியரசின் ஜனாதிபதி லோரன் கபிலாவும் அவரை ஆட்சியில் இருந்து அகற்றப் போரிடும் எதிர்த்தரப்பின் முக்கியஸ்தர்களும் லிபியத் தலைநகர் திரிப்போலியில் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளனர் என சர்வதேச செய்தி நிறுவனம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. சுமார் ஐந்து மாதங்களுக்கு மேலாக கொங்கோவில் இடம் பெற்றுவரும் யுத்தத்தை முடிவுக்குகொண்டு வருவதில் லிபியத் தலைவர் கடாபி மத்தியஸ்தம் வகிக்க தயார் என அறிவித்துள்ளார். ஆனால் லிபியாவிற்கு வருகை தந்துள்ள இரண்டு தூதுக்குழுவினரும் இதுவரை நேரடியாக சந்தித்துக்கொண்டனரா என்பது உறுதி செய்யப்படவில்லை. ஆனால் இரு தரப்பினரும் இரகசிய சந்திப்புக்கள் பலவற்றை மேற்கொள்வார்கள் என நம்பப்படுகிறது.

இதற்கிடையே இம்மாதம் 27ம் 28ம் திகதிகளில் சாம்பியாவில் இடம்பெற இருந்த இரண்டாம் கட்ட அமைதிப் பேச்சுக்களை ஆபிரிக்க தலைவர்கள் பிற்போட்டுள்ளார்கள். கொங்கோ - ஜனநாயக குடியரசுத்தலைவர் கபிலா இப்பிரச்சினையில் நேரடியாக கலந்து கொள்வதானால் அதற்கு முன்பாக தனது நாட்டிற்குள் நிலைகொண்டுள்ள ருவண்டா, உகண்டா நாட்டுப் படைகள் வெளியேற வேண்டும் எனக் கூறியுள்ளார். 1997-ல் அதுவரை காலமும் பதவியில் இருந்த மொபுட்டுவின் ஆட்சியை அகற்றி அங்கு கபிலாவின் ஆட்சியை ஏற்படுத்த ருவாண்டாவும், உகண்டாவும், கபிலாவுக்கு பெரும்துணை புரிந்தன. ஆனால் இன்று அவரது ஆட்சியில் இலஞ்சம், சர்வாதிகாரத் தன்மை, இனப்பழிவாங்கல் போன்றவை மலிந்துள்ளன எனக் கூறி அவரிடம் இருந்து பிரிந்துபோய் புதிதாக ஆரம்பித்துள்ள எதிர்ப்பியக்கத்தை இந்நாடுகள் ஆதரிக்கின்றன. கபிலா இவ்விரு நாடுகளுடனும் பேச்சுக்களை நடத்தி அமைதியை ஏற்படுத்த தான் தயார் என்றாலும், படை விலகல் முதலில் நடைபெறவேண்டும் எனக் கூறிவருகிறார்.

ஆபிரிக்கா

# அங்கோலாவில் கடும் மோதல்! பல நூறுமக்கள் பலி

26.12.98

அங்கோலாவில் தணிந்து போயிருந்த மோதல்கள் மீண்டும் ஆரம்பமாகியுள்ளன. மத்திய அங்கோலா நகரான குயிட்டோவின்மேல் அங்கோலா ஐக்கிய விடுதலை முன்னணியினர் (Unita) பாரிய பீரங்கித் தாக்குதல்களை மேற்கொண்டனர். கடந்த 24ம் திகதி ஆரம்பித்த பீரங்கித் தாக்குதல்கள் மறுநாள் வரை நீடித்ததாயும் குறைந்தது 200 பேராவது இந்த தாக்குதல்களால் கொல்லப்பட்டிருக்கலாம் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. இப்பகுதியில் நிலைகொண்டுள்ள Unita படையினரின் நிலைகள் மீது டிசெம்பர் 4ம் திகதி முதல் அங்கோலா விமானங்களும் இராணுவமும் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றன. குயிட்டோ பிராந்தியம் முற்றாக Untia படையினரால் முற்றுகையிடப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. சுமார் 100,000 மக்களைக் கொண்ட குயிட்டோவில் மோதல்களின் காரணமாக மேலும் 50,000 பேர்வரையிலானவர்கள் அதிகரித்துள்ளன்ர். இவர்களுக்கான உணவு விநியோகம் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளதாக சர்வதேச உதவி நிறுவனம் ஒன்று கூறியுள்ளது.

1975ம் ஆண்டு போர்த்துக்கல் நாட்டிடம் இருந்து சுதந்திரம் அடைந்த அங்கோலாவில் 94ம் ஆண்டுவரை அரச எதிர்ப்பு போர் நடந்துவந்தது. 1994ம் ஆண்டு சாம்பியாவின் லுசாக்க நகரில் அமைதி ஒப்பந்தமொன்று அரசிற்கும் Unita விற்குமிடையே கைச்சாத்திடப்பட்டது. இதன்படி Unita தனது 70,000 பலம் மிக்க கெரில்லா இராணுவத்தை கலைப்பது என்றும் சமூக நல நடவடிக்கைகளில் அவர்களை பங்குகொள்ளவைப்பது என்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது. இதற்கிடையே Unita அமைப்பு அங்கோலா அரசு தனது ஒப்புதல்களை நிறைவேற்றவில்லை என்றும் அரசாங்கம் Unita தனது போராளிகளை மீண்டும் ஒன்றுதிரட்டி யுத்தத்துக்கு தயாராவதாயும் குற்றம்சாட்டிக்கொண்ட நிலையில், அந்நாட்டில் மீண்டும் யுத்தம் ஏற்பட்டுள்ளது.

ஆசியா

# மீண்டும் செயற்படும் ஆப்கான் முகாம்கள்

கடந்த ஒகஸ்ட் மாதம் தாக்குதலுக்குள்ளான கெரில்லாப் பயிற்சி முகாம்கள் ஆப்கானிஸ்தானில் மீண்டும் செயற்படத் தொடங்கியுள்ளதாக பாகிஸ்தான் நாளேடொன்று செய்தி வெளியிட்டுள்ளது. மீண்டும் செயற்படத் தொடங்கியுள்ள முகாம்கள் தம்மை எதிர்காலத்தில் பாதுகாப்பதற்கான பாதுகாப்பு முன்னேற்பாடுகளைக் கொண்டிருப்பதுடன், இம்முகாம்கள் அனேகமாக மலைக்குகைப் பகுதிகளிலேயே செயற்படுவதாகவும் அந்த நாளேடு தெரிவிக்கின்றது.

ஆசியா

# பிக்குமாருடன் கொரிய பொலிசார் கைகலப்பு

தென்கொரியாவில் உள்ள சோகி பௌத்த ஆலயத்திற்குள் ஆயிரத்திற்கும் மேற்பட்ட கலக மடக்கும் பொலிசார் நுழைந்த போது, அவர்களுக்கும் ஆலயத்தில் தங்கியிருந்த பிக்குமார்களுக்குமிடையில் மோதல்கள் இடம்பெற்றன.

பௌத்த ஆலயங்களை நிர்வகிப்பது, மற்றும் நிதிகளை கையாள்வது சம்பந்தமாக சோகி ஆலயத்திலுள்ள பௌத்த பிக்குகளின் இரு கோஷ்டிகள் பிளவுபட்டுள்ளன. கடந்தசில மாதங்களாக இக்கோஷ்டிகளுக்கிடையே கைகலப்புக்கள் நிகழ்ந்து வருவதால் பலர் காயமடைய நேர்ந்தது. இந்நிலைமையைத் தவிர்க்கும் முகமாக ஆலயத்தை பொலிசார் பொறுப்பேற்க முனைந்தவேளையிலேயே, இக் கைகலப்புக்கள் ஏற்பட்டுள்ளன. ஆலய வளவிற்குள் பொலிசார் நுழைவதைத் தடுக்க முயன்ற பிக்குகள் பொலிசாரை நோக்கி பெற்றோல் குண்டுகளையும், கற்களையும் வீசினர். பொலிசாரும் பதிலுக்கு தடியடிப்பிரயோகம் செய்தனர். எனினும் பலத்த பிரயத்தனத்தின்பின்னர் பொலிசார் ஆலயத்திற்குள் நுழைந்து நிலைமையைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தனர்.

அமெரிக்கா

# கிளின்டனுக்கெதிரான பிரேரணை செனட்டில் நிறைவேறாது?

அமெரிக்க ஜனாதிபதி கிளின்டன் மீதான அரசியல் குற்றப் பிரேரணை (இம்பீச்மென்ட்) செனற் சபையில் நிறைவேறுவதற்குத் தேவையான 2/3 பெரும்பான்மை கிடைக்கப்போவதில்லை என செனற் சபையின் குடியரசுக் கட்சித் தலைவர் அறிவித்துள்ளார். கிளின்டன் மீதான இரு பிரேரணைகளும் வாக்கெடுப்பிற்கு விடப்படும் சந்தர்ப்பத்தில், 67 வாக்குகள் அவற்றிற்கு ஆதரவாகக் கிடைத்தால் மாத்திரமே வெற்றி பெறும். ஆனால் இந்தளவிற்கு ஆதரவான வாக்குகள் கிடைக்காதென அவர் தெரிவித்தது டன், உத்தியோகபூர்வமற்ற முறையில் தான் நடத்திய வாக்கெடுப்பொன்றிலேயே இது தெளிவாகியுள்ளதாயும் தெரிவித்துள்ளார்.

ஆபிரிக்கா

# ஐ.நா விமானம் அங்கோலாவில் விபத்துக்குள்ளாகியது

அங்கோலா அரசாங்கமும் Unita எனப்படும் அங்கோலா ஐக்கிய விடுதலை முன்னணியினரும் குறைந்தது 48 மணிநேர யுத்த நிறுத்தம் ஒன்றினை மேற்கொண்டு அந்நாட்டில் விபத்துக்குள்ளாகி வீழ்ந்த தமது விமானம் சம்பந்தமான விசாரணைகளை மேற்கொள்ள உதவவேண்டும் என ஐ.நா சபை கோரிக்கை விடுத்துள்ளது.

அங்கோலாவின் ஹீராம்போ நகரில் இருந்து சாவுரிமோ நகரை நோக்கிச் சென்றுகொண்டிருந்த வேளையிலேயே அமெரிக்க தயாரிப்பு 'லொக்கீட்' C-130 ரக விமானம் விபத்துக்குள்ளாகியது. இவ் விமானம் விபத்துக்குள்ளாகிய சமயம் அதனுள் பதின்நான்கு பேர்கள் இருந்துள்ளனர். நான்கு அங்கோலா நாட்டுப் பிரஜைகளும், ஒரு அவுஸ்திரேலியரும், இரண்டு ரஷ்யர்களும், ஒரு தென்னாபிரிக்கரும் இவர்களுக்குள் அடங்குவார்கள்.

விமானம் விபத்துக்குள்ளாகியதைத் தொடர்ந்து ஐ.நா தனது விமானப் பயணங்கள் யாவற்றையும் இடைநிறுத்தி வைத்துள்ளது. ஐநாவின் பொதுச் செயலர் கோபிஅனான் அங்கோலாவில் போரில் ஈடுபட்டுள்ள இருதரப்பினரும் விபத்துக்குள்ளாகிய விமானம் பற்றிய விபரங்களையும் மேலதிக விசாரணைகளையும் மேற்கொள்ள உதவவேண்டும் எனக் கோரினார். இதற்கிடையே இரு தரப்பினரும் இவ் விமானத்தை தாம் தேடுவதாக கூறியுள்ளனர். கடந்த சில தினங்களாக இப்பகுதியில் பெரும் மோதல்கள் இடம்பெற்று வருவதால் விசாரணைகள் தாமதமடைந்து வருவதாகவும் ஆனால் இதுவரை தமது படையினர் எந்தவித விமான பாகங்களையும் கண்டுபிடிக்கவில்லை என்றும் Unita வின் செயலாளர்நாயகம் தெரிவித்துள்ளார்.

ஆசியா

# பதவி விலக விரும்பும் நேபாளப் பிரதமர்

நேபாளத்தில் புதிய கூட்டுக் கட்சிகளின் ஆட்சி அமைப்பதற்கு வழிவகுக்கும் முகமாக தான் பதவி விலக விரும்புவதாக நேபாளப் பிரதமர் கிரிஜா பிரசாத் கொயிராலா கூறியுள்ளார். அடுத்த ஆண்டில் நேபாளத்தில் நடைபெற இருக்கும் தேர்தல்களை எதிர்நோக்கும் விதத்திலேயே புதிய கூட்டுக் கட்சி ஒன்று உருவாக்கப்பட இருக்கின்றது. நேபாள மன்னர் பாராளுமன்றத்தைக் கலைக்குமாறு கோரியதையடுத்து, பிரதமர் கொ்யிராலா நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றினை எதிர்நோக்கியுள்ளார்.


## வீடு வாடகைக்கு

Colombes (92) இல் SNCF ற்கு மிகவும் அருகாமையில் திருத்த வேலைகள் செய்து மிகவும் நல்ல நிலையிலுள்ள 2 Pieces வீடு வாடகைக்கு உண்டு.
**வாடகை 3250F மட்டுமே.**
சகல விபரங்களையும் பெற தொடர்பு கொள்ளவும் (21.00 மணி முதல் 22.30 வரை)
**சிவா - Tel: 0146716691 - Mobil: 0609911266**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CLAIR DE LUNE

## Nettoyage Industriel

# புதுவருட நல்வாழ்த்துக்கள்

எமது ஸ்தாபனத்தின் வளர்ச்சிக்கு உதவிபுரிந்த நல் உள்ளங்களுக்கும், தொழிலாளர்களுக்கும், முன்பு தொழில் செய்தவர்களுக்கும், ஸ்தாபன வளர்ச்சிக்கு உதவிய அனைத்து வர்த்தக நிறுவனங்களுக்கும், இந் நிறுவனத்தை ஆரம்பித்த ஸ்தாபகர்களுக்கும் **'Clair de Lune'** தனது நன்றியுடன் சேர்ந்த புதுவருட வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றது.

CLAIR DE LUNE
Nettoyage Industriel

குறிப்பு: பகுதி / முழு நேரமாகவோ வேலை செய்ய விரும்புவோர் 05.01.99 இலிருந்து தொடர்புகொள்ளவும்.

*16 Rue des Freres Montgolfier, 93150 Le Blanc-Mesnil - Tél: 01 48 65 98 31 Fax: 01 48 65 98 33*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழமுரசு
Eelamurasu Weekly
"உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை"

# 1999 பலப்படுத்தி நுழைவோம்

'ஜீவ காருண்யம்' பேசும் கசாப்புக்கடைக்காரனுக்கு ஒத்த வகையில் சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா 1999-ம் ஆண்டிலாவது 'சமாதானப் பூக்கள்' பூக்கட்டும் என்று முதலைக் கண்ணீர் வடித்துள்ளார்.

சமாதானத்தின் குரல்வளையை நசுக்கி தமிழ் மக்களது அடிப்படை உரிமைகள் எல்லாவற்றையும் பயங்கரவாதமாக முத்திரை குத்திய சந்திரிகா அரசு, தமிழர் தாயகத்தின் மீது நடாத்தும் போருக்காக ஆயுத தளவாடங்களை வாங்கிக் குவித்துக்கொண்டு இன்னொரு சமாதான ஆண்டுக்காக போலி 'ஏக்கம்' ஏங்கியுள்ளது.

சிறீலங்கா தேசத்தின் இருபெரும் கட்சிகளும் கடந்த ஆண்டுகளைப் போலவே 1998-ம் ஆண்டும் பேரினவாத வெறியினை விதைத்து பலனையும் 'அறுவடை' செய்துள்ளன.

'சிங்களம் மட்டும்' என்ற வெறியிலிருந்து முனைப்புக் கொண்ட இக் கட்சிகளுக்கு சிங்களத்தின் புத்திஜீவிகளினதும் பௌத்த மத குருமாரினதும் ஆதரவு என்றென்றும் வழங்கப்பட்டு தமிழ் தேசியத்தின் உரிமைகள் நசுக்கப்பட்டமை, வரலாற்றில் பதிவான விடயங்கள்.

'சீதை-இராமர் ஆலயத்திற்கு' காணி ஒதுக்கப்படுகிறது, இதைக் கேட்பார் இல்லையா? என்று கடந்தவாரம் கிளம்பிய சிங்கள மதவாதத்தில் கூட பேராதனைப் பல்கலைக் கழகத்தின் சிங்கள புத்தி ஜீவிகள் பலரும் கலந்துகொண்டமை இதற்கு நல்ல ஒரு உதாரணமாகும்.

மறுபுறத்தே புலிகளுடன் சமாதானம் பேசவேண்டும் என்று கோரும் ஐக்கியதேசியக் கட்சியும் இராணுவத்திற்கு அரசியற் தலையீடு இல்லாது போர் நடாத்தும் வல்லமை கொடுக்கப்பட வேண்டும் என்று தனது கதிர்காம மாநாட்டிலே (உள்ளக்கிடக்கையை) வெளிப்படுத்தியுள்ளது.

98-ம் ஆண்டு தமிழ் தேசியத்திடமிருந்து பல 'களப் படிப்பினைகளை' சிங்களதேசம் பெற்றுக்கொண்டபோதிலும் 'கேடுகெட்ட' நிலையிலிருந்து மாறவே மாட்டேன் என அடம்பிடித்து ஒடுக்கு முறைகளை இன்னும் இன்னும் பிரயோகிக்கத்தான் முனைப்புக்கொண்டுள்ளது. ஆனால் வெறும் உதட்டளவில் சர்வதேசத்திற்காக சமாதானப் 'பல்லவி' பாடுகிறது.

போலி அரசியல்வாதிகளின் போலி சமாதான வாழ்த்துக்களை ஏற்கும் நிலையில் தமிழ் தேசியம் இன்று இல்லை. 'நிரந்தரமான - உண்மைச் சமாதானத்தின்' மீது தான் தமிழர் தாயகத்திற்கு என்றும் நம்பிக்கை உண்டு. போலி சமாதானம் பேசி 'பலதரப்பும்' கழுத்தறுப்புச் செய்ததை தமிழர் தாயகம் இன்னும் மறக்கவும் இல்லை.

எனவே சிங்கள தேசத்தின் வரலாற்றுத் துரோகங்களை தமிழ் தேசியத்தின் ஒவ்வொரு குடிமக்களும் ஒருமுறை இவ்வேளை புரட்டிப் பார்த்து போராடும் கரங்களை வலுப்படுத்தியபடி இன்னொரு ஆண்டிற்குள் நுழையவேண்டுமென்பதே நீதியாகும்.

# மக்கள் தீர்மானிக்கும் வெளியுறவுக் கோட்பாடு

## பார்வை

சிங்கள ஜனாதிபதி சந்திரிகா விஜயகுமாரதுங்க மற்றுமொரு இந்தியப் பயணமொன்றை மேற்கொண்டுள்ளார். இந்தியாவுடன் 'பொருளாதார உடன்பாடொன்றை' மேற்கொள்வதற்கான பயணம் என இது 'வர்ணிக்கப்படுகிறது'. இப் பயணம் தொடர்பாக கருத்து வெளியிட்ட 'The Hindu' நாளேடு 'அவரது மூன்றுநாள் விஜயத்தின்போது இரு நாடுகளும் பிராந்தியத்தின் பாதுகாப்பு விடயம் தொடர்பாகவும் அதற்கு அப்பாலும் நெருங்கிய ஆய்வொன்றை மேற்கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது' எனக் கூறுகிறது.

'பாதுகாப்பு விடயம்' என்பதை தமிழ் - சிங்கள தேசிய முரண்பாடு, புலிகளின் பலம், ஆற்றல் என்பன சார்ந்தது என்பதை எவரும் ஊகிக்கலாம்.

சிங்கள அரசு இந்திய மத்திய அரசிடம் புலிகளை அழிப்பதற்கான தமது நிகழ்ச்சி நிரலை மீள ஒருமுறை சமர்ப்பித்து இந்திய ஆட்சியாளர்களை நாடி பிடித்துப்பார்க்க எடுக்கும் முயற்சியே இது. புதிய இந்திய மத்திய அரசின் வெளிவிவகார கோட்பாடுகளில் நிலவும் பொதுவான மாற்றங்கள், இவ் ஆட்சியின் பங்குதாரர்களாக விளங்கும் தமிழர் ஆதரவு அணிகளின் நிலைப்பாடுகளினால் ஏற்பட்டுள்ள தாக்கம் என்பன சிங்கள ஆட்சியாளர்களை அண்மைக்காலங்களாக குழப்பத்திற்குள்ளாக்கி வருகின்றன.

தமிழர்களின் விடுதலைப்போரை நசுக்குவது என்ற பொதுத் திட்டத்தில் இந்தியாவை இழுத்துச் செல்லவே சிறீலங்கா முயல்கிறது. தமிழர்களின் விடுதலைப் போரை நசுக்குவதை இந்திய பாதுகாப்பு நலன்களுடன் தொடர்புபடுத்தும் கோட்பாடுகளை சிங்கள அரசு 'காலத்திற்குக் காலம்' உருவாக்கிவருகிறது.

ஒருபகுதி இந்திய உயர்மட்ட அதிகாரிகள், உயர்மட்ட பத்திரிகையாளர்கள் என்போர் இப் பொதுத் திட்டத்தில் தம்மோடு நிற்கின்றார்கள் என சிங்கள அரசு கருதுகின்றது.

இந்திய தமிழீழ-நிலைப்பாடுகளுக்கு இடையேயான தப்பபிப்பிராயங்களையும், அரசியல் நிலைப்பாடுகளையும் கையாண்டு புலிகள் மீது தேசவிரோத சாயம் பூசுவதற்கு சில பிரதான இந்திய பத்திரிகைகள் தம்மோடு முன்னின்று உழைக்கின்றன என்பதை சந்திரிகா அரசு அறியும். இத் தற்காலிக குறுகிய ஆதரவின் முண்டு கொடுத்தலில் நின்றுகொண்டு தமிழர்களின் அரசியல் கோரிக்கையை சிதைத்துவிடலாம் என்ற சந்திரிகாவின் 'கனவு' கேள்விக்குரியதாகின்றது.

Hindu ராம், துக்ளக் சோ, முகவரியில்லாத சுப்பிரமணியசாமி போன்ற 'புத்தி ஜீவிகள்'(?) இந்திய நலன்களை பிரதிபலிப்பவர்கள் அல்ல. இந்தியாவின் மக்களினால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனநாயக பூர்வமான ஆட்சியாளர்களும் அல்ல.

இவர்கள் பின் கதவு வழியால் இந்திய ஆட்சி அமைப்பின் கோட்பாட்டு திட்டமிடல் பணிகளில் தலையை நுழைக்கும் தனி நபர்கள். இவர்களின் கணிப்பும், வெளிப்படுத்தல்களும் அவர்களது குறுகியபார்வை சார்ந்தவையாகும். இந்திய ஜனநாயகத்தின் குறைபாடுகளை மட்டுமே நம்பி அதன் மீது செழித்து வளர முயலும் தரப்பினர்களே இவர்கள்.

ஆனால் இந்திய நலன்கள் - தமிழக நலன்கள்-தமிழீழ நலன்கள் என்பன ஆழமானவை, விசாலமானவை, தவிர்க்க முடியாதவை, நீடித்து நிற்கப்போவன. இதனை தீர்மானிக்கும் இறுதியான முடிவான சக்திகள் அரசியல் சத்திகளே ஆகும். இது வரலாற்று பூர்வமானது; புவியியல், உலக அரசியல், பொருளாதார நலன்களை கணிப்பிட்டு வகுக்கப்படுவது.

இந்திய-தமிழீழ உறவுகள் தமிழீழம் தனக்கான நலன்களையும், தேவைகளையும் கொண்டுள்ளது என்ற புரிந்துகொள்ளளின் அடிப்படையில் உருவாக்கப்படுவது. தமிழீழ நலன்களை முற்றுமுழுதாக நிராகரித்துவிட்டு சிங்கள தேசத்துடன் உடன்பாடுகளை மேற்கொள்வதன்மூலம் தனது நலன்களை பாதுகாக்கலாம் என எண்ணி இந்தியா செயற்படும் என எதிர்பார்ப்பது வியப்புக்குரியதாகும்.

தமிழ்—சிங்கள தேசிய முரண்பாடு இன்று சர்வதேச மயப்பட்டுவருகிறது. அமெரிக்க—ஐரோப்பிய தரப்புக்களின் கோட்பாடுகளிலும், அணுகுமுறையிலும் இம் முரண்பாட்டை அங்கீகரிக்கும் மாற்றம் இடம்பெற்று வருகிறது. ஐக்கிய நாடுகள் சபையில் தென்னாபிரிக்க அதிபர் இத் தமிழ் — சிங்கள இனமுரண்பாட்டை சுட்டிக்காட்டி, தீர்வுக்காக ஐநா. உழைக்க வேண்டும் எனக்கேட்டார். பிரித்தானிய அரசு இச் சிக்கலின்போக்கை நீக்க மூன்றாம் தரப்பு உதவி தேவை என்பதை வலியுறுத்துகின்றது.

இச் சர்வதேச சூழ்நிலைகளில் இந்தியா முரண்பாடு பற்றி கவலைகொள்ளாது சந்திரிகாவுடன் கைகோர்த்து 'புலிவேட்டை' நடாத்தும் என்பது யுக்திபூர்வமானதல்ல.


மாறாக இந்திய கூட்டரசின் பங்காளி கட்சிகளான தமிழகக் கட்சிகள் ஒரு எல்லைக்கு அப்பால் தமிழர் தேசம் மீது சிங்கள அரசு புரிய முயலும் வன்முறையை அனுமதிக்கமாட்டார்கள் என்பது இயற்கையான விதியாகும். ஏனெனில் தமிழ்நாட்டின் அரசியல்—பண்பாட்டு சூட்டினை பிரதிபலிக்கவேண்டிய தேவைகளை இவ் அரசியல் கட்சிகள் கொண்டுள்ளன.

சிங்கள அரசு நகர்த்தமுயலும் தனி மனிதர்கள் சார்ந்த இந்தியா தொடர்பான கொள்கைத் திட்டங்களுக்கு எதிராக தமிழர்கள் இந்தியாவின் மக்கள் சார்ந்த, நலன் சார்ந்த (அல்லது நலனை பாதிக்காத) கொள்கை திட்டமிடல்களை பின்பற்றுகின்றனர்.

சிங்கள அரசு, தமிழர்களின் அரசியல் இலட்சியத்தினை நசுக்கவேண்டுமாயின் பெரும் இனப்படுகொலையை நடாத்தியாக வேண்டும். இதன் மறுபுறம், வளர்ந்துவரும் தமிழர் விடுதலைப் போராளிகள் சிங்களப்படைகளை விரட்டி தனித்துவமான சுதந்திரமுள்ள தேசத்தை பிரகடனப்படுத்துவர்.

இவ்விரு நிலைப்பாடுகளையும் இந்திய அரசும், திட்டமிடல் விற்பன்னர்களும் கருத்தில் எடுத்தே ஆக வேண்டும். இவ்விரு நிலைப்பாடுகளிலும் தமிழர் பற்றிய ஆதரவு பிரக்ஞை இந்திய கோட்பாடுகளில் பிரதிபலிக்காதுவிடின் அது தமிழ்நாட்டின் எதிர்பார்ப்புக்களை நிராகரிக்கும் போக்கினையே வெளிப்படுத்தும். தமிழ்நாடு சிங்களத்தின் மிகப்பெரிய இனப்படுகொலைகளை அனுமதியாது. அவ்வாறான இனப்படுகொலைகளை துக்ளக் 'சோவி'னால் அல்லது Hindu ராமினால் மூடிமறைக்கவோ நியாயப்படுத்தவோ முடியாது. ஈழத் தமிழர்கள் தமிழ்நாட்டின் அல்லது இந்தியாவின் நலன்களை கருத்தில் எடுத்தே செயற்படுபவர்கள். அவர்களது சர்வதேச போக்கும் இப்பாதையினூடுதான் பயணம் செய்கிறது.

- ராஜா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20ம் நூற்றாண்டின் சிங்களக்கட்சிகளின் சூனிய-வாதம்!

**— கொழும்பிலிருந்து ஊரோடி**

1999ம் ஆண்டு பிறக்க இன்னும் சில நாட்களே இருக்கின்றன. வரப்போகும் 99ம் ஆண்டு புதிய ஆண்டு என்பதை விட 20ம் நூற்றாண்டின் இறுதி ஆண்டு என்பதே சரியானதாகும். 98ம் ஆண்டில் பொ.ஜஐ.மு. அரசு சாதித்தது என்ன? என்ற கேள்வியைவிட 20ம் நூற்றாண்டில் சிறீலங்கா அரசு சாதித்த விடயங்கள் எவை? என்ற கேள்வியே 99ம் ஆண்டு தைமாதத்தில் இருந்து மார்கழி மாதம் வரை கேள்விக் கணையாக இருக்கப் போகின்றது. சர்வதேச ரீதியாக ஒவ்வொரு அரசுகளும் 21ம் நூற்



றாண்டிற்கான முன்னேற்பாடுகளைச் செய்யும்போது சிறீலங்கா அரசு யதார்த்த நிலையை உணராத பிற்போக்கான அரசியல் செயற்பாடுகளையே முன்னெடுக்கின்றது. அதனால் ஏற்படப் போகின்ற சில கசப்புகளான விளைவுகளுக்கான பல்வகைப்பட்ட முன் எச்சரிக்கைகளின் இறுதி விளைவுகளை வரப்போகும் 99ம் ஆண்டில் சிறீலங்கா அரசு எதிர்கொள்ளப்போகின்றது என்பதை தீர்க்க தரிசனமான அரசியல் எதிர்வு கூறலாகும். 20ம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலேயே பிரித்தானியக் குடியேற்றம் சிறீலங்காவில் விடுபட்டது. எனினும் 1919ல் உருவாக்கப்பட்ட தேசிய இயக்கம் 1921ல் பிளவுபட்டதும் தமிழ் சிங்கள எதிர்ப்புணர்வுகள் வளர ஆரம்பித்தது ஆங்கிலத்தில் 'சிலோன்' தமிழில் 'இலங்கை' சிங்களத்தில் 'சிறீலங்கா' என அன்று அழைக்கப்பட்ட இந்தத்தீவில் 1921ல் வளர ஆரம்பித்த இனவேறுபாடுகள் பல்வகைப்பட்ட மாறுதல்களோடு வளர்ச்சியடைந்த போதும், பிரித்தானிய குடியேற்றவாதத்திற்கு எதிராக அன்று கடுமையாக ஈடுபட்ட தமிழ்த் தலைவர்களின் புண்ணியத்தால் 1948ல் சுதந்திரம் அடைந்து 1972ம் ஆண்டுதனியே சிங்களவர்களை மையப்படுத்தி 'சிறீலங்கா' என பெயர் பெற்றது. வடக்கு கிழக்கு பகுதிகளான தமிழீழ பகுதிகள் அரசியல் ரீதியாக புறக்கணிக்கப்பட்டன. 1972 ல் பிரித்தானியாவிடம் இருந்து இறைமையடைந்து பின்னர் உருவாக்கப்பட்ட 1ம் குடியரசு யாப்பிலேயே 'இது சிங்கள பௌத்த தேசிய சிறீலங்கா அரசு' என பிரகடனப்படுத்தப்பட்டது. 1ம் குடியரசு யாப்பு பிரகடனப்படுத்தப்பட்ட போது அன்றைய 'சுதந்திரன்' பத்திரிகை, ஆசிரிய தலையங்கத்தில் 'குடியரசுயாப்பு' பிரகடனப்படுத்தப்படும் நாள் தமிழ் இனத்திற்கு கொள்ளி வைக்கும்நாள்' என வர்ணிக்கப்பட்டிருந்தது. மூன்றாம் குடியரசு அரசியல் யாப்பிற்கு எதிராகவே அன்று கவிஞர் காசி ஆனந்தன் பரீட்சைத் திணைக்களத்தில் தான் வகித்த மொழி பெயர்ப்பாளர்பதவியை விட்டு விலகி அரசிற்கு எதிராகவும், தமிழ் மக்களுக்கு முன்மாதிரியாகவும் செயற்பட்டார். அன்றைய தமிழரசுக் கட்சி பல எதிர்ப்பிரச்சாரங்களைமேற்கொண்டது தமிழ் மக்களிடையே தேசிய ஒருமைப்பாட்டை வலியுறுத்தியது. காலப்போக்கில் தமிழர் விடுதலைக்கூட்டணியாக தமிழரசுக் கட்சி மாற்றம் அடைந்தது. சிறீமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் மக்கள் ஐக்கிய முன்னணி அரசே 1ம் குடியரசு யாப்பையும் அதனூடாக தமிழீழ பகுதிகளுக்கான புறக்கணிப்பையும் மேற்கொண்டது.

1977ல் நடந்த பொதுத் தேர்தலில் வெற்றி பெற்ற ஜே.ஆர் தலைமையிலான ஐ.தே. கட்சி 1978ல் 2ம் குடியரசு யாப்பை உருவாக்கி ஜனாதிபதி தலைமையிலான ஒற்றையாட்சி முறையை ஏற்படுத்தி, அதனூடாக மேலும் தமிழீழப் பகுதிகள் புறக்கணிக்கப்பட்டன. (இந்த யாப்பே தற்போதும் அமுலில் இருக்கின்றது) 1978ல் தமிழர்விடுதலைக் கூட்டணி எதிர்க்கட்சியாக வந்ததை ஒரு சாதனையாகக் கருதமுடியாது. தொகுதிவாரித் தேர்தல் முறையால் சகல தொகுதிகளையும் இழந்தமையாலேயே அன்று சிறீலங்கா சுதந்திரக்கட்சியும் அதன் கூட்டுக் கட்சிகளும் எதிர்க்கட்சி ஆசனத்தை பெற முடியவில்லை. எனினும் எதிர்க்கட்சி ஆசனத்தை தமிழர் பெறக் கூடாதென்ற காரணத்தினாலேயே 1982ல் விகிதாசார தேர்தல்முறையை ஜே.ஆர் உருவாக்கினார். தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர் அமிர்தலிங்கம் எதிர்க்கட்சி ஆசனத்தில் இருந்து அன்று விலகியபோது, சிறீமாவிற்கு குடியுரிமை பறிக்கப்பட்ட நிலையிலும், மகன் அனுரா பண்டாரநாயக்காவை எதிர்க்கட்சி தலைவராகநியமித்தமையானது ஐ.தே. கட்சி சிறீலங்கா சுதந்திரக்கட்சி என்ற இரு கட்சிகளிடையேயும் கொள்கை வேறுபாடுகள் இருந்த போதும் இனவாத ஒற்றுமையையே அது அடையாளப்படுத்தியது. இன்றுகூட இந்த இரு பிரதான கட்சிகளிடையேயும் இனவாத ஒற்றுமைகள் காணப்படுகின்றன.

அன்றிலிருந்து இன்றுவரை இந்த இரு கட்சிகளும் ஆட்சியில் இருந்தபோது தமிழ்க்கட்சி



களுடனும், 1987ல் இந்தியாவுடன் செய்துகொண்ட ஒப்பந்தங்களும் தமிழீழத்திற்கான தமிழர் தேசிய போராட்டங்களை அல்லது தமிழ் மக்களின் போராட்ட உணர்வுகளை கட்டுப்படுத்துவதாகவே அமைந்தன.

## இந்நிலையில் ஐ.தே. கட்சியோ அல்லது பொ.ஜ.ஐ.மு. அரசோ 99ம் ஆண்டில் பேச்சுவார்த்தைக்கான அழைப்பை விடுவார்களேயானால் விடுதலைப் புலிகள் முன் எச்சரிக்கையுடனேயே அந்த 'அழைப்பை' ஏற்க வேண்டும்.


தமிழீழத்தில் தமிழ்த் தேசிய தீர்மானங்களிற்கு எதிராக சிங்களக்கட்சிகளின் 'சூனியவாதம்' 20ம் நூற்றாண்டின் மையப் பகுதியிலேயே ஆரம்பித்தது. அதே காலப்பகுதியிலே தமிழ்த்தேசிய வாதம் தமிழ் மக்களிடையே எழுச்சியடைந்தது. எனினும் தமிழ்த்தேசிய தீர்மானங்களிற்கு எதிராக சிங்களக் கட்சிகள் ஈடுபட்டபோதும் தற்போது சில தமிழ்க்கட்சிகளும் சிறீலங்கா அரசுடன் இணைந்து செயற்



பட்டு தமிழ் தேசிய தீர்மானங்களை கூறுபோடுகின்றன.

டொனமூர் அரசியல் யாப்போடு ஆரம்பித்த இனத் துரோகம் இன்று தமிழீழத்திற்கான தனியுரிமைப் போராட்டத்தையே காட்டிக் கொடுக்கும் நிலைக்கு மாறிவிட்டது. டொனமூர் அரசியல் திட்டத்தை அன்று தமிழ் மக்களும், தமிழ் காங்கிரஸ் கட்சியும் இது தமிழ் மக்களுக்கு எதிரானது எனக்கூறி எதிர்க்க, தம்பிமுத்து என்பவர் அதற்கு சாதகமாகக் கையெழுத்திட்டார். அதேபோல 1947-ல் தமிழ் மக்களை இன ரீதியாகப் பிரதிநிதித்துவப்படுத்தாத 'சோல்பெரி' அரசியல் திட்டத்தை இராசகுலேந்திரன் என்பவர் அன்று கையெழுத்திட்டார். பின்னர் 1972 ல் முதலாம் குடியரசு அரசியல் யாப்பை தமிழ் மக்களும், தமிழ் இளைஞர்பேரவையும், தமிழரசுக்கட்சியும் எதிர்க்க அதற்குச் சாதகமாக ஆறு தமிழர்கள் கையெழுத்திட்டனர். அவர்களை அன்றைய சுதந்திரன் பத்திரிகை 'பச்சைத் துரோகிகள் அறுவ(ா)ர்'என வர்ணித்தது. மனச்சாட்சி மாட்டீன் சிமோல் அருளம்பலம், பனி தியாகராசா, ம.மு இராசன் செல்வநாயகம், கலப்புச்சாதி சூரியர், தனி இன வீரர் சுப்பிரமணியம். போன்றோரை அவர்களின் பட்டப் பெயர்களுடன் 'அடிமைச் சாசனத்தில் கையெழுத்திட்ட துரோகிகள்' என மேலும் காரசாரமாக வர்ணிக்கப்பட்டிருந்தது. இங்கு வேடிக்கை என்னவெனில் அன்று தமிழரசுக் கட்சியாக இருந்த இன்றைய தமிழர் விடுதலைக் கூட்டணி அன்று யார் யாரைத் துரோகிகள் என்று கூறிக் கொண்டதோ இன்று அதற்கும் மேலான துரோகத் தனத்திலும் அன்று துரையப்பா மரணமாவதற்கு காரணமான யாழ் மாநகரசபையையும் தக்கவைப்பதிலும் முனைப்புக்கொள்கின்றது. அது மாத்திரமல்ல 1970 களில் தமிழர் உரிமைப்போராட்ட இயக்கங்களாக ஆரம்பித்து, பின்னர் கொண்ட கொள்கையைவிட்டு 1988-ல் கட்சிகளாக மாற்றமடைந்து இந்திய அரசுடன் இணைந்து தமிழ் மக்களும் விடுதலைப் புலிகளும் விரும்பாத மாகாணசபையை செயற்படுத்தினார்கள். இதே காலப்பகுதியில் நடந்த கொலைகளும், கொள்ளைகளும் எண்ணிலடங்காதவை. 1931, 1947, 1972ம் ஆண்டுகளில் இருந்த தமிழ்த் துரோகிகள் தமிழ்மக்களைக் கொலை செய்யவில்லை, அல்லது கொள்ளையடிக்கவில்லை. ஆனால் இன்று சிறீலங்கா அரசுட்ன் இணைந்திருக்கும் தமிழ்க் கட்சிகள் (முன்னைய இயக்கங்கள்) சிறீலங்கா இராணுவத்திற்குப் பாதை அமைப்புக்களை காட்டிக்கொடுப்பதோடு அவர்களின் துணையுடன் தமிழீழ பகுதிகளில் கொலை கொள்ளைகளிலும் ஈடுபடுகின்றார்கள்.

பொ.ஜஐ.மு. அரசின் தற்போதைய தீர்வுத் திட்டத்தைக்கூட கூட்டணிக்கட்சி கையெழுத்திட தயாராகவே உள்ளது. இவர்களில் அன்றைய தமிழ்த்தேசிய இலட்சியத்திற்கும் இன்றைய தமிழ்த்தேசிய இலட்சியத்தின் வேறுபாட்டிற்கும் காரணம் என்ன என்பதை தமிழ் மக்கள் அலசி ஆராயவேண்டிய தேவையில்லை. தமிழ்த் தேசிய தீர்மானங்களை வரையறுக்கும் காலம் கழிந்துவிட்டது. வருகிற 99ம் ஆண்டு அதாவது 20ம் நூற்றாண்டிற்கான இறுதியாண்டு அனைத்து விடயங்களையும் தெளிவுபடுத்தப்போகிறது. ஏனெனில் 1977ல் ஐ.தே.கட்சி அரசில் நிதி அமைப்பாளராக இருந்த கே.டபிள்யூ. தேவநாயகம் தொடக்கம் பின்னர் 1994ல் பொ.ஜஐ.மு அரசின் வெளியுறவு அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் ஊடாகவும் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ்க்கட்சிகள் ஊடாகவும் தமிழ்த் தலைவர்கள் அரசில் அங்கம் வகிக்கின்றனர் என்பதை சர்வதேச சமூகத்திற்கு சித்தரிக்க முற்பட்ட சிறீலங்கா அரசு, அதனூடாக குறிப்பிட்ட காலத்திற்கு சில சாதகமான விளைவுகளை அனுபவித்த போதும் 98ம் ஆண்டு அதன் நேர் எதிர்விளைவுகளையே சந்தித்தனர். குறிப்பாக தென்னாபிரிக்க பிரித்தானிய அரசுகளின் பதில்கள் சிறீலங்காவிற்கு நெத்தியடியாகவே அமைந்தன. அதே



போல தமிழ்க்கட்சிகளும் யார் என்பதை சர்வதேச சமூகத்திற்கு தெரிந்துவிட்டது. தமிழ் கட்சிகள் பாராளுமன்றத்தில் விடுதலைப் புலிகளின் போராட்டம் நியாயமானது என அங்கீகரித்துவிட்டு வெளியேறினால் மாத்திரமே தமிழ் மக்களின் கண்டனத்தில் இருந்து தப்ப முடியும். இல்லையேல் 99ல் சிறீலங்கா அரசு எதிர்நோக்கும் சர்வதேச சமூகத்தின் கண்டனக் கேள்விகளுக்கு தமிழ்க் கட்சிகளும் உட்படவேண்டிவரும்.

இந்நிலையில் ஐ.தே. கட்சியோ அல்லது பொ.ஜ.ஐ.மு. அரசோ 99ம் ஆண்டில் பேச்சுவார்த்தைக்கான அழைப்பை விடுவார்களேயானால் விடுதலைப் புலிகள் முன் எச்சரிக்கையுடனேயே அந்த 'அழைப்பை' ஏற்க வேண்டும். ஏனெனில் 21ம் நூற்றாண்டில் அமையக்கூடிய தமிழ்த் தேசிய தீர்மானங்களுக்கான கட்டமைப்புக்களிற்கான சாதக சூழ்நிலைகளை 99ம் ஆண்டில் சிறீலங்கா அரசு 'சமாதான பேச்சுவார்த்தை' என்ற அடைமொழிகளால் குழப்ப முயற்சிக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாக்குதல்களால் தனிமைப் படுத்தப்பட்டது ஈராக்கா - அமெரிக்காவா?

(சென்றவாரத் தொடர்ச்சி)

★ ஐ.நாவின் ஆயுத கண்காணிப்புக் குழுவினரின் பரிசோதனைகளுக்கு ஈராக் ஒத்துழைப்பு வழங்கவில்லை.

★ கடுமையான கண்காணிப்பின் மத்தியிலும் ஈராக் தொடர்ந்தும் அழிவிற்கான ஆயுதங்களை தயாரித்து வருகிறது.

★ ஈராக்கின் நடவடிக்கைகள் அண்டை நாடுகளுக்கு பெரும் அச்சுறுத்தலாக அமைகின்றன.

ஈராக்கின் மேல் கடந்த வாரம் அமெரிக்காவும் பிரித்தானியாவும் மேற்கொண்ட விமான, ஏவுகணை தாக்குதலுக்காக இவ் இரு நாடுகளும் கூறிய காரணங்கள் இவை. ஆனால் உண்மையான காரணங்களாக இவைகளையும் கொள்ளலாம்.

★ வளைகுடாவில் தனிமைப் படுத்தப்பட்டிருந்த ஈராக மீண்டும் அண்மைக்காலமாக செல்வாக்குப் பெறத்தொடங்கியதும் அந்நாட்டின் தலைவர் சதாம் ஹூசைன் அரபு முஸ்லிம் மக்களின் மத்தியிலும் தேசிய வீரராக மாற்றம் காணத் தொடங்கினார். ஆக ஈராக் மீண்டும் தனிமைப்பட வேண்டும்.

(அடுத்த மாதம் ஈராக்கிய தலை நகர் பக்தாத்தில் இடம் பெறவுள்ள சர்வதேச வர்த்தக கண்காட்சியொன்றில் மத்திய கிழக்கின் சகல நாடுகளும் கலந்து கொள்ளவுள்ளன. இக் கண்காட்சியின் பிரதான இடத்தினை சவுதிஅரேபியா வகிக்கின்றது. அந்நாட்டின் பெரும் வர்த்தப் பிரமுகர் ஒருவர் கடந்த ஆறு மாதங்களாக பாக்தாத்தில் தங்கியிருந்து இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகிறார். இதில் சவுதி அரேபியாவின் 200 வரையிலான நிறுவனங்கள் பங்குபற்றும் என சொல்லப்படுகிறது)

★ அண்மையில் பிரான்ஸ், ரஷ்யா போன்ற நாடுகள் ஈராக்குடன் பொருளாதார உடன்படிக்கைகளில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டன. இவ்வேளை அந்நாட்டின் பொருளாதாரத்தடை நீக்கப்பட்டால் உலக எண்ணெய் ஏற்றுமதி நாடுகளின் வரிசையில் ஈராக் மீண்டும் முன்னணிக்கு வந்துவிடும். அத்துடன் எண்ணெய் விலைகளில் மேலும் வீழ்ச்சி ஏற்படும். இது மத்திய கிழக்கின் எண்ணெயின் மூலம் வர்த்தகம் செய்யும் அமெரிக்காவிற்கு பெரும் இடையூறுகளை தோற்றுவிக்கும். ஆக பொருளாதாரத்தடை நீடிக்கப் படவேண்டும். சரியான சந்தர்ப்பத்தில் ஈராக்கின் எண்ணெய் உற்பத்தி மையங்களை தாக்கி அழிக்கவும் வேண்டும் என்ற பெருநோக்கம் அமெரிக்காவிடம் இருந்து வந்தது.

(நடந்து முடிந்த தாக்குதல்களில் ஈராக்கின் தென்பகுதியில் அமைந்திருந்த எண்ணெய் உற்பத்தி மையங்கள் பல பலத்த சேதமடைந்துள்ளன. தாக்குதல் நடந்த பின் இப்போது பாதுகாப்புச் சபையின் மற்றைய அங்கத்துவ நாடுகள் ஈராக்கின் மீதான பொருளாதாரத்தடை அகற்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துள்ள வேளையில் அவ்வகையான முடிவுகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டால், தான் தனது மேலாண்மை உரிமையை (வீட்டோ) பாவித்து அதனை முறியடிக்கும் என அமெரிக்கா கூறியுள்ளது)

★ அரசியலில் பல சிக்கல்களை மொனிகா லெவின்ஸ்கீ தொடர்பு விவகாரத்தால் பெற்றுக்கொண்ட ஜனாதிபதி கிளின்டன், அவ்விவகாரம் விஸ்பரூபம் எடுத்த போதெல்லாம் அதனை திசைமாற்ற வேறு விடயங்களை எடுத்துக்கொண்டார். இம்முறை குடியரசுக்கட்சித் தலைவர்கள் லெவின்ஸ்கீ விவகாரத்திற்காக கிளின்டன் தண்டிக்கப் படுத்தப்பட வேண்டும் என்ற கோட்பாட்டில் பிரதிநிதிகள் சபையில் வாக்கெடுப்பினை அறிவித்தவேளை, கிளின்டன் ஈராக் மீதான தாக்குதலை அறிவித்தார்.

இதன் மூலம் தனது பாலியல் விவகாரம் உலகச்செய்திகளில் பிரதான செய்தியாக மீண்டும் இடம் பெறுவதை கிளின்டன் தடுக்க முயன்றார். வாக்கெடுப்பை ஒத்திப் போட ஒரு மாற்று நடவடிக்கையாக ஈராக் தாக்குதலை பயன்படுத்தினார்.

(மேற்கண்ட நடவடிக்கைகளில் அமெரிக்க அதிபர் உடனடியான வெற்றியை கண்டாராயினும் அவர் எதிர்பார்த்து மேற்கொண்டவை, ஒரு குறுகிய காலத்திற்கே நிலைத்தன. வாக்கெடுப்பு இரண்டு நாட்கள் மாத்திரமே ஒத்திப் போடப்பட்டது. குடியரசுக் கட்சித்தலைவர்கள், கிளின்டன் தண்டிக்கப்பட வேண்டுமென்பதில் உறுதியாக நின்றனர். இப்போது வாக்கெடுப்பு நடைபெற்று, கிளின்டன் தனது பாலியல் விவகாரத்தினால் 'செனட்' விசாரணையை எதிர்நோக்கியுள்ளார்.)

ஈராக்கில் குர்திஷ் அமைப்புக்களை தங்கள் உளவாளிகளாக அமெரிக்கா ஏற்கனவே பயன் படுத்தியிருந்தது. சுமார் மூன்று வருடங்களுக்கு முன் ஈராக்கிய படைகள், குர்திஷ் பிராந்தியமான வடஈராக்கின் அமெரிக்க ஆதரவு குர்திஷ் அமைப்பின் மேல் தாக்குதல்களை மேற்கொண்டு, ஏராளமான அமெரிக்க கையாட்களை அழித்தது. இதன்பின் ஈராக்கிலிருந்து தங்களுக்கு தேவையான தகவல்களை அமெரிக்காவால் சரியான முறையில் பெற்றுக்கொள்ள முடியவில்லை.



★ ஈராக்கின் எதிர்க்கட்சிகள் எனக் கூறிக்கொண்டு வெளிநாடுகளில் செயற்பட்டுவரும் அமைப்புக்களை மீண்டும் ஒன்று திரட்டி தற்போதைய ஈராக்கிய அரசிற்கு எதிரான ஒரு கட்டமைப்பை ஏற்படுத்த அமெரிக்கா முன்வந்தது. அண்மையில் இக்குழுக்களின் முக்கியஸ்தர்கள் அமெரிக்காவிற்கு அழைக்கப் பட்டு, நிதிஉதவிகள் கூட வழங்கப் பட்டன.

(அந்நிய மண்ணில் இருந்து செயற்பட்டு வந்த ஈராக்கிய எதிர்க் குழுக்கள், சதாம் ஹூசேனின் ஆட்சிக்கெதிராக ஈராக்கிலிருந்து செயற்படும் என அமெரிக்கா எதிர்பார்த்திருந்தாலும், தான் மேற்கொண்ட தாக்குதல்கள் அது கொண்டிருந்த எண்ணத்தை முற்றாக தவிடு பொடியாக்கியுள்ளது.

இந்த தாக்குதல்களால் சதாம் ஹூசேனின் செல்வாக்கு ஈராக்கில்மட்டுமல்ல வளைகுடா பிரதேசமெங்கும் அதிகரித்துள்ளது. சற்று முரண்பாடான கொள்கைகளைக்கொண்டிருந்த சிரியா, லிபியா, மொரோக்கோ போன்ற நாடுகளில் நடந்து முடிந்த அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் பல இலட்சம் மக்கள் கலந்துகொண்டுள்ளனர். இவர்களது கைகளில் சதாமின் படங்களும் காணப்பட்டுள்ளன இப்படியான நிலையில் ஈராக்கிய எதிர்க் குழுக்களின் எதிர்பார்ப்புக்களோ அல்லது அமெரிக்காவின் முயற்சிகளோ நிறைவேற வழியில்லை.

ஈராக் மீது பிரித்தானியா மற்றும் அமெரிக்க விமானங்களும் ஏவுகணைகளும் தாக்குதல்நடாத்த உண்மையான மறைமுகமான காரணங்கள் இவ்வாறிருக்க— தாக்குதல்களை நடத்த மேற்கண்ட நாடுகள் கூடிய காரணங்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியவையா? அவைகள் எவ்வளவு தூரத்திற்கு உண்மையானவை?

நவம்பர்மாதம் 14-ம் திகதி Unscom எனப்படும் ஆயுத கண்காணிப்புக் குழுவினருக்கு மீண்டும் ஒத்துழைப்பு வழங்குவதாக ஈராக் ஒத்துக்கொண்டதையடுத்து அமெரிக்கா அந்நாட்டின் மீது தாக்குதல் நடாத்துவதை பின் தள்ளியது. அன்றைய திகதி முதல், அடுத்துவந்த ஒரு மாதத்திற்குள் அதாவது நவம்பர் 15 முதல் டிசம்பர் 14 வரையான காலப்பகுதிக்குள் இந்த ஆயுத கண்காணிப்புக் குழுவினர் 427 இடங்களை பரிசீலனை செய்துள்ளனர். அவற்றுள் 299 இடங்கள் மீள பரிசீலனை செய்யப் பட்ட இடங்களாகும். பிரச்சினைக்கு காரணமாக கூறப் பட்ட சம்பவங்களில் ஐந்து அவற்றுள் ஒன்று, இரண்டு கட்டடப்பகுதிகளில் தொழிலாளர்கள் மதிய விடுப்பில் சென்றதால் அவர்கள் திரும்பி வரும் வரை கண்காணிப்புக் குழுவினர் தடுத்து அடுத்ததாக சில பகுதிகளிற்குள் செல்லத்தடை விதிக்கப்பட்டனர் எனக் கூறப்பட்டது. ஆனால் அவைகளில் உண்மையில்லை. எல்லா அங்கத்தவர்களும் அனுமதிக்கப்படவில்லை. நான்கு பேர்கள் மாத்திரம் அனுமதிக் கப்பட்டனர் என்பதுதான் உண்மை. இவ்வாறு மிகச் சிறிய விடயங்களை காரணமாக்கி கண்காணிப்புக் குழுவின் தலைவர் அமெரிக்காவிடம் முறையீடு செய்தார். இப்படியான ஒரு முறைப்பாட்டைத்தான் அமெரிக்காவும் எதிர்பார்த்திருந்தது. அன்றைய தினம் ஐ.நாவின் பாதுகாப்புக் கூடியிருந்தவேளை அச்சபையின் மற்றைய பிரதான அங்கத்தவர்களான ரஷ்யா, பிரான்ஸ், சீனா போன்றவற்றைக்கூட கலந்தாலோசிக்காமல் அமெரிக்காவும், இங்கிலாந்தும் தன்னிச்சையாக தாக்கத் தொடங்கின.

தாக்குதல் ஆரம்பிக்கப்பட்ட பின்னரேயே அத் தகவல்களை மற்றைய நாடுகள் அறிந்து கொண்டன. சீனாவும், பிரான்சும் தாக்குதல்களை உடனடியாக நிறுத்தக் கோரின. அதே வேளை ரஷ்யா சற்று மேலே போய் தனது தூதுவர்களை திருப்பியழைத்துக் கொண்டது. தான் தாக்குதலை ஆரம்பித்த போது அதற்கு ஆதரவுகிடைக்கும் என அமெரிக்கா எண்ணிய வேளை தனது மத்தியகிழக்கு நண்பர்கள் கூட காலைவாரி விட்டனர். உள்ளூரிலும்தான் நினைத்த அரசியல் மாற்றம் ஏற்படவில்லை என்கின்ற நிலையில், தமது நோக்கங்கள் நிறைவேறி விட்டன. சதாமை பதவியில் இருந்து இறக்குவது எமது நோக்கமல்ல; அவரிடமிருக்கும் ஆயுதங்களை அழித்தலே எமது பிரதான நோக்கம். அது நிறைவேறிவிட்டது. ஆகவே எமது தாக்குதல்களை முடித்துக்கொள்கிறோம் என அமெரிக்காவும் பிரித்தானியாவும் கூறின. ஆனால் ஆயுத கண்காணிப்புக் குழுவினர் தங்களது கடமையைச் செய்ய ஈராக் அனுமதிக்க வேண்டும் என்று கூறினர். நான்கு நாள் தாக்குதலில் ஈராக்கின் 102 இலக்குகளை தாம் அழித்து விட்டதாயும் இனிமேல் ஈராக்கின் ஆயுதங்களை எண்ணி அண்டைநாடுகள் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்றும் ஏற்கனவே இந்த நாடுகள் கூறியிருந்தன. அப்படியானால் மீண்டும் ஆயுத கண்காணிப்புக் குழுவினர் ஏன் என்பதே ஈராக் முன்வைக்கும் கேள்வி!

ஈராக்கின் தலைவர்கள், ஐநா.வின் ஆயுத கண்காணிப்புக் குழு ஈராக்கைப் பொறுத்த வரை இறந்து போய்விட்டது. இங்கே தாக்குதல்களை நடாத்தியதன் மூலம் எல்லா ஆயுதங்களையும் அழித்துவிட்டதாக அமெரிக்கா கூறுகின்றபடியால், இனிமேல் ஈராக்கின்மேல் விதிக்கப்பட்டுள்ள தடைகளை நீக்கலாம் என தாம் நினைக்கிறோம் என்கின்றனர். இதையேதான் பிரான்ஸ், ரஷ்யா, சீனா போன்ற ஐநாவின் பாதுகாப்புச்சபை அங்கத்துவநாடுகள் கூறுகின்றன. அவைகளின் கூற்றின்படி கண்காணிப்புக் குழுவின் தலைவர் ரிச்சேட்பட்லர் அமெரிக்காவுக்கு ஆதரவானவர் என்றும், அவரது நடவடிக்கைகளில் தமக்கு நம்பிக்கை கிடையாது என்றும் அவர் பதவியிலிருந்து அகற்றப்பட்டு புதிய கொள்கைகளில் அடிப்படையில் வேறு திட்டங்கள் தீட்டப்பட வேண்டும் என்றும் அதற்குமுதல் ஈராக்கின் மீது விதிக்கப்பட்டுள்ள தடைகள் நீக்கப்பட்டு அவர்களது அன்றாட வாழ்வு நிலையில் மாற்றங்கள் கொண்டுவரப்பட வேண்டும் என்று கூறுகின்றன.


ஈராக்கைப் பொறுத்தவரை இன்றுள்ள நிலையில் அதன் எதிர் நாடுகளாக அமெரிக்காவும், அதன் ஆதரவு நாடுகள் சிலவும் உள்ளநிலையில் ஈராக்கிற்கு உதவிகளையும், ஆதரவுகளையும் வழங்க உலகின் ஏராளமாக நாடுகள் முன்வந்துள்ளன. ஈராக்கை மீண்டும் தனிமைப் படுத்த அமெரிக்கா நினைத்தாலும் இப் பிரச்சினையில் மற்றைய நாடுகளால் அமெரிக்காவே தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

**- உதயன்**

**இங்கே தாக்குதல்களை நடாத்தியதன் மூலம் எல்லா ஆயுதங்களையும் அழித்துவிட்டதாக அமெரிக்கா கூறுகின்றபடியால், இனிமேல் ஈராக்கின்மேல் விதிக்கப்பட்டுள்ள தடைகளை நீக்கலாம் என தாம் நினைக்கிறோம் என்கின்றனர். இதையேதான் பிரான்ஸ், ரஷ்யா, சீனா போன்ற ஐ.நாவின் பாதுகாப்புச்சபை அங்கத்துவநாடுகள் கூறுகின்றன.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சிறுவர் முற்ற மருமக்கள் அனைவருக்கும் புதுவருட வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

இவ் வாரம் தமது பிறந்த தினத்தைக் கொண்டாடும் **செல்வன் கணேசராசா சந்திரகாந்த், செல்வி தீபிகா சண்முகராஜா** ஆகியோரை பல்கலையும் கற்றுச் சிறப்புடன் வாழ்கவென குட்டி மாமாவும் மற்றும் சிறுவர் முற்ற சகோதர சகோதரிகளும் வாழ்த்துகிறோம்.

# கவிதை முற்றம்

## புத்தாண்டே வா

புத்தாண்டே புத்தாண்டே வா! வா! வா!
புதுமைகளை எங்களுக்கு தா! தா! தா!

வீதியெல்லாம் வண்ணத்தில் தீபங்கள்
விதவிதமாய் எங்களுடன் சிரிக்கிறதே.
வீடெல்லாம் அலங்காரப் புதுமரங்கள்
நாளெல்லாம் அதனோடு கழிகிறதே.
நண்பர்கள் பலரோடு கலந்தோமே
அன்போடு உறவுகளும் வந்தனரே.
பலவிதமாய் உணவுகளும் சுவைத்தோமே
பனிக்கட்டி மழையினிலும் நனைந்தோமே
எம்போன்றே வையத்துச் சிறுவரெல்லாம்
இன்பமுடன் இருப்பாரோ நானறியேன்

புத்தாண்டே புத்தாண்டே வா! வா! வா!
புதுமைகளை எல்லோர்க்கும் தா! தா! தா!

*— நிலா*

## குறள் முற்றம்

**'உள்ளத்தால் பொய்யாது ஒழுகின்; உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்'**

மனதில் பொய் இல்லாமல் நேர்மையோடு, வாய்மையோடு வாழுகின்ற ஒருவர் உலகத்துச் சான்றோர்களின் மனங்களிலெல்லாம் உயர்வாக மதித்துப் போற்றப்படுவார்.

## அறிவியல் முற்றம்

**சொற்சிதறல் எண் - 11**

பின்வரும் தமிழ்ச் சொற்களின் ஒத்த கருத்துள்ள சொற்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவை மூன்று எழுத்துக்களைக் கொண்டதாகவும், இடம்மாறியும், சிதறியும் காணப்படுகின்றன. அச் சொற்களைக் கண்டுபிடிக்கவும்.

**உண்மை, அம்மா, கருணை, வீரம், பறவை, பாசம், அறிவு, வானம், வலிமை, கோபம்.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வா | ரி | சி | அ | க | ம் |
| அ | ன் | ம் | பு | ல | வு |
| ப | ட் | மை | மே | ன் | ம் |
| பு | த் | ம் | ப | ன | தி |
| ப | ய் | னை | சி | ற | பு |

1.................................... 6....................................

2.................................... 7....................................

3.................................... 8....................................

4.................................... 9....................................

5.................................... 10....................................

பிள்ளைகளே!

சரியான விடையைக் கண்டுபிடித்து குறித்து வையுங்கள். விடை அடுத்தவாரம்!

**சொற்சிதறல் எண் பத்தின் விடைகள்**

1. கல்யாணி
2. மோகனம்
3. சாருகேசி
4. கீரவாணி
5. பூபாளம்
6. மாலைமதி
7. காம்போதி
8. தாளரூபி
9. தக்கேசி
10. குறிஞ்சி

# குட்டிக் கதை படியுங்கள்

## நிலவொளியைத் தழுவிய திருடன்

அருளப்பன் என்ற பெருஞ்செல்வந்தன் வீட்டில் ஒரு திருடன் நுழைந்தான்; படுக்கை அறையின் பரண் மீது ஏறி ஒளிந்துகொண்டான். வீட்டிலுள்ளவர்கள் உறங்கிய பிறகு திருடலாம் என்று இருந்தான்.

பரண் மீது திருடன் இருப்பதை அருளப்பன் அறிந்து கொண்டான். அவனைச் சூழ்ச்சி செய்து பிடிக்க எண்ணினான்.

மனைவியிடம் போய், 'படுத்துத் தூங்குமுன் என்னிடம் நீங்கள் எப்படிப் பணக்காரர் ஆனீர்கள் என்று கேள்! நான் சீக்கிரம் சொல்ல மாட்டேன்; ஆனால் நான் சொல்லும் வரை நீ என்னைவிடக் கூடாது' என்று ரகசியமாகச் சொன்னான்.

சாப்பிட்டு முடித்துவிட்டு இருவரும் படுக்கை அறையில் வந்து உட்கார்ந்தனர்.

'நெடுநாளாக உங்களை நான் ஒன்று கேட்க வேண்டுமென்று இருக்கிறேன். நீங்கள் இவ்வளவு பெரிய செல்வந்தர் ஆனது எப்படி? நீங்கள் வாணிகமும் செய்யவில்லை; அதிக வட்டியும் வாங்கியதில்லையே? என்றாள் மனைவி.

'இதெல்லாம் நீ கேட்கக் கூடாது; கடவுள் கொடுத்ததை உன் விருப்பப்படி அனுபவி' என்றான் அருளப்பன்.

அவள் விடவில்லை. மேலும் மேலும் கேட்டுத் தொந்தரவு செய்தாள். அருளப்பன் நீண்ட நேரம் சொல்லவில்லை.

பிறகு, 'நான் முதலில் திருடனாகத்தான் இருந்தேன்; பிறகுதான் பணக்காரனானேன்' என்றான்.

'திருடனாகவா இருந்தீர்கள்? எப்படித் திருடினீர்கள் அகப்பட்டுக்கொள்ளவில்லையா?' என்றாள்.


'எனக்கு ஒரு குரு இருந்தார்; அவர்தான் எனக்கு ஒரு வழியும் மந்திரமும் சொல்லிக்கொடுத்தார்.'

'என்ன வழி? என்ன மந்திரம்? அதை என்னிடம் சொல்லக் கூடாதா?'

'உனக்கேன் அது? நீ திருடவா போகிறாய்? நிலாக் காலத்தில் வீட்டுக் கூரை அல்லது பரண் போன்ற உயரமான இடத்தில் இருந்து ஒரு மந்திரச் சொல்லை ஏழுமுறை சொல்ல வேண்டும். ஓட்டு வழியாக அல்லது பொத்தல் வழியாக வரும் நிலாக்கதிரைக் கட்டிப் பிடித்துக் கொண்டு இறங்க வேண்டும்; அப்போது யாருக்கும் தெரியாமல் திருடலாம்; நான் அப்படித்தான் செய்து செல்வந்தனானேன்'.

'உண்மையாகவா? ஆச்சரியமாக இருக்கிறதே!'

'திருடிய பிறகு மீண்டும் ஏழுமுறை அந்த மந்திரத்தைச் சொல்ல வேண்டும்; நிலாக் கதிரைக் கட்டிப் பிடித்துக் கொண்டு ஏணி மேல் ஏறுவதுபோல் ஏறி வெளியே வரலாம்' என்றான்.



'அந்த மந்திரச் சொல் என்ன?'

''சோல்' என்பதுதான் அந்தச் சொல்; இதை ஏழு முறை சொன்னால் வீட்டிலுள்ளவர்களும் தூங்கிவிடுவார்கள்'.

'ஒரு சொல்லில் பணக்காரனாவதா? நான் அதை என் உடன்பிறப்புகளுக்குச் சொல்லலாமா? அவர்களும் பணக்காரர்கள் ஆகட்டுமே!'

'வேண்டாம் வேண்டாம்! அப்படிச் செய்யாதே! எல்லோருக்கும் தெரிந்தால் அது பலிக்காது; சரி சரி தூங்கலாம் படு! தொந்தரவு கொடுத்தது போதும்!' எனக் கூறிவிட்டு அருளப்பன் படுத்துக் கொண்டான்.

சிறிது நேரத்தில் குறட்டைவிடத் தொடங்கினான். மனைவியும் படுத்துக் கொண்டாள்.

தான் வந்த வேலை எளிதாக முடியப்போவதை எண்ணித் திருடன் மகிழ்ந்தான். 'சோல்' என்று ஏழு முறை சொன்னான்' ஓட்டுச் சந்து வழியே வந்த நிலாக் கதிரைக் கட்டிப் பிடித்துக் கொண்டு தாவினான்.

''பொத்' என்று தரையில் விழுந்தான். அவன் கால் ஒடிந்துவிட்டது; வலி பொறுக்க முடியாமல் கத்தினான்.

சத்தம் கேட்டு எழுந்தவன் போல அருளப்பன் எழுந்து, 'யார் அங்கே?' என்றான்.

'நான் திருட வந்தேன்; உன் பேச்சை நம்பி விழுந்து விட்டேன்! கால் ஒடிந்துவிட்டது! நீ சொன்ன மந்திரம் பலிக்கவில்லையே!' என்றான்.

'உன்னைப் பிடிக்க நான் செய்த தந்திரம் அது' என்று சொன்னான் அருளப்பன்.

உடனே, அக்கம்பக்கத்தாரை அழைத்து அவர்கள் துணையுடன் திருடனைக் காவல்நிலையத்தில் ஒப்படைத்தான் அருளப்பன்.

*— பிரெஞ்சுக் கதை*

## அறிந்துகொள்வோம்

### நாடு அதை நாடு

### எல்சல்வடோர்

நாட்டின் பெயர்: எல்சல்வடோர்

தலை நகர்: சான் சல்வடோர்

பரப்பளவு: **23,393 ச.கிலோ மீற்றர்**

மக்கள் தொகை: 58 லட்சம்

மொழி: ஸ்பானிஸ்

சமயம்: கிறிஸ்தவம்

நாணயம்: கோலன்

எழுத்தறிவு: 75 வீதம்




இது மத்திய அமெரிக்க நாடாகும். வட மேற்கே கௌதமாலாவும், வடக்கிலும் கிழக்கிலும் கொண்டுராசும், எல்லைகளாக அமைந்துள்ளன.

ஸ்பெயின் நாட்டின் காலனி ஆதிக்கத்தில் இருந்த இந்நாடு 1827-ம் ஆண்டு சுதந்திரமடைந்தது.

இந் நாட்டின் முக்கிய பொருளாதாரம் கோப்பி உற்பத்தியும், மீன்பிடி வருவாயும் ஆகும்.

## நல்ல புத்தகங்கள் பற்றி...

★ புத்தகத்தைத் தொடுபவன் மனிதனையே தொடுபவன் ஆகிறான்.
*— வால்ட் விட்மன்*

★ புத்தகம் கைக்குள் அடங்கிவிடக்கூடிய பூந்தோட்டம்.
*— அரேபியப் பழமொழி*

★ எந்த வீட்டில் நூலகம் இருக்கிறதோ அந்த வீட்டில் ஆன்மா இருக்கிறது.
*— பிளேட்டோ*

★ வாசிப்பதால் மனிதன் பூரண சுகமடைகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழீழம்

# 1998 பதிவுகள் ஒரே பார்வையில்

## ஜனவரி

**02.01.98** → ஒலுமடுவில் தரித்து நின்ற MI 17 உலங்குவானூர்தி கரும்புலிகளால் தாக்கியழிப்பு. இழப்புகள் இன்றி கரும்புலிகள் தளம் திரும்பினர்.

**18.01.98** → யாழ். அச்சுவேலியில் இரு தமிழர்கள் படையினரால் சுட்டுக்கொலை

**23.01.98** → வடமராட்சியில் இருந்து வடமராட்சி கிழக்கைக் கைப்பற்ற முனைந்த படைகள் புலிகளால் விரட்டியடிப்பு.

**25.01.98** → 10,000 படையினரை ஊடறுத்துச் சென்று கண்டி தலதா மாளிகை மீது காலை ஆறுமணியளவில் குண்டுத் தாக்குதல்.

→ அம்பாறை விசேட அதிரடிப் படையினர் மீது தாக்குதல். 5 படையினர் பலி

**26.01.98** → தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் சிறிலங்காவினால் தடை

**27.01.98** → மட்டக்களப்பு வாகனேரி முகாம் முற்றாக தாக்கி அழிப்பு. 10ற்கு மேற்பட்ட படையினர் பலி. பலர் படுகாயம்.

**28.01.98** → ராஜீவ் கொலை வழக்கின் விசாரணைக் கைதிகளான 26 பேருக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டது.

**29.01.98** → குருநகரில் 25 காவலரண்கள் 20 நிமிடத்தில் தாக்கி அழிக்கப்பட்டன.

→ யாழ். உள்ளூராட்சித் தேர்தல் சிறிலங்கா இராணுவத்தால் நடாத்தப்பட்டது.

## பெப்ரவரி

**01.02.98** → கிளிநொச்சி படைமுகாம் புலிகளிடம் வீழ்ந்தது.




→ இயக்கச்சி ஆட்டிலெறிதளம் அழிப்பு.

→ 150 போராளிகள் வீரச்சாவு.

→ தம்பலகாமத்தில் 15 பொதுமக்கள் படையினரால் படுகொலை.

**06.02.98** → கொழும்பு விமானப்படை தலைமை அலுவலகத்தின் முன்னே குண்டுத் தாக்குதல். 5 படையினர் உட்பட 9 பேர் பலி.

**14.02.98** → ஜெயசிக்குறுய் படையணி மீது மாங்குளத்திற்கு தெற்கே தாக்குதல். 40 சிப்பாய்கள் பலி- 130 பேர் படுகாயம்.

**22.02.98** → வட கடற்பரப்பில் 7 மணிநேரச் சமர். இரு கடற்கலங்கள் (வலம்புரி, பப்தா) கரும்புலிகளால் மூழ்கடிப்பு. லெப்.கேணல் கரன் உட்பட 11 கடற் கரும்புலிகள் வீரச்சாவு.

**23.02.98** → மாங்குளத்தை கைப்பற்ற கடும் சமர் ஆரம்பம்.

**24.02.98** → அநுராதபுரம் பதவியா பொலிஸ் நிலையம் தாக்கியழிப்பு. 16 பொலிசார் கொல்லப்பட்டனர்.

**25.02.98** → கிளாலி கடற்படை தளத்தினுள் ஊடுருவி தாக்குதல். இரு விசைப்படகுகள், ஆயுதக்களஞ்சியம் அழிப்பு. 5 படையினர் பலி.

## மார்ச்

**04.03.98** → நயினாமடுவில் கிளைமோர் தாக்குதல். 15 படையினர் பலி

**05.03.98** → மருதானையில் வாகனக் குண்டுவெடிப்பு. 38 பேர் பலி, 256 பேர் காயம்.

**09.03.98** → மூதூர்- பச்சனூர் பொலிஸ் முகாம் தாக்கி முற்றாக அழிப்பு.

**11.03.98** → திருமலைத் துறைமுகத்தினுள் ஊடுருவித் தாக்குதல். அதிவேக ரோந்துப்படகு கடற் கரும் புலிகளால் மூழ்கடிப்பு. டோராக்கள் சேதம்.

**13.03.98** → யாழ். புத்தூரில் கிளைமோர் தாக்குதல். 5 படையினர் பலி.

→ பொதுமக்கள் காணாமல் போவதில் சிறிலங்கா முதலிடம்; ஐ.நா சபையின் நடவடிக்கைக் குழு கண்டனம்.

**16.03.98** → ஐ.நா மனித உரிமைகள் ஆணைக் குழுவின் கூட்டத் தொடரில் சிறிலங்காவின் மனித உரிமை மீறல்கள் கண்டனம்.

**20.03.98** → கொடிகாமம் மினிமுகாம் தாக்கியழிப்பு. ஆறு படையினர் பலி. இரு போராளிகள் வீரச்சாவு.

**21.03.98** → கொழும்பில் இரவோடு இரவாக 1500 தமிழர்கள் கைது.

**28.03.98** → மட்டு. குடாப்பொக்கணை பொலிஸ் நிலையம் முற்றாக தாக்கி அழிப்பு.

**30.03.98** → வடமராட்சி கிழக்குப் பகுதியைக் கைப்பற்ற படையினர் மீண்டும் கடும் முயற்சி. மும்முனைகளில் கடும் சமர்.

## ஏப்ரல்

**05.04.98** → ஆறு தென்மராட்சி இராணுவ காவலரண்கள் விடுதலைப் புலிகளால் தாக்கியழிப்பு. ஆறு படையினர் பலி, பலர் படுகாயம்.

**18.04.98** → திருமலை கடற்பரப்பில் 10 டோராக்களுடன் ஏழு மணிநேரச் சமர். இரு கடற் கரும்புலிகள் உட்பட ஐந்து போராளிகள் வீரச்சாவு.

**20.04.98** → மாங்குளத்தை கைப்பற்ற மும்முனைகளினூடாக முனைந்த படையினர் மீது தாக்குதல். ஆறு டாங்கிகள் அழிப்பு, MI 24 சேதம், 50 படையினர் பலி, 250ற்கு மேற்பட்டோர் காயம். நவீனரக ஆயுதங்கள் புலிகள் வசம். இரு போராளிகள் வீரச்சாவு.

**22.04.98** → சாவகச்சேரியில் மகள் முன்னிலையில் தாய் படையினரால் சுட்டுக்கொலை.

**27.04.98** → திருமலையில் 'புலிவேட்டை' என்ற குறியீட்டுப் பெயருடன் இராணுவ நடவடிக்கை ஆரம்பம்.

## மே

**02.05.98** → தோப்பூர் இராணுவ - பொலிஸ் கூட்டுத் தளம், மாஞ்சோலை பொலிஸ் நிலையம் ஒரே நாளில் தகர்ப்பு. 15ற்கு மேற்பட்ட படையினர் பலி.

**06.05.98** → தமிழீழ தேசியத் தலைவரால், ஐ.நா பிரமுகரின் வருகையை முன்னிட்டு 6ம் 7ம் திகதி போர் நிறுத்தம்.

**13.05.98** → ஜெயசிக்குறுய் ஓராண்டு நிறைவு வெற்றி விழா வன்னியில் கொண்டாட்டம்.



→ யாழ். வடமராட்சி இராணுவ இணைப்பதிகாரி பிரிகேடியர் லரி விஜேரத்னா தற்கொடை தாக்குதல் மூலம் கொல்லப்பட்டார்.

**14.05.98** → செட்டிகுளத்தில் இராணுவ தொடரணி மீது தாக்குதல். இரு அதிகாரிகள் உட்பட 18 படையினர் பலி.

**17.05.98** → யாழ். நகர மேயராக தெரிவு செய்யப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியை சேர்ந்த சரோஜினி யோகேஸ்வரன் சுட்டுக்கொலை.

**24.05.98** → செங்கலடி சிறிலங்கா இராணுவ - புளொட் கூட்டுமுகாம் தாக்குதல்

**25.05.98** → சரணடைந்த ஜெயசிக்குறுய் சிப்பாய் தேசியத் தலைவரின் உத்தரவின்பேரில் விடுதலை.

**30.05.98** → மாங்குளத்தில் தொடர்ந்து ஐந்தாவது நாளாக கடும் சமர். நூற்றுக் மேற்பட்ட படையினர் பலி, பெறுமதி வாய்ந்த ஆயுத தளவாடங்கள் புலிகள் வசம்.

→ பொலநறுவை எல்லைக்கிராம இராணுவ காலரண் மீது தாக்குதல். ஏழிற்கும் மேற்பட்ட படையினர் பலி.



**31.05.98** → யாழ். நூலக எரிப்பின் 17வது ஆண்டு நினைவுகள் யாழில் கறுப்புப்பட்டி அணிந்து நினைவு கூரப்பட்டது.

→ ஜெயசிக்குறுய் படையில் கொல்லப்பட்டவர்களில் புலிகளால் கைப்பற்றப்பட்ட சடலங்களில், 9 சடலங்கள் செஞ்சிலுவை சங்கமூடாக ஒப்படைப்பு.

## ஜூன்

**05.06.98** → கிளிநொச்சியில் பத்து மணிநேரச்-சமர். 100ற்கு மேற்பட்ட படையினர் பலி. 42 போராளிகள் வீரச்சாவு.

→ மூன்றுமுறிப்பு, அம்பகாமம் பகுதிகளில் கடும் சமர். 70ற்கு மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டனர்.

**06.06.98** → கிளிநொச்சி அம்பலகாமத்தில் கைப்பற்றப்பட்ட இராணுவ சடலங்கள் 57 செஞ்சிலுவை சங்கம் மூலம் ஒப்படைப்பு.

**09.06.98** → கிளிநொச்சியில் மற்றொரு பாரிய நகர்வு. 75 படையினர் பலி. 200 மேல் படுகாயம். 26 போராளிகள் வீரச்சாவு.

**10.06.98** → முல்லைத்தீவில் கிபீர் குண்டுவீச்சு தாக்குதல். 25 பொதுமக்கள் பலி, 50 பேர் படுகாயம்.

**15.06.98** → முல்லைத்தீவில் நடாத்தப்பட்ட தாக்குதலைக் கண்டித்து வன்னியில் ஆர்ப்பாட்டப் பேரணி. ஐ.நா. செயலாளர் நாயகத்திற்கு மனு அனுப்பப்பட்டது.

**20.06.98** → மூன்றுமுறிப்பு, மாங்குளம் கிழக்குப் பகுதிகளில் மோதல். 50 படையினர் பலி, 3 டாங்கிகள் அழிப்பு.

**22.06.98** → வாகரையில் முன்னேற முயன்ற படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் எட்டு மணிநேர கடும்சமர். மக்கள் இடம் பெயர்வு.


**26.06.98** → MI 24 விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது.

→ கனகராயன் பகுதியில் நடாத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் விமானப்படை அதிகாரி உட்பட 12 சிப்பாய்கள் பலி.

→ புதூர் பகுதியில் கண்ணிவெடி தாக்குதல். அதிகாரி ஒருவர் உட்பட 9 படையினர் கொல்லப்பட்டனர்.

(மிகுதி அடுத்தவாரம்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# நத்தார் பரிசு!

கி.செ.துரை

நத்தார்விழா நடக்கும்போதே பரிசும் வந்திருப்பது சோதிகலாபத்திற்கு மகிழ்ச்சி தந்தது. அது கொழும்பிலிருந்து கூரியரில் வந்திருந்தது. தபால்காரன் விழா மண்டபத்திற்கே தேடிவந்து கொடுத்திருப்பதால் மகிழ்ச்சி இரட்டிப்பாகியிருந்தது.

கைக்கடக்கமான சின்னஞ்சிறிய அழகிய பார்சல். தொளாயிரத்து இருபது ரூபாய்களுக்கான தபால் தலைகள் பலவர்ணங்களில். தாய் புவனேசுவரிதான் கொழும்பிலிருந்து அனுப்பியிருக்கிறாள். பரிசைப் பார்த்தவுடன் டேனிஸ் காரரெல்லாம் வட்டமாகச் சூழ்ந்துகொண்டு ' கூரா! கூரா!' என்று வாழ்த்தொலி கிளப்பினார்கள்.

உடைத்துப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் கிளம்பியது. சாவிக்கொத்தில் தொங்கிய சிறிய வில்லுக்கத்தியை விரித்தான். அப்போதுதான் ராஸ்முஸ் ஓடிவந்து அவனைத் தடுத்தார். 'நண்பனே! இது பரபரப்பும் ஆச்சரியமும் நிறைந்த பரிசு. முதலில் நத்தாருக்கான சவுக்கு மரத்தின் கிளையில் இதைத் தொங்கவிடுவதுதான் முறை. ஏனென்றால் இது சாதாரண பரிசல்ல. தேவனே அனுப்பியிருக்கும் பரிசு. மரத்தைச்சுற்றி ஓடியதும் எல்லோரும் வட்டமாக நின்று இதைப் பிரித்துப் பார்ப்பதுதான் சுவையானது' என்றார்.

வேறு வழியின்றி சவுக்கு மரக் கொப்பில் அதைத் தொங்கவிட்டான்.

மண்டபத்தின் நடுவே சவுக்குமரம் கம்பீரமாக நின்றது. அதன் உச்சியில் ஒரு வெள்ளி நட்சத்திரம். கீழே கண்ணாடிக் குமிழ்களும், வர்ண விளக்குகளும் டாலடித்துக் கொண்டிருந்தன. அருகில் மேசைகள் போடப்பட்டு சுற்றவர கதிரைகளை அடுக்கியிருந்தார்கள். மெழுகுவர்த்திகள் ஏற்றப்பட்டு ஒருவித அமைதி குடிகொண்டிருந்தது. சோதி கலாபமும், பப்பாலியும் எதிரெதிராக அமர்ந்திருந்தனர். பரிசை யாரும் அடித்துச் சென்றுவிடாமலிருக்க அடிக்கடி சவுக்கு மரத்தை அவதானித்துக் கொண்டான் கலாபம்.

'என்ன பரிசு வந்திருக்குமெண்டு நினைக்கிறாய் ? '

'... அதுதான் தெரியேல்லை..! ' தலையைச் சொறிந்தான் கலாபம்.

'தலையிலை இனியும் என்தான் கிடக்குதெண்டு சொறியிறாய் ? ' பப்பாலி கூறியதை அவனால் புரியமுடிந்தது.

'எல்லாம் சொடுகு செய்யிறவேலை ! முப்பது வயசுவரை தலையிலை மயிர் இருந்திச்சு. அப்ப உச்சியிலை சனியன் இருக்குதெண்டாங்கள். இப்ப சொடுகு இருக்கெண்டுறாங்கள். சனியனே பிடுங்கேலாத மயிரை சொடுகு பிடுங்கி யிட்டுதுபார் அதுதான் ..' அதைக்கேட்ட தும் பப்பாலி தன்னுடைய தலையை வறுகிப்பார்த்தான் சொரசொரவென தேங்காய்ப்பூ மழை பொழிந்தது.

'நீயேன் தலையை வறாண்டுறாய் ? உனக்குக் கலியாணம் முடிஞ்சுது. இனி மயிர் கொட்டினாலென்ன? முளைச்சாலென்ன? ' கலாபம் கவலையோடு தனது வைன் கிளாசைக் காலிசெய்தான்.

'நான் நினைக்கிறன். இந்தப் பார்சலிலை பொம்பிளையின்ரை படந்தான் இருக்கவேணும்! நான் சொல்லுறது சரியோ பிழையோ ? ' கலாபம் மகிழ்ச்சியுடன் பப்பாலியையும் பார்சலையும் திரும்பித் திரும்பிப் பார்த்தான். புகைப் படங்களை வைக்கக்கூடிய அளவில்தான் அந்தப் பார்சலும் இருந்தது.

'சரியாத்தானிருக்கும்... மூண்டு தங்கைச்சிமாரைக் கரைசேர்க்கப் பாடுபட்டே நான் பாதி மொட்டையனாகியிட்டன் எண்டு எழுதினனான்... அப்பருக்கில்லாட்டியும் அம்மாவுக்கு அது விளங்கியிட்டுது போலை.' இப்போது மகிழ்ச்சியினால் இருவரும் தமது கரடிமார்க் பியர்களை உடைத்துக் கொண்டனர்.

'இனிய தமிழ் நண்பர்களே! இயேசு பாலன் பிறந்திருக்கும் மகிழ்விற்காக மேலும் சிறிதளவு சிகப்புநிற வைனைக் குடித்துக் கொள்ளுங்கள்! ' என்றபடியே ராஸ்முஸ் முழங்கையை மடிக்காது வைன் போத்தலைச் சரித்து கிண்ணங்களை நிரப்பினார்.

'சவுக்கு மரத்தைச் சுற்றியோட வந்திருக்கும் தமிழ் நண்பர்களே! நான் உங்கள் அருகில் அமரலாமா? '

'தாராளமாக ஐயா! '

'இனியவர்களே! நீங்கள் இருவரும் டென்மார்க் வந்து எத்தனையாண்டுகள் என்பதை...? ' உரையாடல் ஆரம்பித்தது.


'நான் மூன்றாவது வருடமாகவும் சவுக்குமரத்தைச் சுற்றியோட இருக்கிறேன். எனது நண்பனுக்கு பத்துவருடங்கள் அனுபவமுண்டு.' விபரித்தான் பப்பாலி.

'நண்பர்களே! நமது கலாச்சாரத்தில் நீங்கள் உங்கள் தலைகள் நனைந்திருப்பதை என்னால் நன்றாக அறிய முடிகிறது. ஆமாம்! உங்களுக்குத் திருமணமாகிவிட்டதா? '

' என்க்கு இரண்டு பிள்ளைகள் இருக்கிறார்கள். எனது நண்பனுக்கும் இயேசு பாலன் போல ஓர் குழந்தை கிடைக்க வேண்டுமென்றால் முதலில் அவனுக்கு ஓர் திருமணம் நடைபெற வேண்டியிருக்கிறது.'

'நிச்சயமாக' அவரின் திருமணத்திற்கு எங்கள் வாழ்த்துக்கள் உண்டு. அதுசரி இந்தக் குதூகலமான விழாவிற்கு உமது மனைவியையும் பிள்ளைகளையும் அழைத்து வந்திருக்கலாமே?' பப்பாலியைப் பார்த்துக் கேட்டார்.

' இல்லை ஐயா அவர்கள் நாட்டில் இருக்கிறார்கள். அவர்களின் வரவிற்காகவும் எனது நண்பனின் திருமணத்திற்காகவும் நாங்கள் இந்தச் சவுக்கு மரத்தைச் சுற்றியோட என்றென்றும் தயாராக இருக்கிறோம்.'



'சந்தேகமே வேண்டாம்! உங்கள் ஆவலை ஆண்டவனிடமே விட்டு விடுங்கள். இதோ இந்தக் கஞ்சியைக் குடியுங்கள். இதன் அடியில் மட்டும் ஓர் முந்திரிக் கொட்டை சிக்கிவிட்டால் உங்களின் எண்ணம் நிறைவேறும் என்கிறேன். 'அவர் கொடுத்த பிளாஸ்டிக் கிண்ணத்திலிருந்த கஞ்சியை வதவதவென வாயில் ஊற்றிக்கொண்டனர். நறுக்! நறுக்!!' கென இருவர் வாய்களிலும் முந்திரிக் கொட்டைகள்.

'அடடா.. நண்பர்களே ! உங்கள் வாய்களில் முந்திரிக் கொட்டைகளா? நீங்கள் மிக மிக கொடுத்து வைத்தவர்கள். இந்த முந்திரிக் கொட்டைகள் அதிர்ஸ்டத்தின் முன் வரவுகள். வாருங்கள் நாமெல்லாம் எமது கைகளைக் கோர்த்துக் கொள்வோம். பெண்கள் ஆண்களின் கைகளையும், ஆண்கள் பெண்களின் கைகளையும் பற்றிக்கொள்ளுங்கள். பாடலை இசைத்தபடியே வட்டமாக வட்டமாக ஓடுங்கள் இதுவல்லவோ ஆனந்தம். இருவரும் அருகிலிருந்த டெனிஸ்காரிகளின் கைகளைப் பற்றியபடியே கால்களை மாறிமாறிப் போட்டனர். பாடலின் வேகத்திற்கேற்ப சவுக்கு மரத்தைச் சுற்றினர்.

காரம் கூடிய கரடிமார்க் பியரும், சிவப்பு வைனையும் கலந்து குடித்திருப்பதால் மரத்தைச் சுற்றி ஓட ஆரம்பிக்கவும் சோதி கலாபத்திற்கு மெல்லிய கிறுதியாக வந்தது. எனினும் கிறுதி வந்தோர் விழுந்து போகாமலிருக்கத்தான் இப்படிக் கைகளைப் பற்றியபடியே ஓடுகிறார்களோ என்றும் யோசித்தான். ஓடும்போதே மரத்தில் தொங்கும் தன்னுடைய பார்சலையும் ஓரக்கண்ணால் அவதானித்துக் கொண்டான். உள்ளேயிருப்பது ஒரு பெண்ணின் பல படங்களா? அல்லது பல பெண்களின் பல படங்களா ? அறிய ஆவலுற்றான்.

மரத்தின் உச்சியில் கட்டப்பட்டிருந்த வெள்ளி நட்சத்திரம் கண்களைப் பறித்தது. மேலும் மரத்தைச்சுற்றச் சுற்ற எங்கோ சிறகடித்துப் பறப்பதைப் போலுமிருந்தது. பாலனின் பிறப்பால் நம் துன்பங்களெல்லாம் அகன்று விடுகிறதென யாரோ பாடுவது நாத வெள்ளமாகப் புரண்டது.

பாடலுக்குரியவர்கள் வேறுயாருமல்ல ஒன்று ஈரானிய அலி மற்றயது துருக்கியரான அபாஸ். அவர்களும் சவுக்கு மரத்தைச் சோடிப்பதும், நத்தார் பாடல்களை இசைப்பதுமாக பல வருடங்களாக ஓடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களின் மனைவி மக்கள் வருவதற்காகவும் ஏற்கெனவே ராஸ்முஸ் ஆண்டவனைப் பிரார்த்தித்து விட்டார்.

'நம்பிக்கையே பலம் ! நண்பர்களே இனிய கோழிக்குஞ்சுகள் போன்ற மங்கைகளே! இனி எல்லோரும் உங்கள் தோள்களின்மீது கைகளைப் போட்டபடியே இடது கால்களை மட்டும் வீசி வீசி ஓடுங்கள்.' ஓர் டேனிஸ்காரன் சன்னமாக முழங்கினான்.

விழாவை ஏற்பாடு செய்த அகதிகள் கழக அதிகாரிகளைப் பார்த்துச் சிரிப்பதும் காலெறிந்து வேகமாக ஓடுவதுமாயிருந்தான் பப்பாலி. அந்த ஓட்டத்தினால் தனது மனைவி மக்களை இந்த நாட்டிற்குள் விரைவாக இறக்கிவிடலாமென்பது அவனுடைய நம்பிக்கை.

பப்பாலியின் மனைவி இவனுக்கு தூரத்து உறவு. அவள் வரும்போது தனக்கும் ஒரு மணமகளை வரவழைக்க ஏற்பாடு செய்துவிட வேண்டுமென எண்ணியிருந்தான். அதற்காக பப்பாலியைப் பார்த்துச் சிரித்தபடியே இவன் ஓடினான். முன்னால் ஓடிக்கொண்டிருக்கும் அலியும் அப்பாசும்கூட சிரிப்பைக் குறைத்தபாடாகத் தெரியவில்லை.

இந்த ஆனந்தத்திற்கு இடையில்தான் அந்த அசம்பாவிதமும் நடந்தது. சோமாலியனான மஹ்மூத் காலிடறி சவுக்கு மரத்தின்மீது விழுந்தான். மரம் ஒருக்கெளித்துச் சாய்ந்தது. எல்லோரும் விலகித் தூரமாக ஓடினார்கள். துடித்துப் பதைத்த கலாபம் வேகமாக ஓடிச் சென்று மரத்தை விழவிடாது தாங்கிக் கொண்டான். தலையிலும் தோள் மூட்டிலும் பலத்த அடி. ஊரில் சங்கக்கடைப் புளிமூட்டை விழுந்ததால் அடிபட்டிருந்த அவனுடைய முதுகுக் கும்பியில்தான் சவுக்குமரமும் சரிந்து நின்றது. இருந்தாலும் , பார்சலை நொருக்கி விடாமல் காப்பாற்றிக் கொண்டான்.

சொற்பநேரம் மயான அமைதி. ஓடிச் சென்றவர்களெல்லாம். மெல்ல மெல்ல அடியெடுத்துத் திரும்பி வந்தார்கள். சவுக்கு மரத்தை மீண்டும் நிமிர்த்தி வைத்தார்கள்.

'சவுக்கு மரத்தைக் காப்பாற்றிய வீரம் நிறைந்த தமிழ் நண்பனே! உம்மை நாமெல்லாம் பாராட்டுகிறோம்.' என்று ராஸ்முஸ் கூறியதும் எல்லோரும் தமது கைகளைத்தட்டி அவனை வாழ்த்தினார்கள்.

'ஆசீர்வாதம் பெற்ற நண்பனே! இதோ உமது பரிசு! எங்கே மகிமை பொருந்திய உமது கரங்களால் அதைத் திறந்து பாரும்! அதைக்காண நாமெல்லாம் ஆவலாக இருக்கிறோம்.' புகைப்படங்களா? அல்லது பெண்ணின் வரலாறடங்கிய ஒளியிழையா? எதுவாக இருக்குமெனத் தெரியாதவனாக மெல்ல மெல்ல பார்சலை உடைத்தான். சுற்றியிருந்த கடதாசிகளை ஒவ்வொன்றாக நீக்கி நீக்கிச் செல்லவும் கடைசியாக ஓர் சிறிய காட்போட் பெட்டி வந்தது.

'ம்! தாமதமேன் நண்பரே!' பெரும் நிசப்தம். எல்லோரின் பார்வையுமே பெட்டியில்தான் பாய்ந்திருந்தது.

பெட்டியைத் திறந்ததும் புகைப் படங்களைத் தேடினான். அப்படி எதுவும் அகப்படவில்லை. ஒரு போத்தலில் பச்சைநிறமான திராவகம் இருப்பது தெரிந்தது. டேனிஸ்காரருக்கு அது என்ன திராவகமென்று தெரியவில்லை. போத்தலில் ஒட்டியிருந்த லேபலும் சிங்களத்திலிருந்தது. உள்ளே ஒரு கடிதத்துண்டு. படித்துப் பார்த்தான்.

'மகனே! உனது கடிதம் கிடைத்தது. உனக்கு மயிர் கொட்டுவதாக எழுதியிருந்ததை அறிந்து நாமெல்லாம் கவலைப்பட்டோம். இத்துடன் ஒரு தைலப் போத்தலை அனுப்புகிறேன். உனக்கு மேலும் இரண்டு சகோதரிகள் இருக்கிறார்கள் என்பதை மறந்துவிடாதே! அதுவரை இந்தத் தைலத்தைத்தடவி உனது தலைமுடியைக் காப்பாற்று. டென்மார்க்கில் மட்டுமல்ல கனடா, ஜேர்மன், பிரான்ஸ், சுவிஸ் போன்ற நாடுகளில் உள்ள மயிர் கொட்டும் இளைஞர்களுக்காகவே இந்தத் தைலத்தை விசேடமாகத் தயாரித்திருக்கிறார்களாம். பாவித்து பலனை அறியத்தருக.

இப்படிக்கு
உன் எதிர்காலத்தில் ஆவலுடைய
அம்மா க.புவனேசுவரி.'

தைலப் போத்தலை நிலத்தில் எறிந்துடைப்பதா? தலைக்குத் தப்புவதா ? என்பதைவிட சிங்களமும், தமிழும் தெரியாத டேனிஸ்காரருக்கு இந்தத் தைலக்கதையை எப்படிச் சொல்வதென்பதை நினைத்தபோது தலையைப் பிடுங்க வேண்டும் போலிருந்தது. அதற்கும் தலையில் மயிர் இருந்தால்தானே என்று கவலைப்பட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சினிமா

# குருபார்வை

> விபச்சாரி என்று பட்டம் சுமத்துவோம். திருமணத்தில் புகுந்து கலாட்டா செய்து ஒழுக்கமற்றவள் என்று நிரூபித்து திருமணத்தை நிறுத்துவோம். ஏற்கெனவே ஆண் தொடர்பு இருந்தது என்று பயமுறுத்தி, குழந்தையை மாற்றானுக்குப் பிறந்தது எனப் பயமுறுத்தி உங்களையே கொலைகாரிகளாக்குவோம் என்கிறார் மனோஜ் குமார்.

குருபார்வை என்றொரு படம் தமிழகத்தின் அனைத்துப் பத்திரிகைகளின் பாராட்டுக்கும் உட்பட்டிருக்கின்றது. தமிழகம் அதன் பொதுத்தளத்தில் எவ்வளவு அயோக்கியத்தனமான தகவல் தொழில்நுட்ப ஊடகத்தைக் கொண்டிருக்கிறது என்பதுதான் இதன் மூலம் நிரூபணமாகிறது.

சமீபத்தில் ஆண்களின் நையாண்டிக்கும், கேவல வகைகளுக்கும் உட்பட்டதால் ஷரிகா உஷா எனும் இளம் பெண் கோமா நிலையிலிருந்து உயிர் துறந்தார். தமிழக சட்டமன்றத்தால், பெண்களைக் கேவலப்படுத்தும் விடலைகளுக்கு ஓராண்டு சிறைத் தண்டனை கொடுப்பதென்றும் சட்டம் கொண்டுவரப்பட்டது. தமிழகத்தின் வன்முறை அரசியலில் பெரும்புள்ளியான தாமரைக்கனி பெண்களின் உடைகளுக்கும், நடத்தைக்கும் தொடர்பு படுத்தி ஆண்களின் காவாலித்தனத்தை நியாயப்படுத்தி இருந்தார். சேலை நம் உடை, பிற உடைகள், சல்வார் கமீஸ் உட்பட ஆண் உணர்ச்சிகளைத் தூண்டும் உடை என்கிறார் தாமரைக் கனி. இவருக்கும் திரைப்படாசிரியர் பொறியியலாளர் தாமரைக்கும் இடையிலான விவாதம் ஒன்றும் குமுதம் பத்திரிகையில் இடம்பெற்றது. இச் சூழலில் வந்து பாராட்டப்படும் படம்தான் குருபார்வை.

குருபார்வை பிரகாஷ் ராஜ் இன்னொரு கமல்ஹாசன் ஆகிவிடுவார் என்கிறது குமுதம் மாமி விமர்சனம். மாமி சொல் பொய், குருபார்வையின் கதை என்ன?

மீசைமழித்த, திருநீறுவைத்த அப்பாவிப் பையன் பிரகாஷ் ராஜ். எம்.காம். கோல் மெடலிஸ்ட். ஒரு தங்கை, வயதான தாய், பேரனைப் போற்றும் பாட்டி. அவனை நேசிக்கும் அடுத்த வீட்டுப் பெண். வங்கி அதிகாரி வேலை இவர்களது கனவு. வங்கி அதிகாரித் தேர்வு எழுத வாய்ப்புக் கிடைக்கிறது. துரதிர்ஷ்டவசமாக அவரது நுழைவுச்சீட்டு ஒரு கொலை நடந்த இடத்தில் தவறி விழ, விளைவாக கொலையுண்ட ரவுடியின் தம்பியால் தாய், பாட்டி, தங்கை, காதலி எல்லோருமே வீட்டோடு கொழுத்தப்படுகின்றார்கள். அப்பாவி பிரகாஷ் ராஜ் சிறைக்குப் போய் வெளியே வந்து கொலைக்குக் காரணமானவர்களைப் பழி தீர்க்கிறார்?

கொலைக்குக் காரணம் யார்? அவர்களை எவ் வகையில் பழி வாங்குகின்றார்?

கொலைக்குக் காரணம் மூன்று பெண்களின் நடத்தைதான். பரீட்சை எழுதப்போகும் அப்பாவிப் பையனைப் பிடித்து தமது உடைகள் (சல்வார் கமீஸ், மிடி என நாகரிக உடைகள்) கவர்ச்சிகரமா? இல்லையா? என 'மார்க்' போடக் கேட்கிறார்கள் பெண்கள். பையனை Eve Tease செய்கின்றார்கள். அப் பெண்களில் ஒருத்தியின் பெயர் ஸோனாலி. அவரது தாய், தகப்பன் ராஜஸ்தானியர்கள். பிற்பாடு அப் பெண்கள் தங்கள் கார் மீது எச்சில் துப்பும் ரவுடியோடு சண்டைக்குப் போகின்றார்கள். நடக்கும் தகராறில் பக்கத்து இரும்புத் தூணில் அடிபட்டுச் சாகிறான் ரவுடி. அந்த இடத்தில் கிடக்கிறது பிரகாஷ் ராஜின் நுழைவுச்சீட்டு. அவர்தான் கொலையாளி என்கிறார்கள் மூன்று பெண்களும். அதன் விளைவாக பிரகாஷ் ராஜ் குடும்பம் எரித்துக் கொலை செய்யப்படுகின்றது. பிரகாஷ் ராஜ் சிறைத் தண்டனை அனுபவிக்கிறார்.




இச் சம்பவம்தான் படத்தின் உயிர்நாடியாக அமைகின்றது. இச் சம்பவத்தில் சேலையில்லாத சல்வார் கமீஸ், மிடி உடைகள் பிரச்சினையாக்கப்படுகின்றன. பரீட்சை எழுதவரும் மாணவனைத் தடுத்து நிறுத்தி பெண்கள் Eve Teasing செய்கிறார்கள். பெண்களே கொலைக்குக் காரணம். இவர்களால் வங்கி அதிகாரிக்கான பரீட்சை எழுதும் மாணவன் பிரகாஷ் ராஜின் எதிர்காலமே அழிக்கப்படுகின்றது. குடும்பம் அழிகிறது. இப் பெண்கள் ஒழுக்கங்கெட்ட நாசகாரிகள் என்பது பார்வையாளனுக்கும் சொல்லியாகிவிடுகின்றது.

இதை எல்லாவற்றையும் மீறிய அயோக்கியத்தனம் ஒன்றும் உண்டு:

இப் பெண்களில் ஒருத்தியின் பெயர் ஸோனாலி. இவள் ராஜஸ்தானிப் பெண். இவளது பெற்றோர் ராஜஸ்தானியர். இவள் சேலை உடுத்தாத சல்வார் கமீஸ் போட்ட பெண். அத்துடன் இதையும் சேர்த்துக் கொள்ளுங்கள்: உண்மையில் மரணமுற்ற ஷாரிகா ஷா ஒரு ராஜஸ்தானிப் பெண். அவள் சேலை உடுத்துவதில்லை. அவரது பெற்றோரும் ராஜஸ்தானியர்.

அரசியலுக்கு தாமரைக்கனி இருக்க, சினிமாவுக்கு இயக்குநர் மனோஜ் குமார் இருக்கிறார். ஆண் வக்கிர உணர்வின், வன்முறை உணர்வின் வெகுஜன கமர்சியல் சினிமா வடிவம் குருபார்வை.

சரி அவர்களை எப்படிப் பழி வாங்குகிறார்? கச்சிதமாகத் திட்டமிட்டு பிரக்ஞைபூர்வமாக எம்.காம். கோல்ட் மெடல் மூளையை உபயோகித்து புத்தி சாலித்தனமாகப் பழிவாங்குகிறார்?

ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்கிறேன் என விடுதிக்குக் கூட்டிப்போய் விபச்சாரி எனப் பழிசுமத்தி போலீசினால் கைது செய்யப்பட வைக்கிறார். இப் பெண்ணின் அப்பா ஒரு நீதிபதி. ராஜஸ்தான் பெண் ஸோனாலியை ஏற்கெனவே திருமணமானவர் என்று கூறி அதிரடி வைத்தியம் செய்து, அவரது திருமணத்தை நின்றுபோகச் செய்கிறார். இன்னொரு பெண்ணை, தன் கையாலேயே தன் கணவனை சுட்டுக் கொல்லுமாறு செய்து சிறைக்கு அனுப்புகிறார். இப் பெண்ணின் கணவன் முன்னாள் ரவுடி. தனது தமையனின் கொலைக்காக பிரகாஷ் ராஜ் குடும்பத்தை அழித்தவன். ஆக ஒரே கல்லில் இரட்டை வெற்றி.

பிரகாஷ் ராஜ் பழிவாங்கினாலும், பெண்களை இவ்வாறு கேவலப்படுத்தி பழிவாங்கினாலும் நாயகன்தான். குழந்தையைக் காப்பாற்றுகிறார். மோசடியும், திருட்டும் செய்யும் தமிழ்ப் பெண் குஷ்புவை திருமணம் செய்துகொள்கிறார். மீசை மழித்த திருநீறு வைத்த, எம்காம். கோல்ட் மெடலிஸ்ட் இன்றைக்கு மிக முக்கியமான சினிமா நாயகனாக ஆகிவிட்டார்.

பெண்களை Eve Teasing செய்து சட்டம்போடும் தமிழக அரசு சார்ந்தவர்களே!, பெண்களின் சுய மரியாதைக்குப் போராடும் மனித உரிமை அமைப்புக்களே! கேட்டுக் கொள்ளுங்கள் என மிக மோசமான எச்சரிக்கையாக, வக்கிரத்தில் விளைந்த வன்முறையாகவே இப்படம் வெளியாகி இருக்கிறது.

ஆண்கள் மட்டும் Eve Teasing செய்யவில்லை, பெண்களும், அப்பாவிப் பையன்களை Eve Teasing செய்கின்றார்கள். அதுவும் சேலை தவிர்ந்த உடையணிந்த பெண்கள் என்கிறார் மனோஜ்குமார். இன்றும் வெட்டவெளியில் நின்றுகொண்டு பாலுணர்ச்சிகளையும் தூண்டுகின்றார்கள் என்கின்றார் மனோஜ் குமார். இன்னும் ரவுடியின் அயோக்கியத்தனம் கூட இங்கு இரண்டாம் பட்சமாகி விடுகிறது. பெண்கள் பாலுணர்வைத் தூண்டுகிற மாதிரி உடையணிவதே Eve Teasing க்குக் காரணம் என்கிறார் தாமரைக்கனி.



தமிழக அரசு சட்டம்போட்டு தடுக்கப் பார்க்கிறது. ஆனால் நாங்கள் என்ன செய்வோம் தெரியுமா? என்று கேட்டு பதிலும் சொல்லியிருக்கிறார் மனோஜ் குமார்.

விபச்சாரி என்று பட்டம் சுமத்துவோம். திருமணத்தில் புகுந்து கலாட்டா செய்து ஒழுக்கமற்றவள் என்று நிரூபித்து திருமணத்தை நிறுத்துவோம். ஏற்கெனவே ஆண் தொடர்பு இருந்தது என்று பயமுறுத்தி, குழந்தையை மாற்றானுக்குப் பிறந்தது எனப் பயமுறுத்தி உங்களையே கொலைகாரிகளாக்குவோம் என்கிறார் மனோஜ் குமார்.

ஒரு நிகழ்கால சம்பவம்: உடை, Eve Teasing, குறிப்பிட்ட ராஜஸ்தான் பெண். பெண்களுக்கு ஆதரவான சட்டம். இதைச் சகித்துக் கொள்ள முடியாத ஆண் திமிர்த்தனம்; இவர்களுக்கு மனோ ரீதியிலான வடிகாலாக வந்திருக்கிறது குருபார்வை திரைப்படம். கலாச்சார பாசிசம் என்று நாம் சொல்கிறோம். சில ஆழ்ந்த கருத்துக்கள், பாசிசக் கருத்துக்கள் மேற்போக்கான தளங்களில் செயற்பட முடிவதில்லை. மாறிவரும் சமூக விழிப்புணர்வைக் கணக்கில் எடுத்துகொண்டு அரசுகள் சில சட்டங்களைக் கொண்டு வருகின்றது. ஆனால் அதிகாரத் திமிர்கொண்டவர்களாகவும், ஆண் சுயமைத்தனம் கொண்டவர்களாலும் அதனை ஒப்புக் கொள்ள முடிவதில்லை.



நேரடியாக அயோக்கியத்தனத்திற்கு வக்காலத்து வாங்குவதும் அவர்களால் முடிவதில்லை. ஆனால் தத்தமது இயங்கு தளங்களில் தமது பாசிசக் கருத்தியலை முன்வைக்கவே செய்கின்றார்கள். அத்தகைய கலாச்சார பாசிசம்தான் குருபார்வை படத்தில் செயற்படுகின்றது.

பேசத்தக்க நடிகர்கள். ஆண் பெண் உறவில் சில மென்மையான கட்டங்கள், குடும்ப உறவின் நெகிழ்வு, அண்ணன் தங்கை பாசம், பேரன் பாட்டி உறவு, மத்தியதர வர்க்க அபிலாசைகள் போன்ற எளிமையான இயல்பான வாழ்க்கையின் அடிப்படையில் விஷத்தை இனிப்பாகக் கலந்து தரமுடியும். பொதுவாக உன்னதக் கலைப்படைப்பு என்று சொல்பவற்றிலிருந்து, வெகுஜன வியாபார சினிமா என்று சொல்லப்படுவது வரை இப்போக்கு செயற்படும். கலையின் சிக்கலான தன்மையும் ஆபத்தான தன்மையும் இதுதான்.

இவற்றை ஊடுருவிப்பார்ப்பதன் மூலம், வரலாற்றையும் புனைவையும் உடைத்துப் பார்ப்பதன் மூலம், பிரித்துப் பார்ப்பதன் மூலம் நாம் வாழ்வின் கருத்துக்கட்டம் நோக்கி நகர முடியும். இப்படித்தான் பிரகாஷ் ராஜின் நடிப்பு, குஷ்புவின் ஆற்றல், மணிவண்ணனின் நகைச்சுவைகள் என சூழ்ந்துவிடாமல், நாம் குருபார்வை படத்துக்குள் இயங்கும் வன்முறையையும், கலாச்சார பாசிச கருத்தியலையும் விளங்கிக் கொள்ள முடியும். மேலும் படத்தில் பெண்களின் இருத்தலை இல்லாததற்கு விட அவர்களின் உடல் சார்ந்த ஒடுக்கமே Criterion அடிப்படையாக ஆக்கப்பட்டிருப்பதையும் நாம் பார்க்க வேண்டும்.

குருபார்வை படம் வன்முறையிலான படுவக்கிரமான அயோக்கியத்தனத்தின் கருத்துருவமாக இருக்கிறது. இவ் வகையில் தாமரைக்கனியும், மனோஜ் குமாரும் ஒரே தளத்தில்தான் நிற்கிறார்கள்.

**- யமுனா ராஜேந்திரன் -**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். கோட்டையில் 107 நாட்கள் 13

**யாழ். கோட்டை இரண்டாம் ஈழப்போரின்போது (1990) விடுதலைப் புலிகளின் முற்றுகைக்கு உள்ளானது. 3.மாத முற்றுகையின் பின்னர் கோட்டை விடுதலைப் புலிகளினால் விடுவிக்கப்பட்டது. இம் முற்றுகைக் காலத்தில் கோட்டையினுள் அகப்பட்டுக்கொண்ட படையினரில் தமிழர்களும் சிலர் அடங்குவர். அவர்களில் பொலிசாராகக் கடமைபுரிந்த ரி.என்.நடா அவர்கள் முற்றுகைக்குள் இருந்தவேளை ஏற்பட்ட தனது அனுபவங்களை ஈழமுரசிற்கு வழங்குகின்றார். அதுவே இங்கு தொடராக வருகின்றது.**

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

கோட்டை வாசலைத் தாண்டி கவச வாகனம் சிறிது தூரம் கூட நகர்ந்திருக்காது. ஒரு பாரிய சத்தம். முன்னால் சென்று கொண்டிருந்த கவச வாகனம் புலிகளின் கண்ணி வெடியில் சிதறிப் போனது. இரண்டாவது கவச வாகனத்தில் சென்ற சிப்பாய்கள் கவச வாகனத்தைவிட்டு பாய்ந்து பாதுகாப்புத் தேடிக் கொண்டார்கள். நாமும் பாதுகாப்பு பகுதிகளுக்குள் மறைந்து கொண்டோம்.



புகைமண்டலமாகப் போயிருந்த அப் பகுதி சற்று பார்க்கக் கூடிய அளவிற்கு தெரிவதற்கு அரை மணித்தியாலங்களாகி விட்டது. அதில் இருந்த 18 சிப்பாய்களும் இறந்துவிட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. இதே வேளை இக் கண்ணிவெடி வெடித்ததையடுத்து தாக்குதல் நடாத்திக்கொண்டிருந்த விமானங்களும் தாக்குதலை நிறுத்தி விட்டு ஓடி மறைந்துவிட்டன. கோட்டையில் சிப்பாய்கள் வெறி கொண்டு கத்தினார்கள். பிறேமதாசாவைச் சுட வேண்டும் என்று கூறிக்கொண்டு தங்களது துப்பாக்கிகளால் திசையில்லாமல் வேட்டுக்களைத் தீர்த்தார்கள். சில சிப்பாய்கள் தாம் இனி போராடமாட்டோம், எம்மை அரசாங்கம் ஏமாற்றிவிட்டது என்று கூறி தமது ஆயுதங்களைப் போட்டுவிட்டு தாக்குதலில் ஈடுபடமாட்டோம் என ஒதுங்கிக்கொண்டார்கள்.

ஆனால் கோட்டை பொறுப்பதிகாரி இவற்றை எல்லாம் கவனத்தில் எடுக்கவில்லை. அவருக்கு வெளியே கண்ணிவெடியில் கொல்லப்பட்ட சிப்பாய்களின் உடல்களை எப்படியாவது மீட்க வேண்டும் என்பதிலே குறியாக இருந்தார். அதற்காக முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. எவ்வளவோ முயற்சியின் பின் இறுதியில் இரண்டு உடல்கள் ஒருவாறு மீட்டெடுத்து தகனம் செய்யப்பட்டன.

ஏ.எஸ்.பி. பலாலி படைத்தளத்துடன் தொடர்புகொண்டு, 'மண்டைதீவு படையினர் கோட்டையை நெருங்கமுன்னர் அவசரமாகத் தாக்குதல் நடாத்திக்கொண்டு வெளியேறி வரச்சொன்னது ஏன்?' என்று கேட்டு பேசினார். பலாலி இராணுவ அதிகாரி 'கோட்டை வாசலிலேயே புலிகள் கண்ணிவெடியைப் புதைத்து வைக்கும் வரைக்கும் நீங்கள் என்ன செய்து கொண்டிருந்தீர்கள்?' என அவர் பதிலுக்கு கேள்வி எழுப்பினார். இவ்வாறு சில மணி நேரம் வாதாட்டத்திற்குப் பின்னர், கோட்டைக்கு உணவுப் பொதிகள் தேவையான அளவிற்கு வழங்கப்படுவதற்கு ஆவன செய்யப்படும், அதுவரை யாரும் சரணடையக்கூடாது என்ற கட்டளையுடன் தொடர்பு துண்டிக்கப்பட்டது.

ஆனால் இராணுவ அதிகாரி சில நாட்களாக துண்டிக்கப்பட்டிருந்த கொழும்பு இராணுவ தலைமையகத்துடனான தொடர்பை பல்வேறு முயற்சிகளின் பின் ஏற்படுத்திக் கொண்டார். இராணுவ சிப்பாய்களின் போராடும் மனோநிலை அற்றுப்போய் விட்டதாகவும், பல சிப்பாய்கள் காயமடைந்தும், நோயினாலும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆகவே எமக்கு சரணடைவதைத் தவிர வேறு வழியில்லை என்று கூறிவிட்டு தொடர்பைத் துண்டித்துக்கொண்டார்.

மறுநாள் மாலை ஏராளமான சிப்பாய்கள் நாம் தங்க வைக்கப்பட்டிருந்த சிறைக்கூடத்தை நோக்கி வந்துகொண்டிருந்தார்கள். நாம் பதினைந்து பேரும் அவர்கள் எல்லோரும் ஒன்றாக எமது இடத்தை நோக்கி வந்து கொண்டிருப்பதை பயத்துடன் பார்த்துக்கொண்டிருந்தோம்.

நோயினால் படுத்திருந்த தமிழ் பொலிசாரும் தம்மை மறந்து எழுந்து நின்றுவிட்டார். ஆனால் வந்துகொண்டிருந்த சிப்பாய்களின் கையில் ஆயுதங்கள் இல்லை என்பது கொஞ்சம் பயத்தை போக்குவதாக இருந்தது.

வந்த சிப்பாய்கள் எம்மைச் சுற்றி நின்றுகொண்டார்கள். எல்லோரும் ஒருவரைமாறி ஒருவர் பார்த்துக்கொண்டு நின்றோம். ஒரு சிப்பாய் முன்னால் வந்து தாம் புலிகளிடம் சரணடைய முடிவு செய்துவிட்டோம் என கூறினார். சிப்பாய்கள் எம்மை நெருங்கிவந்து புலிகளுடன் கதைத்து எம்மை காப்பாற்றி வீடுசெல்வதற்கு நீங்கள்தான் வழிவகை செய்து தரவேண்டும் என்று கோரினார்கள். கேட்பதற்கு எமக்கெல்லாம் மிகவும் சந்தோஷமாகத்தான் இருந்தது. ஆரம்பத்தில் எம்மைச் சுட்டுக் கொல்லவேண்டும் என்று கூறிய சிப்பாய்களும் அவர்களுடன் வந்திருந்தார்கள். நால்வரில் இருவர் புலிகளின் தாக்குதலில் கொல்லப்பட்டிருந்தனர். எஞ்சியிருந்த இரு சிப்பாய்களுமே வந்திருந்தனர். ஆரம்பத்தில் எதுவுமே கதைக்காமல் அமைதியாக இருந்துவிட்டு, பின்னர் எமதருகில் வந்து கதைத்தனர். தங்களையும் புலிகளிடம் நல்லவர்கள் என்று சொல்லி தம்மையும் காப்பாற்றும்படி கேட்டுக் கொண்டார்கள்.

சுமார் மூன்று மணித்தியாலமாக நாம் எல்லாம் கூடியிருந்து, எவ்வாறு சரணடைவது, எப்படி சரணடைவது என்பது பற்றி பேசிக்கொண்டிருந்தோம். சிப்பாய்களினால் அன்றுதான் நாம் மரியாதை உடையவர்களாக நடத்தப்பட்டோம் என நான் நினைக்கிறேன். அவ்வளவிற்கு எம்முடன் பணிவாகப் பேசினார்கள்.

ஆனால் அதையும் நிலைக்க விடாமல் மீண்டும் மண்டைதீவில் இருந்து பாரிய தாக்குதல் தொடங்கியது. எம்முடன் கதைத்துக்கொண்டிருந்த சிப்பாய்கள் கதையை இடைநிறுத்தி விட்டு தமது பகுதிகளை நோக்கி ஓடத்தொடங்கினார்கள்.

*(தொடரும்)*

## 'யாழ்கோட்டையை எவ்விதம் கைப்பற்றினோம்' எனும் விடுதலைப் புலிகள் நூலில் இருந்து.....

நேரம் பிற்பகல் 1.00 மணியைத் தாண்டிவிட்டது.

இந்த நிலையில்தான் கோட்டைக்குள்ளிருந்து ஒரு இராணுவ கவச வண்டி வந்துகொண்டிருந்தது.

மண் மூடைகள் அடுக்கப்பட்டு உள்ளே சுமார் 10 இராணுவத்தினரை ஏற்றியபடி பொலிஸ் நிலையக் கட்டடத்திற்குள், உடைக்கப்பட்ட கப்டன் ஆனந்த பாபுவின் காவலரணையும் தாண்டி உள்ளே சென்று நின்றது. அந்த வண்டியை காப்பரணாக்கிக்கொண்டு பல இராணுவத்தினரும் எமது நிலைகளுக்குள்வர முயன்றனர்.

ஏறக்குறைய பொலிஸ் நிலையக் கட்டடங்கள் அனைத்துமே உடைந்துவிட்டன. எமது பிரதான காவல் அரண் ஒன்றும் சரிந்துவிட்டது. இனி இந்தக் கட்டடங்களிற்குள் மனிதர்கள் இருக்க முடியாது எனக் கருதிக்கொண்டே இராணுவத்தினர் அந்த இறுதி முயற்சியை எடுத்தனர்.

ஆனால் உடைந்த சிதைவுகளுக்குள்ளே இருந்து புலிகள் எழுந்தார்கள். இராணுவ வாகனத்தில் வந்தவர்கள் தாக்கத்தொடங்கு முன்னர் தாக்கப்பட்டனர்.

மிரண்ட இராணுவத்தினர் கோட்டைக்குள்ளே ஓட எத்தனித்தனர். விளையாட்டரங்கில் இருந்த புலி வீரர்களின் துப்பாக்கிகள் இயங்கித் தணிந்தபோது பொலிஸ் நிலையவாசலிலேயே 7 இராணுவத்தினர் சுருண்டுவிழுந்தனர்.

எஞ்சியவர்கள் காயங்களுடன் கோட்டைக்குள்ளே ஓடித்தப்பிவிட்டனர்.

எதிரியின் இறுதி முயற்சியும் முறியடிக்கப்பட்டுவிட்டது. எதிரியின் மூக்கு நுனியின் முன்னாலேயே அவனது சகபாடிகளின் சடலங்கள் கிடந்தன. ஆனால் அவனால் அதை எடுக்க முடியவில்லை.

நேரம் மூன்று மணியையும் தாண்டிவிட்டது. சிறிது நேரத்தில் பறந்து வந்த அவ்ரோ விமானமொன்று எமது காவல் அரண்களை அண்டிய யாழ். நகரின் மத்திய பகுதிகளில் ஒருவகை இரசாயனக் குண்டுகளை வீசத் தொடங்கியது.

மாலை 5.30 மணிவரை 25 க்கும் மேற்பட்ட இரசாயனக்குண்டுகளை நகர் மீது வீசி தனது ஆத்திரத்தைத் தீர்த்துக்கொண்டது.

'தான்போக வழியில்லாத மூஞ்சூறு விளக்குமாற்றையும் காவிக்கொண்டு போனதைப்போல' கோட்டையை மீட்க வந்த இராணுவம் கோட்டைக்குள்ளே மாட்டிக்கொண்டு கோட்டை முகாமுக்குள் சிக்குண்டு கிடந்தவர்களுக்கு மேலும் பாரமாகியது.

அன்று தொடக்கம் இரவு பகல் என்ற பேதமின்றி தொடர்ச்சியாகக் கோட்டை தாக்கப்பட்டது.

முதல் நாள் பகல் கோட்டை மதிலோரம் சென்றுவிட்ட சில படகுகளின் உதவியுடன் தண்டு வலித்து காயமடைந்த இராணுவத்தினர் இரவில் இருட்டின் உதவியுடன் மண்டைதீவுக்குத் தப்பி ஓடவும் முயன்றனர்.

இவர்கள் இடைநடுவில் பண்ணைக் கடலுக்குள் கடற் புலிகளினால் பல தடவைகள் தாக்கப்பட்டனர்.

'பாதுகாப்பான பகுதி' என எதிரி கருதிய மண்டைதீவை நோக்கியிருந்த கோட்டையின் கடற்கரைப் பகுதிகளுக்குள்ளும் தினமும் இரவில் இராணுவத்தினர் மீது தாக்குதல்களை நடாத்தினோம்.

எதிரிகளை மலைக்கச் செய்யும் வகையில் தரையில் எவ்விதம் தாக்கப்பட்டார்களோ அதைப் போலவே கடலிலும் தாக்கப்பட்டார்கள்.

முன்னரே போட்ட திட்டத்தின்படி தனது படைவீரர்கள் யாழ். நகரத்தைக் கைப்பற்றிவிடுவார்கள் என்ற அதீத நம்பிக்கையில் சிறீலங்கா அரசியல் தலைவர்கள் கோட்டை கைப்பற்றப்பட்டதாக வெற்றிப் பிரகடனங்களைச் செய்தபடி இருக்க,

இங்கே... மதில் மீது காவல் கடமைக்கு வரும் ஒவ்வொரு சிப்பாயும் புலிகளைக் காவல் காத்ததுடன், புலிகளின் அரண்களுக்கு அருகில் செத்துக்கிடந்த தனது சகபாடிகளின் அழுகிய உடல்களை எடுக்கத் திராணி அற்று பச்சாதாபத்துடன் பார்த்துக்கொண்டிருந்தான்.

நாட்கள் நகர்ந்துகொண்டிருந்தன.

எதிரியினது குண்டுவீச்சுக்களினால் சிதைக்கப்பட்டுக்கிடந்த எமது காவல் அரண்கள் ஒவ்வொரு விடிகாலையிலும் புதிய பொலிவு பெற்று வருவதைக் கண்டு எதிரி திகைத்திருப்பான்.

திலீபனது 3 ஆவது நினைவு நாளும் நெருங்கிக் கொண்டிருந்தது. அந்த நாளை நினைத்து எதிரி கலங்கிக்கொண்டிருந்தான்.

*வெகுவிரைவில் ஈழமுரசில்...*

**'மணலாறு ஒரு வீரவரலாறு'**

அந்நிய படைகளின் படைபலத்தினாலும், ஆயுத பலத்தினாலும் கால்பதிக்க முடியாமற்போன மணலாற்று மண்ணின் காவியங்களைச் சொல்லும் கதை.

மணலாற்று மண்ணில் கால்பதிக்க முனைந்த இராணுவங்களை ஓட ஓட விரட்டிய எங்கள் தேசப் புதல்வர்களின் வீரம்செறிந்த போராட்டத்தைச் சொல்லும் கதை.

இந்திய, சிறீலங்கா படைகள் நடாத்திய பத்திற்கும் மேற்பட்ட பாரிய தாக்குதல்களை முறியடித்து இராணுவ வல்லுநர்களையே அதிர்ச்சிக்குள்ளாக்கிய மணலாற்று மண்ணின் வீர வரலாறு உங்கள் முன் தொடராக...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடிக்கையாளர்கள், நண்பர்கள்
அனைவருக்கும்
எமது புதுவருட வாழ்த்துக்கள்

# ஜவ்னா இறைச்சிக்கடை

ஆடு, மாடு, கோழி இறைச்சி வகைகளையும், தினமும் உயிர்க்கோழி வகைகளையும் மலிவான விலையில் பெற்றுக்கொள்ள விஜயம் செய்யுங்கள்

திங்கட்கிழமைகளில் சபரியப்பன் மளிகை நிறுவனத்தில் எல்லா இறைச்சி வகைகளையும் ஓடர் செய்துகொள்ளலாம்

## Jaffna Boucherie

70, Rue Louis Blanc, 75010 Paris. M°: la Chapelle
Tel: 01 40 35 46 47

விசேட கொள்வனவுகளுக்கு
விசேட விலைக்கழிவுகள்

Pub



மார்கட புவசினியரில் மீண்டும் எமது

## மொழி பெயர்ப்புச் சேவை

ஓ.பி.சி.எல்.

தொடர்புகளுக்கு: M.N Kamalnathan / K. Thiagarajah
(மாலை 3 மணி முதல் 6 மணி வரை)
28 Rue labat, 75018 Paris.
M°: Marcadet Poissionniers - Tel: 06 07 31 51 90



பிரெஞ்சு நாட்டின் எட்டுத் திக்கிலும் தொடர்பிழந்து தனித்துவாழும் நண்பர்களை ஆண்டுக்கொரு முறையாவது சந்திக்க அவர்களோடு சில மணி நேரமாவது உரையாட, சிரித்து, மகிழ பாரிசு தமிழர் இல்லம் கொண்டாடும்

'திரான்சி'யில்
17 வது

# பொங்கல் விழா



Fête du PONGAL

சனி 30.01.99 15.30 மணி

கொண்ட மதமும் கொள்கையும் எதுவாயினும், சொந்த இனம் தமிழினமே! என்று இந்து-கிருத்துவ-இசுலாமிய-பகுத்தறிவாளத் தமிழர்கள் அனைவரும் சேர்ந்து கொண்டாடும் ஒரே விழா 'பொங்கல் விழா' நம்மினத்தை அடிமைகொண்டவர் புகுத்தாத ஒரே விழா தமிழறிஞர்கள் போற்றிப்புகழும் பொங்கல் விழா!
தமிழர்விழா! எனவே இது உங்கள் விழா!
கொண்டாடி மகிழலாம் வாருங்கள்!!

- ★ கலைநிகழ்ச்சி
- ★ பரதநாட்டியம்
- ★ ராப் (ஒடிச்சல்) நடனம்
- ★ இன்னிசைவிருந்து
- ★ குலுக்கல் பரிசுகள்
- ★ பொங்கல் வழங்கல்

தமிழறிவு வளர்ச்சி
1- திருக்குறள்
மனனப்போட்டி
2- தமிழா? பிற மொழியா?
குலுக்கல் மூலம் எடுக்கும் 10 சொற்களின் இனங்கூறி, தமிழில் பொருள்கூறல். (வயது வரம்பில்லை)

போட்டிகளில் பங்குபெற விரும்புவோர் தங்கள் பெயரை 10.01.99 இற்குள் பதிவுசெய்துகொள்ள வேண்டும்.

நன்கொடை 50Frs

இன்றே இடம் பதிவு செய்துகொள்ளுங்கள்

**ESPACE CULTUREL DU PARC**
AVENUE MARCEAU -PLACE ARISTIDE BRIAND
93 700-DRANCY (800 M Gare Le Bourget)
Ou + Bus 143
Rer B le Bourget + Bus 143 dir. Bondy . (Arrêt Pl A. Briand) -Bus 146 Dir: Bobigny Métro (Arrêt Pierre Semard à Drancy)
பாரிஸ் தமிழர் இல்லம்-Association Tamijars Illame -95 Rue Rouget de l'Isle -93700 Drancy.
தொடர்புகளுக்கு: மு.கருணாநிதி - 0148961972 - செய். பாலகிருட்டிணன் - 0160086374
வ.ராமராசு 0148604716 - கோ.சத்தியமூர்த்தி - 0139851796



சர்வதேச தொடர்புக்கான நிமிடங்களை மிக அதிகமாகத் தருகின்றோம்*

# ஞானம் சென்ரர்

(இதில் குறிப்பிட்டிருக்கும் நிமிடங்கள் உண்மையானவை)




இந்தியா 45 நிமிடம்
பிரான்ஸ் 200 நிமிடங்கள்
(மாலை 7.00 மணி முதல் காலை 8.00 மணி வரை

| | | | |
|---|---|---|---|
| இந்தியா | 45 நிமிடம் | பிரித்தானியா | 150 நிமிடம் |
| கனடா | 150 நிமிடம் | அமெரிக்கா | 150 நிமிடம் |
| தாய்லாந்து | 35 நிமிடம் | ஜேர்மனி | 120 நிமிடம் |
| ஹொங்கொங் | 100 நிமிடம் | அவுஸ்திரேலியா | 100 நிமிடம் |
| பிரான்ஸ் | 200 நிமிடம் | பிலிப்பைன்ஸ் | 50 நிமிடம் |
| இலங்கை | 45 நிமிடம் | அல்ஜீரியா | 70 நிமிடம் |
| சுவிஸ் | 120 நிமிடம் | மொரோக் | 70 நிமிடம் |
| மொறிசியஸ் | 35 நிமிடம் | பெல்ஜியம் | 125 நிமிடம் |
| சிங்கப்பூர் | 35 நிமிடம் | பிரான்ஸ் (கைத்தொலைபேசி) | 100 நிமிடம் |
| துனிசியா | 70 நிமிடம் | | |

## இலங்கைக்கு 45 நிமிடங்கள்

லண்டன், ஜேர்மனி, சுவிஸ் நாடுகளுடன் இத்தாலி, ஹொலண்ட் ஆகிய நாடுகளிலும் எமது தொலைபேசி அட்டை சேவையில் உள்ளது.

சகல நாடுகளுக்குரிய தொலைபேசி அட்டைகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

## GNANAM Telecom Center

195, Rue du Fg. Saint Denis. 75010 Paris, France.
Tel: 01 46 07 09 36 / Fax: 01 46 07 00 14
M°: La Chapelle / Gare du Nord

*குறிக்கப்பட்ட சில நாடுகளுக்கு மட்டும்

Pub


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைந்த சொற்கள் எண்: 22

கீழ் உள்ளவற்றில் சொற்கள் கலைந்திருக்கின்ற. சொற்கள் நேர்கோட்டிலும், இடமிருந்து வலம், வலமிருந்து இடம், மேலிருந்து கீழ், கீழிருந்து மேல், மூலைப்பக்கம, இருக்கும். இச் சொற்களை கண்டுபிடித்து கோடிடவும். இச் சொற்களில் சேராத சில எழுத்துக்கள் மேலதிகமாக உள்ளன.

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அ | ரு | வி | ரி | ப் | பு | இ | வ | பு | க | ம் | வ | வி | த | ல் |
| க | ள் | ள | ர் | ப் | ய | ம் | ப் | ள் | ள் | க | ல் | னி | த | த |
| ம் | ம் | க் | ழி | க் | ல | ரி | ல | ல் | ள | ல | மை | த் | தை | று |
| ம் | ச | க | க | வ | தி | ரு | க | ல் | ம் | ல் | டு | தி | ந் | த |
| ம் | ப | ம் | ல | சி | ன் | ல் | ரு | ட | த | எ | பு | ப் | ல | க |
| க | வ | ம் | வ | உ | ந | த | ட | த் | ல் | ரி | கு | ம் | இ | ம் |
| ம் | ம் | த | பா | ல் | த | த் | ர் | ளி | த | ரு | ச | வ | ர | க |
| மி | ம | த் | வ | ம் | வி | லி | ள் | த | த் | லா | ன் | ல | கு | ந |
| தி | த் | ர | இ | ம | சி | ப | நா | து | வி | நா | ய | வ | ர் | ங் |
| த் | வு | கு | பி | ர் | த | த் | ரு | அ | அ | த | மை | ல | க | கை |
| த | எ | ரி | த் | த | ல் | வ | கு | ச | ரு | ன் | த | னி | ம | ம |
| ல் | ப் | ப | த | ம | ம் | ம் | ன | கு | ப | ந் | த | ல் | த | ம் |
| பு | க | ம் | ம் | ல் | ம | ம் | க | க் | ரு | உ | த | க | ல | ம் |
| பு | ப் | ச | ப | ண் | த் | யி | க | அ | ரி | த் | த | ல் | ர | ல் |
| ன் | ச் | ம் | தி | தீ | தி | ம் | ர் | க | ர | த | து | ம | ய | ம் |
| அ | வெ | ம் | த் | ல் | யா | ப் | பு | ப | த் | ம | ம் | வ | த | க |
| மு | த | த | த | த | ன | க | பி | த | க | ம் | ள | ப | ம் | க |
| க | ம் | த் | ல் | மு | ம் | ல | ளி | ரி | ப | ர் | வ | ல் | ம் | தை |
| ம் | ள | த | த | இ | அ | ப் | கை | ப் | த | அ | ப | ப | ட | வி |
| பி | இ | ம் | இ | ல் | பு | பு | க | ல் | பு | ல் | ம் | த | ம | க |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| சிலிர்த்தல் | சரிதல் | விலாசம் | இயக்கம் | எரித்தல் | பதித்தல் | கம்மல் | அவித்தல் |
| தீத்தம் | தரகர் | கம்பம் | சிலம்பம் | கள்ளம் | தர்மம் | விளக்கம் | வம்சம் |
| பலித்தல் | நல்வரவு | திருகல் | தம்பதி | உருக்கம் | அருந்தல் | உத்தமம் | பந்தல் |
| வளர்தல் | மத்தியானம் | தனிமை | தத்தளிப்பு | கதறுதல் | தளிர்த்தல் | வில்வம் | அன்பு |
| குருத்து | பிரிப்பு | அச்சம் | திரிப்பு | குருத்துவம் | மிதித்தல் | அரித்தல் | கயல் |
| பிளத்தல் | இலந்தை | தமையன் | களிப்பு | உலகம் | தகரம் | தன்வழி | பதம் |
| எடுத்தல் | நகுலன் | திண்மம் | நரம்பு | கழிப்பு | பித்தம் | பசப்பு | பரத்தல் |
| கம்பளம் | அமுதம் | பவளம் | விம்பம் | பக்கம் | பிரிதல் | முதல் | மனிதன் |
| வள்ளல் | கப்பம் | வெம்பல் | கலப்பு | விரிப்பு | கள்ளர் | அருவி | பதமம் |
| அருத்தர் | எல்லகம் | அருந்தலர் | குரத்தம் | வில்லம் | கருடர் | மயிர் | மகரிகை |
| இரத்தி | தல்லம் | அசனம் | தத்தல் | மகவன் | குருநாள் | கடல் | பிரமம் |
| நல்கல் | துல்லம் | மல்கல் | நாதன் | வலம் | வயல் | கவிதை | அகம் |
| தபால் | பாதம் | நங்கை | மடம் | கசம் | மதம் | முகம் | களம் |
| இதம் | மரம் | யாப்பு | தந்தி | தீபம் | நகம் | தவம் | வனிதை |
| துருவம் | | | | | | | |

பெயர்: ..............................

முகவரி: ..............................

..............................

..............................

பிறந்த நாள்: ..............................

சந்தாதாரராயின் சந்தா எண்: ..........


கலைந்த சொற்கள் எண்–22 இற்கான விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள்: 08.01.99

*(போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)*

**விடைகள் அனுப்பவேண்டிய முகவரி:**

கலைந்த சொற்கள்
ஈழமுரசு - 22, Rue Perdonnet,
75010 Paris, France.

# கலைந்த சொற்கள் எண் - 21 விடைகள்



ஈழமுரசுவின் கலைந்த சொற்கள் பகுதிக்கு 180 இற்கும் மேற்பட்ட வாசகர்கள் விடையெழுதி அனுப்பியிருந்தார்கள்.

அவர்களில் சரியான விடையெழுதிய வாசகர்களில் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து வாசகர் விபரங்கள் வருமாறு.

1) ச. கபிலன்
Wembley, Middlesex,
HA9 7EW, LONDON.

2) A.Logeswaran
28329 Bremen.
Germany.

3) அல்பேட் மாலா
7000 Chur,
Swiss.

4) வரதராஜா சபாரட்னம்
95000 Cergy,
France.

5) கமலன் நிரஞ்சனா
93300 Aubervilliers,
France.

இவர்களுக்கு
**Lune International Paris**
நிறுவனத்தினரால் பெறுமதி மிக்க நூல்கள் அனுப்பி வைக்கப்படும்.

இந்த கலைந்த சொற்கள் எண்-22 இற்கான சரியான விடையும், கலைந்த சொற்கள் எண்-23ம், 14 - 20 ஜனவரி 99 ஈழமுரசில் வெளிவரும்.

**தயாரிப்பு: சவேயூ சவுந்தரராஜா**


10வது ஆண்டில் காலடிபதிக்கும்

**இமாலயாவின்**

தொடரும் சேவையில்.... மற்றுமோர் அறிமுகம்

**100 இடியப்பம் 100 பிராங்குகள் மட்டுமே**

உங்கள் இல்லங்களையும்; உங்கள் தொழிலகங்களையும் நோக்கிய எமது....

**கடுகதி பார்சல் சேவை**

பிரியாணி ❁ கொத்துறொட்டி ❁ இடியப்பப்பிரியாணி ❁ தண்டூரி வகைகள் ❁ நாண் ❁ சீஸ்நாண் ❁ சப்பாத்தி ❁ சமூசா ❁ றோள்ஸ் ❁ சோறு - கறி

இவற்றை உங்களின் இல்லங்களில் இருந்தபடியே உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்து உண்டு மகிழ்ந்திட இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.

தொலைபேசி: 01 42 06 03 50 / 01 42 03 06 51

**றெஸ்ரோறன் இமாலயா**

9, Rue Jacques Louvel Tessier, 75010 Paris (M° Goncourt)

Pub

**சாந்தினி உணவகம்**

14, Rue Perdonnet, 75010 Paris.
Métro: La chappelle / Gare du Nord
**Tel: 01 42 09 37 99**

காலை – 9.00 மணி முதல் இரவு – 11.30 மணிவரை

**உங்கள் விருப்பத்திற்கேற்ப உணவு**

**காலை:** இட்லி, அப்பம், இலங்கைத்தோசை, மசாலாத்தோசை, இடியப்பம், பிட்டு
**மதியம்:** சோறு (பலவகைக்கறிகளுடன்), பிரியாணி, இடியப்பக்கொத்து, கொத்துறொட்டி, றொட்டி மற்றும் பலவகையான உணவுகள்.
**இரவு:** நீங்கள் விரும்பிய உணவு வகைகள் உண்டு

**மகிழ்ந்திட நாடவேண்டியது சாந்தினி உணவகம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பிரான்சில் அதிக விற்பனையைச் சம்பாதித்த நூல்!

பிரான்சில் இம்முறை விற்பனையான நாவல்களில் அதிகளவு பணத்தைச் சம்பாதித்துக் கொடுத்தது திருமதி 'Marie Desplechin' என்ற பெண் எழுத்தாளரின் 'Sans Moi' என்னும் நூலாகும். தற்பொழுது 10 நாவல்களுக்கு மேல் எழுதிய இவர் 'நான் இல்லாமல்' என்ற இந்த நாவலை தனது இரண்டாவது நர்வலாக எழுதியிருந்தார்.

அதாவது முன்னாளில் போதை வஸ்துக்கு அடிமையான ஒரு பெண், நிகழ்காலத்தில் ஒரு குழந்தையைப் பராமரிக்கும் தாதியாக வாழும்போது அவர்வாழும் சமூகத்தில் எத்தகைய தவறான பார்வைகளுக்கு ஆளாகிறார் என்பதையும், அதற்கிடையே தனக்கும் அக் குழந்தைக்குமிடையே நல்லதொரு உறவு வளர வேண்டும் என்று ஆதங்கப்படும் ஒரு பெண்ணின் இயல்பான ஏக்கத்தையும் சித்தரிக்கும் முகமாகவே அந்நூல் இருக்கிறது.

இந் நூலுக்காக இவருக்கு சிறந்த எழுத்தாளர் என்ற விருது



கிடைத்திருக்காவிடினும் கூட மக்களிடையே அதிக விற்பனையை ஏற்படுத்திய காரணத்தால் இன்றைய பிரெஞ்சுப் பெண் எழுத்தாளர்கள் மத்தியில் 'Marie Desplechin' மிக பிரபலமான எழுத்தாளர் என்ற அந்தஸ்த்தைப் பெற்றுள்ளார்.

# சுவிஸ் மாநிலங்களின் கூட்டமைப்பின் தலைவரான முதல்பெண் Ruth Dreifuss

சுவிசில் முதல்முறையாக மாநிலங்களின் கூட்டமைப்புத் தலைவராக யூதப்பெண்ணான Ruth Dreifuss வந்ததையிட்டு சுவிஸ் மக்களிடையே மட்டுமல்லாது யூத மக்களிடையேயும் கூட இன்று மகிழ்ச்சி நிலவுகிறது. இம் மாதம் 9-ம் திகதி சுவிசின் அரசியல் வரலாற்றில் பிரகாசமான ஒருநாள் என்று பல அரசியல் வாதிகளே பெருமைப்படுமளவிற்கு இவரின் வரவு இருக்கிறது.

யூதப்பெண்ணான இவர் இரண்டாம் உலகமகாயுத்தத்தின் பின் அவர்களது பெற்றோரால் சுவிசுக்கு அழைத்துவரப்பட்டு பின் அதையே தன் நிரந்தர நாடாக மாற்றிக்கொண்டார். தற்போது 58 வயதுடைய இவர், சிறுவயதிலிருந்தே தன்னைச் சூழவுள்ள சமூகத்தின் நிகழ்வுகள் மேல் அதிக அக்கறை செலுத்துபவராகவே இருந்துள்ளார். இதனாலேயே சுவிசிலுள்ள 'பாசல்' என்னும் இடத்தில் பத்திரிகையாளராகவே மக்கள் மத்தியில் அறிமுகமானார். இதன்பின் 1965ம் ஆண்டு சுவிசின் சோசலிசக் கட்சியின் உறுப்பினராக இணைந்து கொண்டவர், 1970ம் ஆண்டளவில் ஜெனிவாவில் உள்ள பிரபலமான பல்கலைக் கழகத்தில் கணிதத்துறையில் விசேட பட்டத்தைப் பெற்றுக் கொண்டதோடு, அரசியல் வாழ்க்கையிலே தன்னை முழுமையாக இணைத்துக்கொண்டார்.

இதன் பின் 1972 தொடக்கம் 1981-ம் ஆண்டு வரையான காலப் பகுதியில் சுவிசின் வெளிவிவகார அமைச்சராகவும், தொழிலாளர் சங்கங்களின் கூட்டமைப்புச் செயலாளராகவும் கடமையாற்றினார். அதன் பின் 1989 தொடக்கம் 92ம் ஆண்டு வரையான பகு



தியில் சுவிசிலுள்ள பேர்ண் நகரத்தின் மாநகரசபை ஆலோசகராகவும் கடமை புரிந்தவர், பின் 1993ம் ஆண்டு சுவிசின் உள் விவகார அமைச்சராகப் பதவியேற்றார். தற்போது இவர் வகிக்கும் சுவிஸ்மாநிலங்களின் கூட்டமைப்புத் தலைவர் என்ற இப் புதிய பதவியைப் பற்றி பொதுவாக சுவிஸ் மக்களிடையே மிகுந்த மகிழ்ச்சி நிலவினாலும் அதே சமயம் நிறைந்த எதிர்பார்ப்புகளும் இருக்கிறது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இதைப்பற்றி சுவிசில் உள்ள ஒரு அரசியல்வாதி குறிப்பிடுகையில், சுவிஸ்நாடு ஒரு தனிநாடாக தன்னை பிரகடனப் படுத்தி 150-வது வருடம் நிறைவுபெறும் இக் காலத்திலும் அதே சமயம் மனித உரிமைகள் மையம் நிறுவப்பட்டு 50-வது ஆண்டை பூர்த்திசெய்துள்ள இவ் வேளையில் எம்முடைய நாட்டில் இவ்வாறான ஒரு பெண் முதல் முதலில் இப் பதவிக்கு வந்தது, மற்றைய நாடுகளில் இருந்து எம்மை பெருமையுடன் வித்தியாசப் படுத்தியுள்ளது. அதுமட்டுமல்லாது இனிவரும் அரசியல் நிகழ்வுகளிலும் நிறைய மாற்றங்களை இவர் ஏற்படுத்துவார் என்றே தாம் நம்புவதாகவும் குறிப்பிடுகிறார்.

# காலணிகள் வாங்குமுன் கவனிக்க வேண்டியவை

1. காலணியின் முன் பாகத்திற்கும் பெருவிரலுக்கும் இடையே குறைந்தது அரையங்குலம் இடைவெளி வேண்டும்.
2. கால்கள் வளையும் இடங்களில் காலணியின் பாகமும் வளைய வேண்டும்.
3. காலின் அளவை எடுக்கும்பொழுது உடம்பின் முழுப் பலத்தையும் அழுத்தியே பாதத்தை வைத்துக்கொள்ளவேண்டும்.
4. ஒருகாலைவிட மறுகால் சற்றுப்பெரிதாக இருக்கும். அதைக் கவனித்துக்கொள்ளுதல் வேண்டும்.
5. நீண்ட குதியுடைய காலணிகள் அணிவதால் குதிக்கால்வலி மூட்டு வலி, இடுப்புவலி தோன்றலாம். எனவே காலணியின் அடிப்பகுதி சற்று உயரம் குறைந்ததாக இருக்கவேண்டும்.
6. காலில் வியர்வை அதிகமாக சுரப்பவர்கள் காலணியின் உட்பாகத்தை அதற்கேற்றபடி தெரிவுசெய்ய வேண்டும்.

# அல்ஜீரியப் பெண்களின் மறு பக்கம்

இன்று உலகின் பல பாகங்களிலும் பெண்கள் ஏதோ ஒரு வகையில் அடிமைப்படுத்தப்படுபவர்களாகவே இருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக முஸ்லிம் பெண்களின் வாழ்க்கை நிலையை நோக்குமிடத்து மிகுந்த வேதனைகள் சூழ்ந்த வாழ்க்கையே அவர்களுக்கும் கிடைத்துள்ளது. காரணம், அவர்களின் சமயம் பெண்களின் மேல் இட்டுள்ள கட்டுப்பாடுகள், மிகக் கடுமையானதாக இருப்பதேயாகும். இவ்வாறான கட்டுப்பாடுகளை அவர்களில் அநேக பெண்கள் ஏற்றுக்கொண்டாலும் கூட இவர்களுக்குள்ளேயும் இதைக் கடுமையாக எதிர்த்து தம் சமூகத்தையும் சமயத்தையும் விழிப்படையவைக்க வேண்டும் என்று போரிடுபவர்களும் உண்டு. இப்படியானவர்களில் ஒருவர்தான் Djamila Sahraoui என்ற பெண்மணியாவார். ஏனெனில் அல்ஜீரியப் பெண்கள் பற்றியும் அவர்கள் தம் சமூகத்தில் எவ்வளவு கீழ் மட்டத்தில் வாழவேண்டியவர்களாக உள்ளார்கள் என்பதையும் பற்றி வெளியுலகத்திற்கு தெரியப்படுத்தவேண்டி இவர் ஒரு விவரணப் படத்தை தயாரித்திருக்கிறார்.

அது இன்று அங்குள்ள பல பெண்களிடையேயும் மிகுந்த வரவேற்பைப் பெற்றிருந்தாலும் கூட அங்குள்ள மதவாதிகளின் இத் திரைப்படம் போதியளவில் மக்களிடையே சென்றடைய எதிர்ப்புக்குள்ளாகாமல் இருக்குமா என்பதும் கேள்விக்குறியே. காரணம் முஸ்லீம் மதத்தில் பெண்களுக்கிட்டுள்ள கடுமையான கட்டுப்பாடுகளை எதிர்த்த பலரும், இம் மதவாதிகளின் எதிர்ப்புக்கு ஆளாக்கப்படுவது யாவருக்கும் தெரிந்ததே. இப் பெண் எடுத்துள்ள இவ்விவரணப்படத்தின் பெயர் 'அல்லாவின் மறு பக்கம்' என்பதாகும்.



அதாவது சிறந்த சிந்தனைகளையும் மனித நேயத்தையும் போதிக்கும் அல்லாவின் கொள்கைகள் எப்படி இன்னொரு பக்கம் பெண்களை கொடுமைப்படுத்துகிறது என்பதை சித்தரிக்கும் படமாகவே இது இருப்பதால், அங்குள்ள முஸ்லீம் சமூகத்தில் ஒரு சர்ச்சைக்குரிய விடயமாகவே இத் திரைப்படம் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

வட்வில் ஆசியன் கடை
Wattwil Asian Shop
Susanne - Muller Str-14
9630 Wattwil.
(Wattwil புகையிரத நிலையத்தில் இருந்து 2 நிமிட நடைதூரம். Rest.Linde க்கு கீழ் அமைந்துள்ளது)
☎:- 071.988 2247, 079 605 4707.
☞ உங்கள் சமையலை அலங்கரிக்கத் தேவையான மளிகைப் பொருட்கள்!
☞ உடன் தருவிக்கப்பட்ட கடலுணவு மரக்கறி வகைகள்!
☞ உங்கள் ருசிக்கு ஏற்றவகையில் தயாரிக்கப்பட்ட கடலை, பருப்பு, பீடா வகைகள்!
☞ ரசிகர்களின் மனதைக் கவரும் CD, Video Cassettes!
☞ அன்பளிப்புப் பொருட்கள்!
☞ பத்திரிகை, புத்தகங்கள்!
இவை மட்டுமல்ல! இன்னும் பல பல!
நீண்ட நேரம் தொலைபேசியில் உரையாடக்கூடிய தொலைபேசி அட்டைகளையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
உங்கள் அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் எமது புதுவருட வாழ்த்துக்கள்**

# மாபெரும் பொங்கல் மலிவு விற்பனை

**ஜனவரி 6** முதல் **ஜனவரி 13** வரை




சர்க்கரை, பொங்கல் அரிசி, கரும்பு மற்றும்
பொங்கல் பொருட்களுக்கான **மலிவு விற்பனை**

★ 'Tripple Lion' பசுமதி அரிசி

★ 'Easy Cook' மஞ்சள் அரிசி

உட்பட பலரக புதிய, தரமான அரிசி வகைகளை
மகிழ்வுடன் நாம் அறிமுகப்படுத்துகின்றோம்




## மக்கள் கடை

**59, Rue Louis Blanc, 75010 Paris.**
**Tel & Fax: 01 42 05 99 02**
**Metro: La Chapelle / Gare du Nord**




குழந்தைகள் பெரியோர்களுக்கான

புதிய நிறைவான ஊட்டச்சத்து நிறைந்த
**'POWER UP' Drink**
வனிலா, சொக்கோலா மற்றும் பலரக சுவையுடன்

---

அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் **கருமாரி மூவிஸ் வழங்கும்**




திரைப்பட ரசிகப் பெருமக்களுக்கு
கருமாரி மூவிஸின் புதுவருட வாழ்த்துக்கள்

நடிகர்கள்
காதல் இளவரசன் பிரசாந்
என் சுவாசக் காற்றே நாயகி இஷா கோபிகர்
கஸ்தூரி
ரோஜா
மணிவண்ணன்
ராஜி சுந்தரம்
தலைவாசல் விஜய்
சார்லி
ஸ்ரீவித்யா
ராஜி, அம்பிகா

தயாரிப்பு
டாக்டர் முரளி மனோகர்
டாக்டர் ராணி அசோக்

பாடல்
**அகத்தியன்**

இசை
**இளையராஜா**

கதை, திரைக்கதை
வசனம்
டைரக்ஷன்
இயக்கம்
அகத்தியன்




நடிகர்கள்
நவரச நாயகன் கார்த்திக்
அப்பாஸ்
கௌசல்யா
ஷீரா
ராதாரவி
நிழல்கள்ரவி
சார்லி
ஆனந்தராஜ்
மனோரமா

சத்தியப்பிரியா
சிந்து
ஜெ லலிதா
டாக்டர் ராஜசேகர்
சந்தான பாரதி
[பூவிலங்கு] மோகன்
ஐஸ்வர்யா
மற்றும் பலர்

நடிப்பின் மற்றுமொரு
பரிமாணத்தில்
நவரசநாயகன்

இசை
பரத்ராஜ்

கதை,
திரைக்கதை
வசனம்
டைரக்ஷன்
இயக்கம்
செல்வா

பாடல்
கவிஞர் வைரமுத்து

புதுவருடத்தை முன்னிட்டு உங்கள் அபிமானத் திரையரங்குகளில்
அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் இரண்டு திரைப்படங்கள்

தொடர்புகளுக்கு அனைத்து வர்த்தக ஸ்தாபனங்களும்
காட்சிகள் யாவும் குறிப்பிட்ட நேரத்தில் ஆரம்பிக்கப்படும்
24 மணி நேர தொடர்புகளுக்கு : 01 48 38 54 65

**01.01.99 வெள்ளி 6.15**
**02.01.99 சனி 9.15**
**03.01.99 ஞாயிறு 9.15**

**இடம் :ESPACE CINEMA**
**AUBERVILLIERS QUATRE CHEMINS**
M° : Quatre Chemins

**01.01.99 வெள்ளி 9.15**
**02.01.99 சனி 6.15**
**03.01.99 ஞாயிறு 6.15**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரெஞ்சுப் புரட்சி 1789 - 1799

(சென்றவாரத் தொடர்ச்சி)

அமெரிக்க மக்களும், இந்தப் படையுமாகக் கூடி, ஆங்கிலப் பட்டாளத்தைத் தோல்வி காணச் செய்கிறார்கள்.

அமெரிக்கர்கள் பிரெஞ்சுக்காரரிடம் மிகவும் நன்றி பாராட்டுகிறார்கள். பிரெஞ்சுப் படைக்குத் தலைமை தாங்கிச் சென்ற தளபதி லஃபயட் (Lafayette) நாடு திரும்பியபோது, அவரை ஒரு மகத்தான வீரர் (Hero) என்று ஃபிரான்சு கொண்டாடுகிறது.

அதே சமயம், அமெரிக்க மக்களின் போராட்டத்தில் இருந்து, பிரெஞ்சு மக்கள் பல பாடங்கள் பெறுகின்றனர்.

★ மக்கள் விரும்பினால், ஒரு எதேச்சாதிகாரத்தை வீழ்த்தலாம்.

★ மக்கள் நினைத்தால், ஒரு குடியரசை நிறுவலாம்.

★ மக்கள் மனம் வைத்தால், ஒரு அரசியலமைப்பை உருவாக்கிக் கொள்ளலாம்.

நாமும், நாட்டில் உள்ள எதேச்சாதிகாரத்தை வீழ்த்தலாம், புதிய அரசியல் அமைப்பை உருவாக்கலாம், என்ற எண்ணம் பரவுகிறது பிரான்சில்.

ஆனால், மன்னராட்சி ஒழிப்பு- குடியரசு என்ற கருத்து, மிக மிகச் சிலரால் மட்டுமே ஏற்கப்படுகிறது.

நாட்டின் பெரும்பான்மை மாறுதல்களை வேண்டுகிறதே தவிர, மன்னராட்சியைக் கவிழ்க்க அல்ல.

சிந்தனை அளவில், பூர்சுவாக்களும், பிரபுக்களும், மாறுதல்களுக்கு ஆதரவாய் நிற்கின்றனர்.

ஆனால், உள்ள சலுகைகளை ஒழிப்பது பற்றிய பேச்சு வந்தால், இவர்கள் பிரிகின்றனர்.

பின்னவர், தங்கள் சலுகைகளை அப்படியே நிறுத்தி வைத்துக்கொள்ளவும், முன்னவர் அவற்றை அழிக்கவும், தகர்க்கவும் விரும்புகின்றனர்.

ஒரு பக்கம் நாடு, பொருளாதார நெருக்கடியில் ஆழ்ந்திருக்கும்போது, மறு பக்கம் மாறுதல்கள், அரசியல் அமைப்பு என்ற குரல் எழும்போது, அரசு இயந்திரம் முழுதும் பழுதுபட்டுள்ளது.

*சிந்தனை அளவில், பூர்சுவாக்களும், பிரபுக்களும், மாறுதல்களுக்கு ஆதரவாய் நிற்கின்றனர். ஆனால், உள்ள சலுகைகளை ஒழிப்பது பற்றிய பேச்சு வந்தால், இவர்கள் பிரிகின்றனர்.*

## நாட்டின் நிதி நிலை

நாட்டின் நிதி நிலை மோசமாய் உள்ளது.

இது, நேற்று - இன்று தொட்டு நிலவி வரும் நிலையல்ல.

பதினைந்தாம் லூயி ஆட்சி தொடக்கத்தில் இருந்தே இப்படித்தான். அரசு வங்கி காலியாயுள்ளது. அரசுக்கு நிறையக் கடன். வருவாய் — செலவுகளுக்காக குறைந்துள்ளது.

போதும் போதாததற்கு, அமெரிக்கச் சுதந்திரப் போரில் பங்கு பெற்றதால் வந்த செலவுகள் வேறு — அப் போருக்காக, அரசு வசதி படைத்தவர்களிடங் கடன் பெற்றது.

1788-ல் கடனையும் அடைக்க வேண்டும், வட்டியையும் கொடுக்க வேண்டும்.

## 1788-ல் பிரான்சின் நிதிநிலை

**வருவாய்:**

| | |
|---|---|
| நேர்வரி | 15 கோடி 8 |
| மறைமுக வரி | 20 கோடி 8 |
| குலுக்குச் சீட்டு | 1 கோடி |
| பல்வேறு வருவாய்கள் | 12 கோடி 7 |
| **மொத்தம்** | **50 கோடி 3** |

**செலவுகள்:**

| | |
|---|---|
| சிவில் செலவுகள் | 14 கோடி 6 |
| கல்வி | 1 கோடி 6 |
| பொது மராமத்து அரச குடும்பம் மற்றும் பிரபுகளுக்கு உதவி | 3 கோடி 6 |
| இராணுவ, இராசதந்திரச் செலவுகள் | 16 கோடி 5 |
| கடனும் கடனுக்கான வட்டியும் | 31 கோடி |
| ஓய்வுப் பணம் | 2 கோடி 7 |
| திருப்பிக் கொடுக்கப்பட்ட கடன் | 26 கோடி |
| **மொத்தம்** | **62 கோடி 1** |
| **பற்றாக்குறை** | **11 கோடி 8** |



பேராசிரியர் செவலியே

### சுகிர்தராஜ்

எப்படி அப்பற்றாக் குறையைச் சரி செய்வது?

1787 இலேயே, இரு நிதி அமைச்சர்கள் அரசருக்கு ஒரு ஆலோசனை கூறுகிறார்கள்: 'அரசே, நிலைமையைச் சீர் செய்ய, ஒரு புதிய வரி வசூலிக்க வேண்டும்.

அவ் வரியை பாரபட்சமின்றி - எல்லோரும் பிரபுக்கள், குருமார்கள் உட்பட கட்ட வேண்டும்.'

அரசருக்க அவர்கள் ஆலோசனையை ஏற்க ஆவல். ஆனால் முதல் இரு வகுப்புக்களின் ஒட்டு மொத்த எதிர்ப்பால், திட்டம் கைவிடப்பட்டது. திட்டம் கொடுத்த இரு அமைச்சர்களும் பதவி இழந்தனர்.

மே 1788-ல், அரசருக்கு உயர்ந்த வகுப்பினரிடம் கோபம். அவர்கள் அட்டகாசங்களுக்கு முடிவு கட்ட, அவர்கள் ஆக்கிரமிப்பில் இருந்த பாரிஸ் பாராளுமன்றத்தின் அதிகாரங்களைக் குறைக்கின்றார்.

(அப்போது நாட்டில் ஒரு பாராளுமன்றம் மட்டும் இல்லை. ஒவ்வொரு பெரிய பகுதிகளுக்கும் ஒரு பாராளுமன்றம் வீதம் மொத்தம் பதின்மூன்று இருந்தன.)

பாரிசின் அதிகாரங்களைக் குறைத்ததும், மீதி பாராளுமன்றங்கள் அரசின் நடவடிக்கையை எதிர்க்கின்றன. ஆங்காங்கு, கலவரங்கள் வெடிக்கின்றன. பதட்டச் சூழ்நிலை நிலவுகிறது.

முதலில் நிதி நெருக்கடியாய் இருந்தது. இப்போது அரசியல் நெருக்கடி ஆகிவிட்டது.

ஒகஸ்ட் 1788-ல் அரசர் பின்வாங்குகிறார். பாரிஸ் பாராளுமன்றத்துக்கு அது இழந்த அதிகாரங்களைத் திருப்பித் தருகிறார்.

அத்துடன் சுவிஸ் நாட்டு வங்கி அதிபர் நெக்கர் என்பவரை, நிதி அமைச்சர் ஆக்குகிறார்.

புதியவர், 'எப்படி நிதி நிலையைச் சரி செய்வது?' என்று கேட்க, 'அதற்காக நாட்டின் பொதுக் குழுவைக் கூட்டப்போகிறேன்' என்கிறார் அரசர்.

(தொடரும்)

# தென்னாசியாவின் அணுகுண்டு



# பரீட்சைகளும் - போட்டிகளும்

**இந்த இதழிலே உலகளாவிய ரீதியில் அணு ஆயுதங்களைக் கொண்டிருக்கும் ஏழு நாடுகளின் அணு ஆயுதக் கையிருப்பு எவ்வளவு என்பதையும் அவை நடாத்திய மொத்த அணுச் சோதனைகளின் விபரங்களையும் பார்ப்போம்.**

மேற்குலக புலனாய்வு நிறுவனங்களினதும் பாதுகாப்பு ஆய்வாளர்களினதும் மோப்பம் பிடிப்பின் முடிவாக பாகிஸ்தானிடம் 12 யுரேனிய வகை அணுகுண்டுகள் இருக்கின்றன அல்லது மிகத் துரிதமாகப் பொருத்திக் கொள்ளக் கூடிய நிலையில் இருக்கின்றன என்பது வெளிப்படுத்தப்பட்டது. ஆனால் இந்தியாவிடம் இதே நிலமையில் 50 அணு குண்டுகள் இருப்பதாகவும் இவை வெளிப்படுத்தின.

இந்த இரு நாடுகளிடம் இருப்பதாகக் கருதப்பட்ட அணுகுண்டுகளையும் சேர்த்து **உலகத்தின் அணுவாயுத கையிருப்பு கீழ்வருமாறு உயர்ந்தது.**

| | |
|---|---|
| ரஷ்யா | 23.000 |
| அமெரிக்கா | 12.000 |
| பிரான்ஸ் | 450 |
| சீனா | 400 |
| ஐக்கிய ராச்சியம் | 260 |

உலகளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட அணுவாயுத பரிசோதனை நடவடிக்கைகள் பற்றிக் கொஞ்சம் பார்க்கலாம்.

அணுகுண்டுகளை தன்னகத்தே கொண்டிருக்கும் ஐந்து நாடுகளுக்கும் இதுவரை 2.046 பரிசோதனைகளை மேற்கொண்டிருக்கின்றன. ஆனால் ஆசியாவிலே அணுகுண்டுகளைக் கொண்டிருக்கும் நாடுகளான இந்தியாவும் பாகிஸ்தானும் ஐந்து முறை நிலக்கீழ் அணுப் பரிசோதனைகளை மேற்கொண்டுள்ளன. 1974-ம் ஆண்டு மே 18-ல் தனது முதலாவது அணுப் பரிசோதனையை மேற்கொண்ட இந்தியா தனது இரண்டாவது சோதனையை 1998 மே 11 இலும் மூன்றாவதை மே 12 இலும் மேற்கொண்டது. இதேவேளை பாகிஸ்தான் 1998-ல் மே 28, 30-ம் திகதிகளில் இரண்டு அணுப் பரிசோதனையை மேற்கொண்டதும் குறிப்பிடத்தக்கது.

1945-ம் ஆண்டு யூலை 16-ம் திகதி இவ் உலகிலேயே முதலாவது அணுகுண்டு சோதனைக்காக அமெரிக்காவின் புதிய மெக்சிக்கோ மாநிலத்தில் வெடித்தபோது இச் சோதனைகள் இவ்வாறு பெருகுமா என்பதை எத்தனை பேர் அறிந்திருப்பார்கள் என்பது ஒரு கேள்விக்குரிய விடயம்தான். ஆனால் அதே ஆண்டு ஒகஸ்ட் 5, 6-ம் திகதிகளில் ஜப்பானின் ஹிரோசிமா நாகசாகி நகரங்களின் மீது அணுகுண்டுகள் வீழ்ந்த போது தான் அணுகுண்டுகளின் விபரீதத்தை உலகம் அறிந்து கொண்டது,

*1962-ம் ஆண்டு அமெரிக்காவிற்கு எவ்வாறு தனி ஆண்டில் நிகழ்த்தப்பட்ட ஆகக் கூடிய சோதனை ஆண்டாக அமைந்ததோ அதைப் போலவே ரஷ்யாவிற்கும் அதேயாண்டு அமைந்தது.*

## அமெரிக்கா

அமெரிக்கா மட்டும் இதுவரை 1030 அணுப் பரிசோதனைகளை நடத்தியுள்ளது. இவற்றில் 815 நிலத்தின் கீழும், 215 சோதனைகள் நிலத்திற்கு மேலாகவும் செய்யப்பட்டன. 1962-ம் ஆண்டு தான் அமெரிக்கா ஒரு வருடத்தில் ஆகக் கூடிய சோதனைகள் செய்த வருடமாக இருந்தது, அவ் வாண்டு அது செய்த மொத்த சோதனைகள் எவ்வளவு



பேராசிரியர் இலகுப்பிள்ளை

**அணுகுண்டுகளை தன்னகத்தே கொண்டிருக்கும் ஐந்து நாடுகளுக்கும் இதுவரை 2.046 பரிசோதனைகளை மேற் கொண்டிருக்கின்றன.**

தெரியுமா? மொத்தமாக 96 சோதனைகள். அதன் பின்னர் படிப்படியாக தனது சோதனைகளை அமெரிக்கா குறைக்கத் தொடங்கி, 1997-ம் ஆண்டு தனது இறுதிச் சோதனையை நடத்தியது.

எது எப்படியோ மொத்தமாக அணு வெடிப்புக்களிலே 50 வீதமானவை அமெரிக்காவைச் சார்ந்ததுதான். பெரும்பாலான அமெரிக்கச் சோதனைகள் 'நெவடா' பாலைவனப் பகுதியிலேதான் நிகழ்த்தப்பட்டன.

## ரஷ்யா

முன்னாள் சோவியத் யூனியன் (USSR) 1949-ம் ஆண்டு தனது முதலாவது அணு பரிசோதனையை நடத்தியதிலிருந்து இதுவரை 715 சோதனைகள் நடாத்தப்பட்டன. இவற்றில் 219 பூமிக்கு மேலும் 496 நிலத்தடிப் பரிசோதனைகளாகவும் அமைந்தது. 1962-ம் ஆண்டு அமெரிக்காவிற்கு எவ்வாறு தனி ஆண்டில் நிகழ்த்தப்பட்ட ஆகக் கூடிய சோதனை ஆண்டாக அமைந்ததோ அதைப் போலவே ரஷ்யாவிற்கும் அதேயாண்டு அமைந்தது. (ஏட்டிக்கு போட்டி) மொத்தம் 79 சோதனைகளை அவ் வாண்டு ரஷ்யா நடத்தியது. 1990-ம் ஆண்டு தனது இறுதிச் சோதனையை ரஷ்யா நடத்தியது. உலகளாவிய மொத்த சோதனைகளில் 35 வீதமானவை ரஷ்யர்களுக்கே உரியது.

தலையாரி நாடுகள் இரண்டின் சோதனைகள் இவ்வாறான மிகுதி மூன்று நாடுகளின் சோதனை விபரங்கள் எவை? அதனை அறிவதற்கு அடுத்த 'முழக்கம்' வரை நீங்கள் பொறுத்திருக்கத் தான் வேண்டும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# விஞ்ஞானமா... மெய்... ஞானமா...!?

இருபத்தோராம் நூற்றாண்டிலை உலகம் சுருங்கி ஒவ்வொருத்தருடைய கைக்குள்ளையும் வந்துவிடும் எண்டது உண்மைதான். 'சற்றலைற், இன்ரர்நெட்' எண்டு இருந்த இடத்திலை இருந்து கொண்டே உலகத்திலை நடக்கிறதை பாக்கிறதுக்கும் கேக்கிறதுக்கும் வசதியள் பெருகி வந்திட்டுது. மனுசனோட ஆயுளைக்கூட்டி உயிரை பாதுகாக்கிறதுக்கு, அவனை மாதிரியே இன்னொரு மனுசனை உருவாக்கிற 'குளோனிங்' முறையிலையும் ஆராட்சியாளர்மார் இறங்கி ஓரளவுக்கு வெற்றியும் கண்டு வருகினம். நிலைமையை பாக்க அடுத்த நூற்றாண்டிலை செத்துக்கிடக்கிறவனை கூட தட்டி எழுப்பினால் ஆச்சரியப்படத் தேவையில்லை போலைத்தான் இருக்கு.

இதுக்குள்ளை கைத்தொலைபேசியளும் வளர்ச்சியடைஞ்சு இப்ப அதில்லாமல் நாங்களும் வாழ முடியாதெண்ட நிலைமைக்கும் வந்திட்டம். ஒருத்தர் எங்கினை நிண்டாலும் தேடிப்பிடிக்கிறதுக்கு உப்பிடியொண்டு இருக்கிறது நல்ல வசதியாத்தான் இருக்குது. கொண்டாட்டங்கள் வழிய போட்டோ எடுக்கிற நேரத்திலை ஒருத்தரைக் காணேல்லை எண்டாக்கூட மண்டபத்திலை அவர் எங்கை நிக்கிறாரெண்டு கண்டுபிடிக்கிற அளவுக்கு தொலைபேசி(?!) எங்களுக்குப் பிரயோசனப்படுகுதெண்டா பாருங்கோவன்!

இதைவிட கடன்கொடுத்த சில பேர் தங்களை சுத்திக் கொண்டு திரிஞ்சவை இப்ப கைத்தொலைபேசி வைச்சிருக்கிறதாலை அடிக்கடி அடிச்சு கரைச்சல் கொடுத்து கொஞ்சம் கொஞ்சமா எண்டாலும் வேண்டக் கூடியதா இருக்கெண்டு சந்தோசப்படுகினம். ரெண்டு, மூண்டு, நாலைஞ்சு மணித்தியாலம் எண்டு மாசம் மாசம் இலவசமாக் கதைக்கலாம் எண்டபடியா அந்த மாசத்துக்கை கதைச்சு முடிக்க முடியாதவை மாச்க்கடைசியிலை தெரிஞ்சவை தெரியாதவை எண்டு எடுத்துவைச்சு வம்பளக்கிறதுக்கும் இது வசதியாக் கிடக்குது. இதையெல்லாம் விட சின்ன சின்ன தகறாரெண்டாலும் உடனை அடிச்சு 'அடியாக்களை' கூப்பிட்டு சண்டையை வளக்கிறதுக்கும் கூட எங்கட சனங்களுக்கு உதவியா இருக்கு.

இப்பிடி எத்தனையோபேருக்கு வசதியா, உதவியா இருக்கிற உந்த கைத்தொலைபேசியள் சிலபேருக்கு பெரும் தலையிடியாயும் எல்லோ மாறியிருக்குது. கைத்தொலைபேசிக்கு மாசக் கட்டணமா ஆயிரம் ரெண்டாயிரம் எண்டு வாறது இங்கை சாதாரணம். ஆனா பதினெட்டாயிரம் இருபதினாயிரம் எண்டும் வந்திருக்குது! அப்பிடித்தான் அவையளுக்கும் ஒரு பெரும்தொகையை

> **கொண்டாட்டங்கள் வழிய போட்டோ எடுக்கிற நேரத்திலை ஒருத்தரைக் காணேல்லை எண்டாக்கூட மண்டபத்திலை அவர் எங்கை நிக்கிறாரெண்டு கண்டுபிடிக்கிற அளவுக்கு தொலைபேசி(?!) எங்களுக்குப் பிரயோசனப்படுகுதெண்டா பாருங்கோவன்!**

கட்டச் சொல்லி வந்திருக்குது. ஆனா இத்தனைக்கும் அவையள் கைத் தொலைபேசியே பாவிக்கேலை எண்டதுதான் ஆச்சரியம்!

எங்கையாவது குறைஞ்ச வட்டியோட கடன்வசதி செய்து தரலாம் எண்டா ஆர்தான் வேண்டாமெண்டுவினம். அதுகும் நாங்கள்...? தேவையில்லை எண்டாலும் அதையொருக்கா எடுத்து நாலு இடத்திலை வட்டிக்கு விட்டாத்தானே நிம்மதியே வரும். இதுகளை எடுத்துத்தாறதுக்கும் எங்கடை பிரமுக(வ)ர்கள் கொஞ்சப் பேர் தயாரா இருக்கினம். எடுத்துத்தாறதுக்கு அவையளுக்கு பத்து, இருபது வீதமெண்டு கணிசமான அளவு கமிசன் போய்ச்சேரும். மூலதனம் இல்லாத இந்த வியாபாரத்தை செய்யிறதுக்கு மொழியை கதைக்க தெரிஞ்ச கொஞ்சப்பேர் களமிறங்கியும் விட்டினம்.

இப்பிடித்தான் அவையளுக்கும் ஒரு தொகை தேவை ஏற்பட்டிருக்கு. அப்பதான் இப்பிடியான ஒரு முகவரை பிடிச்சிருக்கினம். அவரும் செய்து தரலாம் எண்டு சொல்லி அதுக்குத் தேவையான ஆவணங்களையும் வாங்கிக்கொண்டு, சரி வந்தவுடனை தொலைபேசி அடிக்கிறனெண்டு சொல்லிவிட்டு போயிருக்கிறார். இவையளும் தொலைபேசி வரும் வரும் எண்டு இலவம் பழத்தை பாத்தகணக்கா பாத்துக் கொண்டிருக்க, பஞ்சு வெடிச்சு வந்தமாதிரி கைதொலைபேசி 'வில்'தானாம் வந்திருக்கு! அதுகும் கொஞ்ச நஞ்சமில்லை பதினையாயிரத்துக்கு மேலை எண்டா பாருங்கோவன். தாங்கள் கைத்தொலைபேசியே பாவிக்கேல்லை என்ன நடந்ததெண்டு போய் விசாரிச்ச இடத்திலைதான் தெரிஞ்சிருக்கு, இவை கொடுத்த ஆவணங்களை வைச்சு இவையளின்ரை பேரிலையே தொலைபேசியும் எடுத்து ஆயிரக்கணக்கா கதைச்சு முடிச்சிருக்கிறார் எண்டது. இப்ப இதொண்டுதான் வந்திருக்கு, இன்னும் என்னென்ன துண்டுகள் கட்டச்சொல்லி வருகுதெண்டதை பொறுத்திருந்துதான் பார்க்க வேணும். இளநீர் குடிச்சவன் ஆரோ, கோம்பை சூப்பினவன் பிடிபட்ட கதையா ஆவணங்களை குடுத்து கடன் எடுக்க நினைச்சவை இப்ப கதைச்ச கடனை கட்ட வேண்டிய நிலைக்கு வந்திருக்கினம்.

உழுது பிழைப்பவன் ஒரு கோடி ஏய்த்துப் பிழைப்பவன் ஏழுகோடி எண்டொரு பழமொழி? இருக்குது. பாமர மக்களின்ரை அனுபவத்திலை இருந்துதான் பழமொழியள் பிறந்ததெண்டு சொல்லுறவை. அப்ப அந்த நாளிலை இருந்தே மற்றவையளின்ரை காதிலை பூச்சுத்தி வாழுற கூட்டம்தான் பெரும்பான்மையா இருந்துகொண்டு வந்திருக்குது. இப்பிடியான விக்கிரமாதித்தன்மாரை எப்பிடி அடையாளம் காணுறதெண்டதுதான் பெரும் பிரச்சனையா இருக்கு.

இண்டைக்கு விஞ்ஞானங்கள் எவ்வளவோ வளர்ச்சியடைஞ்சு விட்டுது. இவையளை கண்டுபிடிக்கிறதுக்கு ஒரு மிசினைக் கிசினை கண்டுபிடிக்ககூடாதோ எண்டதுதான் சிலபேரின்ரை எதிர்பார்ப்பு. நாயன்மாருடை, சிவனடியார்களுடைய கனவிலை கடவுள்வந்து, எது நல்லது எது கெட்டதெண்டு சொல்லுறவரெண்டு பெரிய புராணத்திலை சேக்கிழார் எழுதியிருக்கிறார். விஞ்ஞானத்தாலை கண்டுபிடிக்க முடியாதத்தை மெய்ஞ்ஞானத்தாலை எண்டாலும் கண்டுபிடிக்க ஏதாவது வழி கிடைக்காதோ எண்டெல்லோ வாய்விட்டழுகினம்... பாம்பையும் பார்ப்பணனையும் கண்டா பாம்பை அடிக்காதை, பாம்பு ஒருத்தனைத்தான் கடிக்கும், பார்ப்பணனை அடியெண்டு பெரியார் அடிக்கடி சொல்லுறவர். நடுக்கடலுக்குப் போனாலும் நாய் நக்கித்தானே குடிக்கும். அதின்ரை குணம் அப்பிடி. நாங்கள்தான் ஒண்டைச் செய்யமுதல் நூறு தடவை எண்டாலும் யோசிக்கவேணுமுங்கோ...

**அருமைத்தம்பி**

எமது வாடிக்கையாளர்கள், பாவனையாளர்கள் அனைவருக்கும்
எமது புத்தாண்டு பொங்கல் வாழ்த்துக்கள்

1999

WWA

KING Telecom

92, Rue de Bellville
75020 Paris (M°: Pyrénées)
Tél.: 01 44 62 93 96 Fax: 01 44 62 94 96
http//www.kingtelecom.com.

Pub

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெயோன்ற் அணை விழுங்கிய கிராமம்

இத்தாலியின் வட கிழக்குப் பகுதிகளில் பல ஆறுகள் உள்ளன. வடபகுதியில் உள்ள மக்களுக்கு மின்சார சக்தி விநியோகம் செய்வதற்கு பயன்படுத்தப்படும் நீர் இந்த ஆறுகளை இடைமறித்துக் கட்டப்பட்ட நீர்த்தேக்கங்களிலாகும். அங்குள்ள பள்ளத்தாக்கங்கட்கு குறுக்காக மேலும் பல நீர்த்தேக்கங்களை உருவாக்க பல பெரிய அணைகள் உருவாக்கப்பட்டன. அந்த அணைகளில் ஒன்றான (Vaiont Dam) 'வெயோற் அணை' உலகத்திலேயே (3 வது உயர்ந்த) கொங்கிறீற் கல்லினால் கட்டப்பட்ட பெரிய, உலகப் பிரசித்தி பெற்ற ஒரு அணையாகும்.

குச் சென்றபோது கற்பாறைகளும் மண்ணும் குவிந்து காணப்பட்டன. லொங்கறோன் கிராமம் 4/5 பங்கு அழிக்கப்பட்டிருந்தது. (Fac, Pirago) பாக், பிராகோ என்னும் இடங்களில் மக்கள் முற்றாகக் கொல்லப்பட்டனர். (Codessago, Castellavazzo) கொடிசாகோ, காஸ்ரிலாவாசோ ஆகிய கிராமங்களில் பகுதி மக்கள் கொல்லப்பட்டனர். அணைக்கு அருகாமையில் உள்ள இரண்டு கிராமங்கள் முற்றாக அழிக்கப்பட்டன. 50 வீதமான மக்கள் எங்கு சென்றார்கள் என யாருக்கும் தெரியவில்லை. அங்கு தொலைபேசி தொடர்புகள் துண்டிக்கப்பட்டன. புகையிரத வசதிகள் இல்லாது போயின.

## வரலாற்றில் பதிவாகிய அழிவுகளும் தவறுகளும்

### – கவிதா –

1963-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் மிகக் கடுமையான மழை பொழிந்த நேரத்தில், காலநிலை ஆராய்ச்சி நிபுணர்கள் வானொலிமூலம் மீனவர்கட்கும், பொதுமக்களுக்கும் மலைச்சரிவு, பூகம்பம் போன்ற அசம்பாவிதங்கள் நடக்கலாம் என எச்சரிக்கை செய்தனர். ஆனால் பலர் அதைப் பொருட்படுத்தவில்லை. (Longarone) 'லொங்கரோன்' என்னும் கிராமத்தில் பொதுமக்களின் ஜனத்தொகை 2000 க்கும் குறைவாக இருந்தபோதிலும் வானொலியில் அறிவிக்கப்பட்ட தகவல் பெரிதுபடுத்தப்படவில்லை. அங்கு ஒக்டோபர், 6ம் திகதி புதன்கிழமை நள்ளிரவில் பலத்த மழையுடன் புயல்காற்றும் தொடங்கி, (Toc) 'ரொக்' என்னும் மலை சரிந்து கற்பாறைகளும், மண்ணும், சிறிய கற்களும். வேரோடு சாய்க்கப்பட்ட மரங்களும் ஒன்று சேர்ந்து 1000 தொன் எடைக்கும் மேலாக 'வெயொன்ற்' அணைக்குள் வீசப்பட்டன. நீர் உள்ள பாத்திரத்தில் கற்பாறை ஒன்றை வீசினால் அந்தப் பாத்திரத்தில் உள்ள நீர் முற்றாக எவ்வாறு வெளியே கொந்தளித்து வீசப்படுமோ அது போல் அணையிலிருந்து வெளியேறிய வெள்ளப்பெருக்கினால் பள்ளத்தாக்கில் உள்ள எல்லாம் அழிந்தன. ஒரு சிலர் மாத்திரம் உயிர்தப்பினர்.

இடிமுழக்கம்போல் திகைப்பூட்டும் மிகப்பெரிய சத்தம் கேட்கும்போது மக்கள் என்ன நடந்தது, என்ன நடக்கப்போகுது, எங்கு போவது என்று தெரியாமல் எங்கேயோ தோன்றிய திசைக்கு ஓடியபோது ஒரு சிலர்மட்டும் அதிர்ஷ்டவசமாக தப்பினர். அவர்கள்தான் அங்கு தாங்கள்பட்ட துயரத்தையும், அவலத்தையும் எடுத்துரைத்தார்கள். அதிகாலையில் உயிர் தப்பியவர்கள் அந்த இடத்திற் தப்பிய மக்கள் எங்கும் செல்ல முடியாத நிலை. பெருந்தொகையான இராணுவ துருப்புகளும், உதவியாளர்களும் மற்றைய நாடுகளிலிருந்து வந்து சலங்களை மீட்டெடுத்தனர். உயிர்தப்பியவர்கள் தங்கள் குடும்பத்தினரையும், உறவினரையும் பற்றிக் கேட்ட முயன்றனர். கண்டெடுக்கப்பட்ட சடலங்களை அடையாளம்காணவே இல்லாது அழிக்கப்பட்டவர்களும் உண்டு. பல சடலங்கள் அடையாளம்காண முடியாத அளவு உருவம் மாறிக் காணப்பட்டன. இறுதியில் கண்டுபிடிக்கப்பட்ட சடலங்களை மாத்திரம் கணக்கெடுத்து இறந்தவர்கள் தொகை 1,189 என தெரிவிக்கப்பட்டது. மிகுதிச் சடலங்கள் கண்டுபிடிக்கபடவில்லை. ஒக்டோபர் 12ம் திகதி காலை 2 சிறுவர்கள் உயிருடன் மீட்கப்பட்டனர். இது பற்றிப் பின்பு ஆராயப்பட்டபோது அந்த அணைகட்டிய இடம் அணைக்கட்டுக்குத் தகுந்த இடம் இல்லையென முன்கூட்டியே அறிந்திருந்த போதும் அதைப் பொருட்படுத்தாமல் கட்டியது தவறு என கட்டட உரிமையாளர்கள் குற்றம்சாட்டப்பட்டனர்.

அத்துடன் மழை பெய்த போதும் அசம்பாவிதங்கள் ஏற்படலர்ம் என காலநிலை விஞ்ஞான ஆராய்ச்சியாளர்களினால் அறிவிக்கப்பட்டபோதும் மக்கள் பொருட்படுத்தாமல் இருந்தார்கள் எனவும் மக்கள் குற்றம்சாட்டப்பட்டனர். இத்தாலியில் உள்ள இரசாயன மின் சக்தியை உருவாக்க முயன்ற உரிமையாளர்கள் குற்றம் சாட்டப்பட்டு நஷ்டஈடு வழங்கினர். உலகப் புகழ்பெற்ற அந்த அணை அழிக்கப்பட்டதால் பலநாட்டு உதவியுடன் கிராமங்களும், தொழிற்சாலைகளும் புதுப்பிக்கப்பட்டன. அழிவு அதிக சேதத்தை ஏற்படுத்தியது.

## காலத்தைப் பதிவுசெய்து மாயோன் எழுதுவது

# கனவு காண்போம்

மனிதரால் செய்ய முடியாத காரியம் என்று ஏதும் உண்டா? இந்த மாநிலத்தை ஆள்கிறார்; மகத்தான சாதனை புரிகிறார். செய்யத்தக்க அத்தனை காரியமும் செய்கின்றார். இன்னும் ஒன்று சொல்லப் போனால் -அதைச் சொல்வதில் கொஞ்சம் யோசனை தொட்டாலும்- சொல்லலாம்போல்தான் இருக்கின்றது.

**மரணத்தைக்கூட மனிதரால் வெல்லும் காலம் வெகு தொலைவில் இல்லை.**

காற்றை மனிதரால் நிறுத்த முடியுமா? கடலலையை மனிதரால் ஓய்ந்துவிடச் செய்ய முடியுமா? மழையை தடுத்துவிட முடியுமா- வெய்யிலை -இது தரும் வெப்பத்தை நிற்பாட்டிட முடியுமா? இவையெல்லாம் மனிதரால் இயலும் காரியமா?

இப்படியெல்லாம் கேட்கலாம். கேள்விகளுக்காக பஞ்சம்? கேட்பதும் நல்லதுதான். கேட்கக்கேட்கவே வாழ்வு தெளிவைத்தரும். வாழ்வில் தேடல் வரும்.

சரி, மேற்போன்ற கேள்விகளுக்கு பதில்தான் என்ன?

காற்றை மனிதரால் நிறுத்த முடியாது. கடலலையை மனிதரால் ஓய்ந்துபோகச் செய்ய முடியாது. மழையைத் தடுத்துவிடவோ வெய்யிலை அது தரும் வெப்பத்தை நிறுத்திவிடவோ மனிதரால் இயலாது.

ஓம்! ஒப்புக்கொள்கின்றோம்.

இயற்கையின் வீச்சை மனிதரால் அடக்கிவிட முடியாது. மனிதரால் மாத்திரமல்ல, எவற்றாலும் இயலாது.

ஆனால் மனிதர் ஒன்றுசெய்வர். இயற்கையை அவர் தம் வசப்படுத்துவர். வசப்படுத்தி மாற்றமுறச்செய்வர்.

வீசும் காற்றைத்திரட்டி ஒன்றாய்க்கொடுப்பவர். தேவையெனில் தடுத்தும் நிறுத்துவர்.

எறிகின்ற கடலலையினுள் புகுந்துவருவர். அதனை எதிர்த்தும் செல்வர்.

மழையில் தப்புவர்; தேவையெனில் மழையை உருவாக்கியும்விடுவர்.

வெய்யிலிலிருந்து அவன் வெப்பத்திலிருந்து தப்பும் வழி காண்பவர்; வகை அறிவர்.

கடும்கோடை, கொடும் சூறாவளி ஆற்றுப்பெருக்கு, கிராமங்களை மூழ்கடிக்கும் மழைவெள்ளம், நிலநடுக்கம், பூமியதிர்ச்சி, என்று மனிதரைமீறிய இயற்கையின் சீற்றங்கள் இருக்கின்றனதான்.

எனினும் இயற்கையை எப்படி தம் வசப்படுத்தலாம் என்பதே மனிதரின் தேடல். மனிதரின் கண்டு பிடிப்புக்கள் அதனை நோக்கியே திரும்புகின்றன.

மனிதரால் இயலும், இயலாக்காரியம் எதுவுமே இல்லை.

மனிதர் ஓர் அற்புதமான படைப்பு. உலகில் உள்ள அனைத்தையும் ஆண்டவர்தான் படைத்தார் எனில், இயற்கையின் வெளிப்பாடுகள் அனைத்திற்கும் இறைவர்தான் காரணமெனில்,

மனிதரைப் படைத்ததற்காக அந்தக் கடவுளைக் கட்டிப்பிடித்துக் கொஞ்ச வேண்டும்.

இறைவரைச் சந்திக்க முடியுமென்றால் இப்படிக்கேட்போம்.

'உனக்கு எப்படி இந்த யோசனை வந்தது. மனிதரைப்படைக்கிற 'ஐடியா'வை ஆர் உனக்குத் தந்தார்?'

ஏனெனில், படைப்பின் மூலம் ஆண்டவர்தான் எனில், ஆண்டவர் படைத்த அனைத்துப் படைப்புக்களிலும், மனிதப்படைப்பே மனோன்னதமான படைப்பு. அதி உன்னத படைப்பு.

மனிதகுலத்தின் நீண்டவரலாற்றில், எத்தனை எத்தனை சவால்களைச் சந்தித்தனர். எத்தனை எத்தனை சோதனைகளை எதிர்கொண்டனர். வேதனைகள், விரக்திகள் எத்தனை?

அத்தனையையும் எதிர்கொண்டனர். வெற்றி கொண்டனர்.

ஒவ்வொரு மனிதரும் தனித்தனி உலகம். தம்முள் ஓர் உலகம். அதனைத்தக்கவைக்க பெரும் போராட்டம். போராட்டத்தில் வெற்றி.

தென்றலைத் தீண்டியிருக்கிறார்கள்தான்... ஆனால் தீயை அல்லவா தாண்டியிருக்கிறார்கள்! நெருப்பாற்றைக் கடந்திருக்கிறார்கள்!!

ஒருவரைக் கேட்டுப் பாருங்கள். 'உன் வாழ்வில் இன்பம் அதிகமா? துன்பம் அதிகமா?'

அவர் சடாரென, கேள்வி கேட்டு வாய்மூட முன்னர், எவ்வித யோசனையையும் தயக்கமும் இன்றி பதில்சொல்வார்.

'வாழ்க்கை முழுக்கத் துன்பம்தான்'

ஏன் சொல்கின்றார் அப்படி? அவர் நடந்துவந்த பாதை அத்தனையும் கரடுமுரடானது; கற்களும், முட்களும் நிறைந்தது.

ஆனாலும் பாருங்கள்-அவர்கள் வாழ்கின்றார்கள். இயற்கை வந்து இயல்பான சாவுக்கு அழைக்கும் வரைக்கும் அவர்கள் வாழ்கின்றார்கள். (ஒரு சிலரே தற்கொலை செய்கின்றனர்) வாழவே விரும்புகின்றார்கள்.

நம் வாழ்வில் ஒரு துயர் நிகழ்கின்றது. தாளமுடியா வேதனை. பூங்காவுக்குப் போய் ஓரமாய், ஒதுக்குப்புறமாய் கல்லாசனத்தில் அமர்ந்து அழுகின்றோம். வாய்விட்டு அழவும் முடியாமல், மௌனமாய் கண்ணீர் ஒழுக, மனதுள் வெம்பி அழுகின்றோம்.

அயலில், அந்த ஒதுக்குப் புறத்தில். ஒரு காதலனும் காதலியும், நெருக்கத்தில் இருப்பர்; இன்பத்தில் சஞ்சரிப்பர். முத்தமிட்டுக்கொள்வர்.

இன்னும் அயலில் ஒரு குழந்தை வெள்ளையாய்ச் சிரிக்கும்.

வெவ்வேறு உலகங்கள் இதுவே உண்மை. இதுவே யதார்த்தம்.

நாளை நாம் காதலராகி அதே பூங்காவில் தளித்திருப்போம். நம் குழந்தை வெள்ளையாகச் சிரித்தபடி அதே பூங்காவில் திரியும். அவையும் நடக்கும்.

மனிதராக வாழ்தல். அதுவே அனைத்துக்குமான காரணம். மனிதராக வாழ்ந்தால், வாழ்தலில் வெல்தல். இதுவே நமது தேவை.

இதற்காக நாம் கனவு காணப்பழகுவோம். கற்பனையை இணைத்து வாழ்வோம்.

கனவில்தான் இது நடக்கும் என்பார். கனவிலாவது நடக்கட்டும். கனவில் நடந்தால், கற்பனையில் விரிந்தால், நம் வாழ்வில் அவைவெல்வதற்கான நாள் வரும். நிச்சயம் வரும்.

கனவும் கற்பனையும் நம் வாழ்வில் இணையட்டும். முக்கியமானது கனவும் கற்பனையும் தக்கனவாய் இருக்கட்டும். தக்க செயலை நோக்கிய கனவு காணட்டும். தக்க செயலை நோக்கிய கற்பனை விரியட்டும்.

பாருங்கள்- இந்த உதாரணத்தைக் கேளுங்கள்.

1947 இல் இந்தியா சுதந்திரம் அடைகின்றது. 20 வருடங்களுக்கு முன்னரேயே அதாவது 1923 ஆம் ஆண்டிலேயே எங்கள் மகாகவி பாரதி காலமாகிப்போகிறான். அவன் காலத்தில் இந்தியா சுதந்திரம் அடையவில்லை. எனினும் பாரதி இந்தியா சுதந்திரம் அடைந்துவிட்டது என்று பாடுகின்றான்.

பாரதியின் கனவு இந்தியாவின் சுதந்திரமே. அவன் கற்பனை பாரதமக்களின் விடுதலையே.

அவன் கனவு கண்டான்; கற்பனை செய்தான். அதனால் அப்படிப்பாடினான்.

**'ஆடுவோமே பள்ளுப்பாடுவோமே**
**ஆனந்த சுதந்திரம்**
**அடைந்துவிட்டோமென்று**
**எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு-**
**நாம் எல்லோரும் சமம் என்பது**
**உறுதியாச்சு. சங்கு கொண்டே வெற்றி**
**ஊதுவோமே- அதைத் தரணிக்கெல்லாம்**
**எடுத்து ஓதுவோமே.**

பாரதியின் கனவும், கற்பனையும் அதுவே சுதந்திரமே. அதனை அடைந்துவிட்டோம் என்றே அவன் பாடினான்.

நம் தாய்த்தேசத்திலும் கனவு கண்டு, கற்பனை கொண்டு, வீர முழக்கம் செய்கின்றனர் நம்புதல்வர்கள். மண்ணின் மைந்தர்கள்.

நம் செயல் எதுவென்று தீர்மானிப்போம். நம் இலக்கு தக்கனவாய் இருக்க உறுதி எடுப்போம். செயல்நோக்கி நம் கற்பனை பெருகட்டும். கற்பனையும், கனவும் ஒன்றாகவே இருக்கட்டும். நன்றாகவே இருக்கட்டும்.

நிச்சயமாக நம்மால் செய்து முடிக்கப்படும்! நாம் வெல்வோம்!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவீரர்நாள் குறும்படப் போட்டிப் படங்களில் 'நிழல் யுத்தம்' சிறந்த படமாகத் தேர்வு

பிரான்சில் மாவீரர்நாள் நினைவுப் போட்டிகளில் ஒன்றாக குறும்படப் போட்டியும் அறிவிக்கப்பட்டிருந்தது. இதனை கலை பண்பாட்டுக் கழகம் அறிவித்திருந்தது. போட்டிக்கு ஐந்து குறும் படங்கள் அனுப்பப்பட்டிருந்தன. அலைகள், எச்சரிக்கை, நிழல் யுத்தம், நல்லதோர் வீணைசெய்து, யாத்திரை ஆகிய தலைப்புகளில் அப்படங்கள் போட்டியிட்டன. படங்கள் ஐந்தும் புலம்பெயர் வாழ்க்கையை மையமாக கொண்டிருந்தன என்பது சிறப்பம்சமாகும். 'அலைகள்' படம் சுதன்ராஜாவின் இயக்கத்தில் இளந்தமிழ் கலைஞர் படைப்பகத்தால் தயாரிக்கப்பட்டிருந்தது. அக்காவின் திருமணத்திற்கு வாங்கிய கடனுக்கு வட்டிகட்ட உழைக்கும் இளைஞன் ஒருவனின் மனக் குமுறலைச் சொல்ல படம் முயற்சித்திருந்தது. இப்படத்தை ஒரு முயற்சி என்று மட்டுமே கூறலாம். 'அகதிவாழ்வில் இந்த மௌன அலைகள் ஓயப்போவதில்லை நாம் தாயகம் திரும்பும் வரை' படம் தீர்வு கூறியது.

'எச்சரிக்கை' படம் சூப்பர் வீடியோ கோல்டன் வீடியோ தயாரிப்பில் சுகந்தனால் இயக்கப்பட்டிருந்தது. திருமணமாகாத நிலையில் பாலியல் சிந்தனைகளுக்கு ஆட்படும் முதிர் இளைஞன் பாலியல் விற்பனை இடங்களை நாடிச்செல்கிறான். அதனால் எயிட்ஸ் என்னும்கொடிய நோய்க்கு ஆளாகின்றான். அந்நிலையில்தான் வீட்டாரின் திருமண ஏற்பாடுகள் அவனுக்கு தெரிவிக்கப்படுகின்றன. 'கடமை தவறியவர்களுக்கும் கட்டுப்பாடு மீறியவர்களுக்கும் இது ஒரு எச்சரிக்கை' என எயிட்ஸ் நோய்க்கான விளம்பரம் போன்ற விளக்கத்துடன் படம் முடிகிறது.

'நல்லதோர் வீணை செய்து' ஜேசுதாவால் தயாரிக்கப்பட்டிருந்தது. படத்தின் எண்ணம், வண்ணம், வரையறுப்பு, வடிவம் ஜெகாதரன் D.F.T என எழுத்துக்கள் தெரிவித்தன. ஆங்கிலத்தில் அதனை தெரிவித்தபோது Script, Cinemotography, Editing, Direction JEGATHRAN D.F.D எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. இப்படம் திருமணம் செய்து கொள்வதற்காக வற்புறுத்தி அனுப்பப்படும் பெண் தான் மணம்புரிய வேண்டியவனுடன் இணைய முடியாமல் தவிக்கிறாள். ஊருக்கு திரும்ப வேண்டும் என அடம்பிடிக்கிறாள். அவளை திருமணம் செய்யக் காத்திருந்தவன் அவளின் எண்ணத்தை அறிய முயற்சிக்கிறான். தான் இராணுவத்தின் பாலியல் வன்முறைக்கு உள்ளானவள் எனத் தெரிவிக்கிறாள். அவளுக்கு ஆறுதல் சொல்லும் அவன் தனக்கு பிரச்சினை இல்லை நீ தான் முடிவு எடுக்கவேண்டும் எனத் தெரிவிக்கிறாள். 'அவள் என்ன முடிவெடுத்தால் உங்களுக்குச் சம்மதம்' என்ற கேள்வியுடன் படம் முடிகிறது.

ஜீவன் வீடியோ மூவிஸ் கதிர் வழங்கிய 'யாத்திரை' படம் ஜீவன் பிரசாத்தால் இயக்கப்பட்டிருந்தது. இனவாதம் பேரினவாதமாக தலைதூக்கிய இலங்கைச் சூழலில் இனக்கலப்புப் திருமணம் செய்த குடும்பத்தின் கதையை நினைவோட்டமாகச் சொல்ல முயன்றிருக்கின்றது. இதற்கு ஹேமசிறி லியனகே அவர்களால் நெறியாள்கை செய்யப்பட்டு சிறீலங்கா அரசால் தடை செய்யப்பட்ட திரைப்படம் ஒட்டாக யாத்திரையில் பயன்பட்டிருக்கின்றது. படத்தின் தொடக்கத்தில் எழுத்து வடிவிலான நீண்ட அரசியல் விள்க்கத்துடன் படம் தொடங்குகின்றது. இந்தப் படத்தை எந்த வகையில் சேர்ப்பது? இதில் 90 விழுக்காடு ஹேமசிறிலியனகே இடம்பெற்றிருக்க, ஜீவன் பிரசாத்தின் படைப்பாக்க பங்கென்ன? என்பது பற்றி நடுவர்கள் விவாதிக்கவேண்டி ஏற்பட்டது.

'நிழல்யுத்தம்' அன்னை இல்லம் வெளியீடாக ஜீவனால் இயக்கப்பட்டிருந்தது. இணை இயக்கமாக சபாலகிருஷ்ணன் பணிபுரிந்துள்ளதுடன் பிரதான பாத்திரமாக நடித்தும் இருந்தார். இளந்தம்பதியினரிடையே ஏற்படும் புரிந்துணர்வு தொடர்பான பிரச்சினை இப்படத்தின் மையக்கருவாக அமைந்துள்ளதுடன், அதனூடே புலம்பெயர் வாழ்வின் பல்வேறு பரிமாணங்கள் உணர்த்தப்பட்டிருப்பது இதன் சிறப்பம்சமாகும். 'கடுகைத் துளைத்து எழுகடலைப் புகட்டி குறுகத் தறித்த குறள்' என்பதுபோல் குறும்படமொன்றில் புலம்பெயர் வாழ்தலில் சாரத்தை புகட்டி கலையழகை ஊட்டியுள்ளனர் ஜீவனும் ச.பாலகிருஷ்ணனும். இவ்விருவரினதும் சினிமா பற்றியதான தொழில் முறைத்திறன் இப்படத்தில் மிகச்சிறப்புடன் வெளிப்பட்டிருந்தது. நிழல் யுத்தம் படத்துடன் சகல துறைகளிலும் போட்டியிடத்தக்கதாக வேறுபடங்கள் இருக்கவில்லை என்பது நடுவர்களால் உணரப்பட்டதனால் இப்படத்தை சிறந்த படமாக தெரிவு செய்தனர்.

*– பார்வையாளன்*

# எடன்கோபன் தமிழாலய மாணவர் மன்றத்தின் 'தமிழாலயம்' வெளியீடு

புலம்பெயர்ந்த மாணவர்களின் தமிழ்த்திறனையும், எழுத்தாற்றலையும், பொது அறிவையும் வெளிக்கொணர வேண்டியும், நாட்டுப்பற்றையும்; இனப் பற்றையும் வளர்க்கும் நோக்குடனும் சென்ற 26.07.98 அன்று எடன் கோபல் தமிழாலய மண்டபத்தில் ஆசிரியர்கள், மாணவர்கள் முன்னிலையில் 'மாணவர் மன்றம்' அமைக்கப்பட்டது.

இம்மாணவர் மன்றநிர்வாகக்குழுவில் நிர்வாகியாக செல்வன் உசாநந்தன் கணேசானந்தன், செயலாளராக செல்வி திருசிஜா திருநாவுக்கரசு, பொருளாளராக செல்வன் மதிராஜ் ரத்தினம், பத்திரிகை ஆசிரியராக செல்வன் றொனட்தசாந்தன்




கிறிஸ்தியான் ஆகியோர் மாணவர்களால் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்கள்.

இம் மாணவர் மன்ற முயற்சியாலும், ஆசிரியரின் ஒத்துழைப்பினாலும் 27.08.98 அன்று 'தமிழாலயம்' எனும் கையெழுத்துப் பிரதிப் பத்திரிகை ஒன்றை வெளியிடுவதற்கான முயற்சிகள் தொடக்கப்பட்டு, 25.10.98 அன்று அதன் வெளியீட்டு விழா நடைபெற்றது.

மாணவர்கள் சிலரது ஆக்கங்களும், சில மறுபதிப்புக்களும் இடம்பெற்றுள்ள இக் கன்னி முயற்சியில் இம் மாணவர்கள் வெற்றி பெற வேண்டும் என ஈழமுரசு வாழ்த்துகின்றது.

புதிய பழைய தொலைபேசிகள்
வாங்க – விற்க – திருத்த
ஆர்த்தி ஸ்ரூடியோ
2 மாத Abonnement Gratuit
(10 + 10 மணித்தியாலங்கள்)
தொலைபேசி இணைப்புக்கான கட்டணம் இலவசம்
நத்தார் பண்டிகையை முன்னிட்டு தொலைபேசி விலைகள் குறைக்கப்பட்டுள்ளன.
15 RUE CAIL, 75010 PARIS.
M°: GARE DU NORD-LA CHAPELLE
Tel: 01 40 34 20 90
Pub

# புகலிட நிகழ்வுகள்

## சலங்கை ஒலி தந்த விடுதலை அரங்கேற்றம்

06.12.98 அன்று ஜேர்மனியில் லூப்பெற்றால் நகரில் விடுதலை எழுச்சிமிகு பரதநாட்டிய அரங்கேற்றம் நடந்தேறியது. கஸ்தூரி சலங்கை ஒலி நாட்டியக் கலா மன்றத்தினதும் விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டக் கழக ஜேர்மன் பணியக ஆசிரியருமான திருமதி சாவித்திரி இம்மானுவேல் அவர்களின் மாணவிகளான செல்விகள் சுஜாதா நடராஜா, யனுஷா செல்வநாயகம் ஆகியோர் பரதநாட்டிய அரங்கேற்றம் செய்தனர், என்பதைவிட பரத இலக்கணங்களைவிட்டு சற்று முன்னேறி விடுலை வரலாறு சொல்லும் விதமாக தனது ஆசிரியரின் 'கலை என்றும் விடுதலைக்காக' என்ற இலட்சியப் போக்குடன், மேடையை அலங்கரித்தனர்.

இவ்விழாவிற்கு தலைமை தாங்கி சிறப்பித்த திரு.சிவநாதன் அவர்கள் குறிப்பிடுகையில், இன்று ஐரோப்பாவில் இருக்கக் கூடிய நடன ஆசிரியர்களில் குறிப்பிடத்தக்கவர்களில் ஒருவராக மிகவும் சிறந்த விடுதலை உணர்வு மிக்க கலைப்பரப்புகளைத் தர வல்லவர் சாவித்திரி இம்மானுவேல் அவர்களும் அவர்சார்ந்த மாணவிகளுமே என்பதில் ஐயமில்லை என்றார்.

ஈழமுரசு ஆசிரியர் குழுவைச் சேர்ந்த திரு.மா.நாகேஸ்வரன் அவர்கள் விழாவின் சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்பித்தார். அவர் பேசுகையில் 'கலை கலைக்காக' இருந்த காலம் மாறி இன்று 'கலையும் கலைஞர்களும் விடுதலைக்காக' என்ற காலம் உருவாகி வருகின்றதெனவும் அந்தவகையில் இன்றைய நர்த்தகிகள் அவர்கள் அடைந்த ஆசிரியரான பிரம்ம ஸ்ரீ வீரமணி ஐயரின் மாணவி சாவித்திரி இம்மானுவேல், பாடகர் திரு. கண்ணன், மிருதங்க வித்துவான் பிரணவநாதன் போன்றோர் ஜேர்மனியில் மட்டுமன்றி ஈழத் தமிழர்கள் வாழக்கூடிய நாடுகளிலெல்லாம் விடுதலைக் கலைப் பணி ஆற்றியவர்கள். இவர்கள் போன்று மற்றைய கலைஞர்களும் குறிப்பாக நடன ஆசிரியர்கள் விடுதலைக்கான முழுப்பங்காற்ற முன்வரவேண்டும்.

அரங்கேற்ற நர்த்தகிகளான சுஜாதா, யனுஷா ஆகியோர் தனது ஆசிரியை பணியாற்றிய பெரும்பாலான விடுதலை மேடைகளை அலங்கரித்து நின்றவர்கள் என்றார்.

அலாரிப்பு புஸ்பாஞ்சலியுடன் ஆரம்பமான அரங்கேற்றம் குறத்திவரை விறுவிறுப்புடனும், அதே நேரம் எட்டு வருடங்களாக பரதம் பயின்றவர்கள் என்பதற்கமைய தாளம், பாவம், நேரம் ஆகியவற்றை இறுக்கமாகக் கடைப்பிடித்து சபையோரின் பெரும் வருவேற்பைப் பெற்றனர். அரங்கேற்ற உருப்படிகளில் தில்லானா, கௌத்துவம், பதம், குறத்தி போன்றவை விடுதலைக்கதை சொல்லும் அங்கங்களாக அமைந்தன. பக்கவாத்தியக் கலைஞர்களும் பழைய அரங்கேற்ற மாணவிகள் ஒன்பது பேரும் ஈழமுரசு ஆசிரியர் குழுவைச்சேர்ந்த திரு.மா.நாகேஸ்வரன் அவர்களால் கௌரவிக்கப்பட்டனர்.

ஆசிரியர் திருமதி சாவித்திரி இமானுவேல் அவர்களை தமிழாலய நிர்வாகியான திருமதி சிவநாதன் அவர்கள் பொன்னாடை அணிவித்து கௌரவித்ததுடன், செல்விகளுக்கு நற்சான்றிதழ் வழங்கி ஆசிரியர் அவர்கள் கௌரவித்தார்.

*– நடா–ராஜன்*

## சுவிசில் அறப்பணி மகளிர் மன்றம் உதயம்

மேல்மருவத்தூர் அருட்திரு பங்காரு அடிகளார் வழிகாட்டலில் இயங்கிவரும் சித்தர் பீட



மானது வர்க்க பேதங்களைக் கடந்து ஏழைக்குழந்தைகட்கு கல்வி, அன்னதானம், ஆடைதானம், விதவையருக்கு உதவி, இலவசத்திருமணம், ஊனமுற்றோருக்கு கருவிகள் வழங்குதல் மற்றும் ஏழைகளுக்கு இலவச மருத்துவம் என 'அறப்பணி செய்து வருகிறது. இவ்வகையில் மேற்படி உலகெங்கும் அமைக்கப்பெற்று வரும் மேல்மருவத்தூர் அன்னை ஆதிபராசக்தி மன்றங்களின் தொடர்ச்சியில், ஐரோப்பாவில் முதன் முதலாக சுவிஸ் நாட்டில் - ஒரு மன்றம் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு வாரத்தில் வியாழன், வெள்ளிக்கிழமைகளில் விசேட பூசைகளும், கூட்டு வழிபாடும் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன.

மேலதிக விபரங்களுக்கு .

அருள்மிகு மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர்பீடம் - மகளிர் மன்றம்

LEHN:IIHLE, BERN STR 98,
3250 LYSS, Swiss.
தொலைபேசி: 00 41-31-85 96 076

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடா நாடு தழுவிய மாவீரர் நாள்

கனடாவில் ரொறன்ரோ நகரில் மாவீரர் வாரமான நவம்பர் 21 முதல் 27 வரை முறையே ஸ்காபரோ, மிஸ்சிசோகா, கிழக்கு ரொறன்ரோ, மேற்கு ரொறன்ரோ, வடக்கு ஸ்காபரோ, ரொறன்ரோ, டவுன்ரவுன், ரெக்ஸ்டால் கிப்ளிங் ஆகிய இடங்களில் மாவீரர் தின நினைவு நிகழ்வுகள் நடைபெற்றதைத் தொடர்ந்து 28ம் திகதி ரொறன்ரோ CNE மண்டபத்திலும், 22.11.98 அன்று தலைநகர் ஒட்டவாவிலும், 28.11.98 அன்று வன்கூவரிலும், மொன்றியலிலும் மாவீரர் நாள் நிகழ்வுகள் நடைபெற்றன.

28-ம் திகதி CNE மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் புகலிட நாடுகளில் வரலாறு கண்டிராத மக்கள் எழுச்சியைக் காண முடிந்தது. 7000 இருக்கையைக் கொண்ட மண்டபம் நிரம்பிய நிலையில் குளிர்த் தரையில் தொடர்ந்தும் குழந்தைகள் வயோதிபர் பேதமின்றி நிறைந்த கிட்டத்தட்ட 10,000 ஆனபோது வேறு வழியின்றி சுமார் 5000 மக்கள் திரும்பிச்சென்றனர். கனடாவில் 24 மணிநேர வானொலி மூலம் மக்களை இனியும் வரவேண்டாம் என அறிவித்ததுடன் தமிழ்த் தொலைக்காட்சி மூலம் நிகழ்வுகளை நேரடியாக ஒளிபரப்புச் செய்யப்பட்டதனால் உணர்வாளர்கள் வீடுகளில் இருந்தபடியே மாவீரர் நிகழ்வுகளைக் கண்டு களித்தனர்.

# அவுஸ்திரேலியாவில் மாவீரர்நாள்

அவுஸ்திரேலியாவில் மெல்போன், சிட்னி, கிழக்கு அவுஸ்திரேலியா, தெற்கு அவுஸ்திரேலியா, கன்பெரா, குயின்ஸ் லாண்ட், நகரங்களிலும் ஆயிரக்கணக்கான மக்கள் உணர்வு பூர்வமாகக் கலந்து கொண்டு மாவீரர்நாள் நிகழ்ச்சிகளைச் சிறப்பித்தனர்.

கலை நிகழ்வுகளின் போது பெருந் தொகையான மக்கள் மேடைக்கு வந்து உயிர்காப்பு நிதிக்கெனப் பணத்தையும் நகைகளையும் உவந்தளித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



05.12.98 இல் ஒஸ்லோவில் இடம்பெற்ற மாவீரர்நாள் நிகழ்வில்...

# அகஸ்தியரின் 3வது ஆண்டு நினைவு விழா

மறைந்த எழுத்தாளர் திரு. எஸ்.அகஸ்தியரின் 3வது நினைவு விழா சுட்டுவிரல் பத்திரிகையின் ஆதரவில் கடந்த 11ம் திகதி நடைபெற்றது.




இவ்விழாவிலே திரு.அகஸ்தியரினால் முன்னர் எழுதப்பட்ட 'இருளினுள்ளே' குறுநாவலின் தொகுப்பு வெளியிட்டு வைக்கப்பட்டது.

'தமிழன்' ஆசிரியர் திரு.காசிலிங்கம், சுட்டுவிரல் ஆசிரியர் திரு. இயல்வாணன், திரு.கீழ்க்கரவை பொன்னையன், திரு.சக்திப்புயல், திரு.அரியநாயகம், திரு.ரமேஷ், திருமதி—ஜோதி நவரட்ணம், திருமதி. கௌரி றேமன்ட், திரு. திவ்யநாதன் உட்பட பலரும் இவ்விழாவில் உரையாற்றினர்.

இருளினுள்ளே குறுநாவல் தொகுப்பினை திருமதி அகஸ்தியர் வெளியிட்டுவைத்தார்.

# கனடாவின் வரலாற்றில் பதிவான மாவீரர் நாள்

28-11-98. சனிக்கிழமை. ரொறன்ரோ. கனடா. அன்று காலை விடிந்தபோது என்னவோ வித்தியாசமான நாளாய் எனக்கொன்றும் தோன்றவில்லை. அன்று மாலையே இது ஒரு வரலாறு படைக்கப்போகும் நாள் என்பது எனக்கு மட்டுமல்ல. கனடாவாழ் தமிழர்கள் எவருக்குமே தெரியவில்லை.



மாலை மணி நான்கை எட்ட எட்ட கனேடியத் தேசியப் பொருட்காட்சி உள்ளரங்கில் அலைஅலையாய்த் திரண்டு வந்து கொண்டிருந்த தமிழீழ உணர்வாளர்கள் அனைவரும் இது ஒரு வரலாறு படைக்கப் போகும் நாள் என்று தெரியாமலேயே வரலாற்றில் ஒரு அங்கமாயினர்.

சோடியாய், மூன்றாய், ஐந்தாய், பத்தாய், நூறாய், ஆயிரமாய், பத்தாயிரமாய் மக்கள் வெள்ளம் உள்ளரங்கை நிறைத்தபோது வெளியே ஆயிரக்கணக்கில் திரண்ட மக்களை தடுத்து நிறுத்துவதைத் தவிர வேறு வழியேதும் எவருக்குமே தெரியவில்லை.

ஏற்கனவே மாவீரர் வாரம் ஏழு நாட்களும் ஏழு வெவ்வேறு இடங்களில் மாவீரர் வழிபாட்டு நிகழ்வுகளை வைத்து எம் மாவீரர்கள் நினைவு கூரப்பட்டிருந்தபோதும், இறுதிநாள் நடந்த மாவீரர் நிகழ்வுக்கு ஆயிரக்கணக்கில் திரண்ட மக்களில் சில ஆயிரங்களைத் திருப்பி அனுப்புவதே அந்நாள் நிகழ்வில் மிகச்சிரமமான பணியாகவிருந்தது. இருக்கைகள் அனைத்தும் நிறைந்த நிலையில் தரையிலும், உள்ளரங்கத் திடலிலும் மக்கள் நிரைநிரையாக அமர்ந்து நிறைத்தனர்.

உறைகுளிரில் நிலங்களில் அமர்ந்து மாவீரர் வழிபாட்டு நிகழ்வுகளில் அங்கமாகிய மக்களை எண்ணி விழிமூடிக் குழிகளில் உறங்கும் வீரர்களும் ஒரு முறை சிலிர்த்தேயிருப்பார்கள்.

'மக்களை அரங்கிற்கு வரவேண்டாம்' என்று தொடர்ச்சியான அறிவிப்புக்களை 24 மணி நேரத்தமிழ் வானொலி வாயிலாக விடுத்துக் கொண்டிருந்த போதிலும், மக்கள் வெள்ளம் மாவீரர்களை வழிபடத் திரண்டு வந்து புது வரலாறு ஒன்றை எழுதினர்.

கொடிகாமத்தில் அமைந்திருந்த மாவீரர் நினைவு இல்லத்தின் வடிவத்தினையொத்த வழிபாட்டு இல்லம் அமைக்கப்பட்டு வழிபாடுகள் நடைபெற்றது.

[illegible] தனது வழிபாட்டு முறையாகக் கொண்டிருந்தான் என்பதை இன்று நிரூபிக்கும் வகையில் மாவீரர் வழிபாடு சிறப்பாக இடம்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

தமிழகத்திலிருந்து வந்திருந்த இனஉணர்வாளரும், தமிழீழப் போராட்ட ஆதரவாளருமான பேராசிரியர் பெரியார்தாசன் சிறப்புரையாற்றும்போது, 'மாவீரர் நாளின்போது தமிழீழ மண்ணில் பூச்சொரிந்த தமிழீழ வான்படை விமானங்களுக்கு வேறு வேலையெதுவும் (குண்டு போடுவது) கொடுக்காமல் விடுவது சந்திரிகாவைத்தான் சார்ந்தது' என்று குறிப்பிட்டார். 'நாம் நம் நாட்டில், நம் மண்ணில் சந்திப்போம் தோழர்களே!' என்று பலத்த கரவொலிக்கு மத்தியில் விடைபெற்றார் பேராசிரியர் பெரியார்தாசன்.

எமது மாவீரர்களை வழிபட தமிழ் மக்கள் மட்டுமல்ல, கனேடிய அரசியல்வாதிகளும் முண்டியடித்து வந்ததை இங்கு குறிப்பிட்டுத்தானே ஆகவேண்டும். புதிய சனநாயகக் கட்சியின் தலைவர் திருஹாவாட் ஹம்டன் உட்பட்ட பல அரசியல்வாதிகள் தங்கள் தலைகளை ஒரு முறையாவது அரங்கினுள் காட்டிவிட போட்ட போட்டிகளை எப்படிக் குறிப்பிடாமல் விட முடியும்?

சிறியோர் முதல் பெரியோர் வரை மலர்களால் எங்கள் நெருப்பு மலர்களை அர்ச்சிப்பதில் மட்டுமே பெற்ற மன அமைதியை எப்படித்தான் வருணிக்க முடியும்? மலர் மலைகளில் தங்கள் முகங்கள் மறைய எங்கள் செல்வங்கள் தங்கள் புன்னகை பூத்த இதழ்களுடன் பூத்துக் கிடந்ததைப்பார்த்து எம் அகமெல்லாம் மலர்ந்ததை எப்படித்தான் கூறுவது?

அரங்கிற்கு வெளியே தடுத்து வைத்திருந்த ஆயிரங்களில் அகப்பட்ட 'சில பொடிசுகள்' கூட பொறுப்பாய், 'எங்கள் மாவீரர்களை வழிபட எங்களை விடாவிட்டாலும் பரவாயில்லை, இந்தக் குளிரில் நிற்கும் குழந்தைகளையும், வயதான பெரியோர்களையுமாவது உள்ளே விடுங்கள்' என்ற தங்கள் 'கௌரவத்தை'யும் விட்டு விட்டுக் காவல் துறையினரிடம் கெஞ்சியதைப் பார்த்தபின் எதைத்தான் நாம் கூறுவது?

கூறுவதற்கு என்ன உள்ளது?
வேறு என்னதான் உள்ளது?

**'உறுதிகள் குலையாத எங்கள்**
**உரிமைப்போரில்**
**எதிரிகள் வீழ்வதும் எம் தேசம்**
**விடிவதும்**
**நிச்சயம் நடக்கும் என்பதை**
**நிகழ்வுகள் சொல்லும்.'**
**'ஆம்....! இந்நிகழ்வும் நிச்சயம்**
**சொல்லும்'**

இதைத்தவிர சொல்வதற்கு என்னதான் இருக்கிறது?

மக்கள் ஆதரவு என்ற மகத்தான பலத்தை முழு அளவில் பெற்று வரலாறு படைத்த இம் மாவீரர் நிகழ்வு பற்றி வேறு என்னதான் இருக்கிறது சொல்வதற்கு?

*'வானதி இராசசோழன்'*

# முதல் தடவையாக மலேசியாவில் மாவீரர் நாள்

மலேசியாவில் இம்முறை மாவீரர்நாள் நிகழ்வுகள் பல மாநிலங்களில் பரவலாக நடைபெற்றது. கிள்ளான், பாலிங்,



ஜோகூர்பாரு, பத்து மலை போன்ற பகுதிகளில் மண்டபங்கள், கோயில்கள் போன்ற இடங்களில் நடந்தன.

இந்நிகழ்வுக்கு நூற்றுக்கு மேலான மக்கள் கலந்து கொண்டு உணர்வு பூர்வமாக மாவீரர்களுக்கு தீபவணக்கம், மலர்வணக்கம் செய்யப்பட்டது. நிகழ்வுகளில் சிறுவர்கள் பாடல், நடனம், பேச்சுக்கள் போன்ற பலவற்றை நிகழ்த்தி, வந்திருந்த மக்களை வியப்பில் ஆழ்த்தினர்.

அத்துடன் உலகத்தமிழர் நிவாரண நிதி அறங்காவலர் திரு. சி. பசுபதி அவர்களும், மலேசியத் தமிழ் நெறிக்கழகத் தலைவர் திரு.இரா.திருமாவளவன் அவர்களும் கலந்து சிறப்புரையாற்றினார்கள். அத்துடன் நவம்பர் 27ம் நாள் இரவு 8.05 (மலேசிய நேரப்படி) தமிழீழ ஆதரவாளர்கள் வீடுகளில் மாவீரர்களுக்கு தீபமேற்றி அமைதிவணக்கம் செய்யப்பட்டது. அத்துடன் இப்படியான நிகழ்வுகள் முதல்முதலாக பரவலாக நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

# ஐரோப்பிய உதைப்பந்தாட்ட விருது சிடானுக்கு

சிடான் என்றதும், பட்டென பலருக்கு ஞாபக மூட்டுவது பாரீசில் நடந்து முடிந்த உலகக்கிண்ண இறுதிப் போட்டியே. உதைப்பந்தாட்டம் அல்லது கால்பந்தாட்டம் என்றுதான் எம்மவர்கள் `FOOT BALL' ஐ அழைப்பார்கள். ஆனால் சிடான் விளையாடியது ஒரு தலைப்பந்தாட்டமெல்லவா? ஏனெனில் உலகக் கிண்ண இறுதிப்போட்டியில் சிடான் போட்ட இரு கோல்களும் தலையினாலே தவிர கால்களினால் அல்ல. பிரான்சுக்கு வெற்றியை ஈட்டிக்கொடுத்த அந்த வீரனை, ஐரோப்பிய சிறந்த உதைப்பந்தாட்டக்காரனாக இவ்வாண்டு தெரிந்தெடுத்துள்ளனர். அல்ஜீரிய பூர் வீகத்திலிருந்து வந்தாலும், 23 ஜூன் 1972-ல் பிரான்சின் மார்சேயில் சிடான் பிறந்ததனால், ஒரு பிரஞ்சுப் பிரஜையாக இருக்கிறார். அதுமட்டுமன்றி 15 தடவைகள் வெல்லமுடியாத உலகக்கிண்ணத்தை 16வது தடவையில் வென்றுகொடுத்ததுடன் பிரான்சில் மட்டுமன்றி உலகத்திலேயே தன்பெயரை பதித்துக்கொண்டவர். 51 நாடுகளில் திரட்டப்பட்ட புள்ளி விபர அடிப்படையில் சிடான் 244 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்துக்கு தெரிவானார். இவருக்கு அடுத்தபடியாக குரவோஷியாவின் 'சுக்கர்' 68 புள்ளிகளுடன் இரண்டாம் இடத்தையும், சென்ற வருட விருதுக்குரிய பிரேசில் சுப்பர் ஸ்ரார் றொனால்டோ 66 புள்ளிகளுடன் மூன்றாம் இடத்தையும் பெற்றனர். கடந்த 10 வருட கால விருது பெற்றவர்கள் விபரம் கீழே:

| | பெயர் | ஆண்டு |
|---|---|---|
| 1) | வன் பஸ்ரன் (VAN BASTEN) | 1989 |
| 2) | மத்தியாஸ் (MATTHAEUS) | 1990 |
| 3) | பப்பன் (PAPIN) | 1991 |
| 4) | வன் பஸ்ரன் (VAN BASTEN) | 1992 |
| 5) | றொபாட்டோ பாட்சோ (ROBETO BAGGCO) | 1993 |
| 6) | தொயிஸ்கோவ் (STOITSCHKOV) | 1994 |
| 7) | வோச் (WEAH) | 1995 |
| 8) | சமர் (SAMMER) | 1996 |
| 9) | றொனால்டோ (RONALDO) | 1997 |
| 10) | சிடான் (SIDANE) | 1998 |

-பொன். தாமோதரம்

# 1998ம் ஆண்டு ஒருநாள் கிரிக்கெட் சாதனைகள்

1998ம் ஆண்டு நடைபெற்று முடிந்த ஒருநாள் போட்டிகளை அடிப்படையாகக்கொண்டு முதல் பத்து துடுப்பாட்ட வீரர்கள், முதல்பந்துவீச்சாளர்கள் அணிகள் விளையாடிய போட்டி விபரங்கள் ஆகியவற்றை ஈழமுரசு உங்களுக்கு அறியத்தருகிறது.





**துடுப்பாட்டவீரர்கள் விபரம்**

| பெயர் | போட்டி | இனிங்ஸ் | ஓட்டம் | சராசரி | 100கள் | 50கள் |
|---|---|---|---|---|---|---|
| டெண்டுல்கர் (Ind) | 34 | 33 | 1894 | 65.31 | 9 | 7 |
| கங்குலி (Ind) | 36 | 35 | 1328 | 41.50 | 4 | 7 |
| அசாருதீன் (Ind) | 37 | 33 | 1268 | 43.72 | 3 | 8 |
| பெயின்டிங் (Aus) | 24 | 24 | 1166 | 53.00 | 3 | 6 |
| ஜடஜா (Ind) | 36 | 34 | 1004 | 47.81 | 2 | 6 |
| பெவேன் (Aus) | 25 | 22 | 859 | 68.50 | 1 | 8 |
| அஸ்ரல் (Nz) | 22 | 22 | 891 | 42.43 | 1 | 7 |
| அன்ரி புளோவர் (Zim) | 20 | 20 | 849 | 44.68 | 2 | 6 |
| கிளைஸ்ரிஸ் (Aus) | 25 | 24 | 831 | 36.13 | 3 | 2 |
| கலிஸ் (Sa) | 22 | 22 | 812 | 45.11 | 3 | 2 |

**பந்துவீச்சாளர்கள் விபரம்**

| பெயர் | போட்டிகள் | விக்கட்டுகள் |
|---|---|---|
| அஜர்கர் (Ind) | 30 | 58 |
| கும்பிளே (Ind) | 25 | 37 |
| சிறிநாத் (Ind) | 19 | 37 |
| முஸ்ராட் (Pak) | 11 | 34 |
| முரளிதரன் (sl) | 18 | 32 |
| பிரசாத் (Ind) | 23 | 29 |
| டொனால் (Sa) | 13 | 27 |
| டெண்டுல்கர் (Ind) | 34 | 24 |
| தர்மசேனா (Sl) | 23 | 24 |
| பிளிமிங் (Aus) | 13 | 23 |

**அணிகளின் விபரம்**

| நாடு | போட்டிகள் | வெற்றி | தோல்வி | கைவிடப்பட்டது |
|---|---|---|---|---|
| இந்தியா | 40 | 24 | 14 | 2 |
| பாகிஸ்தான் | 26 | 12 | 14 | — |
| சிம்பாவே | 26 | 6 | 20 | — |
| அவுஸ்திரேலியா | 25 | 15 | 10 | — |
| சிறீலங்கா | 23 | 11 | 12 | — |
| நியூசிலாந்து | 23 | 9 | 12 | 2 |
| தென்னாபிரிக்கா | 22 | 17 | 5 | — |
| இங்கிலாந்து | 12 | 3 | 9 | — |
| மே.இந்திய தீவுகள் | 8 | 6 | 2 | — |

பந்துவீச்சு, துடுப்பாட்டம் இரண்டிலுமே இந்திய வீரர்களே முன்னணிவகிக்கிறார்கள். இம்முடிவு தலைவராக மீண்டும் பொறுப்பேற்ற அசாருதீனுக்கு புதுத்தென்பை ஏற்படுத்தியிருக்கிறது.

பொன். தாமோதரம்

## கிரிக்கட்


1999ம் ஆண்டு கோடை காலத்தில் பிரித்தானியாவில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் கலந்துகொள்வார்களென எதிர்பார்க்கப்படும் வீரர்கள் சிலரை வாரத்திற்கு ஒருவர் வீதம் அறிமுகம் செய்யும் வரிசையில் அடுத்து வருபவர் மேற்கிந்திய தீவுகள் அணியின் வளர்ந்து வரும் நட்சத்திரம் சந்திரபோல்.

### சந்திரபோல் (SHIVANARINE Chanderpaul)



சந்திரபோல் என்றதுமே ஒரு ஆசியநாட்டவராக இருக்க வேண்டுமென முடிவு செய்துவிட்டீர்களா? ஓரளவுக்கு உண்மைதான். ஆனால் அவர் மேற்கிந்திய தீவுகளில் ஒன்றான கயானாவில் 1974 ஒகஸ்ட் 18ம் நாள் பிறந்து கயானாவாசியாக இருந்தாலும் இவருடைய வம்சாவளியினர் இந்திய தொடர்பை கொண்டவர்கள். இவருடைய தோற்றம், இன்று கூட ஒரு ஆசியராகவே அடையாளம் காட்டி நிற்கிறது. இடதுகை ஆட்டக்காரரான இவர் சரிந்து செல்லும் மேற்கிந்திய தீவுகள் அணியில் வளர்ந்துவரும் புதிய வீரன். தோல்விகளை தொடர்ந்து ஏற்று வரும் மேற்கிந்திய தீவுகளுக்கு சந்திரபோலின் ஆட்டம் மட்டும் திருப்தியாக இருக்கிறது. 1993ம் ஆண்டு இங்கிலாந்துக்கெதிராக டெஸ்ட் போட்டிகளில் அடியெடுத்து வைத்த இவர், இதுவரை 32 போட்டிகளில் பங்கெடுத்து 1974 ஓட்டங்களை குவித்திருக்கிறார். இவற்றுள் 2 சதங்களும் 16 அரைச்சதங்களும் அடங்கும். ஆட்டமிழக்காது பெறப்பட்ட 137 ஓட்டங்களே இவரின் அதிகூடிய 'டெஸ்ட்' ஓட்டங்களாகும். டெஸ்ட் போட்டிகளில் தென்பட்ட இவரின் திறமையால் விரைவில் 'ஒருநாள் போட்டிகளிலும்' ஆட தெரிவானார். 54 ஒருநாள் போட்டிகளை விளையாடிய இவர், ஒரு சதமும் 11 அரைச்சதங்களும் அடித்து 1581 ஓட்டங்களைப் பெற்றார். அதிகூடிய ஓட்டமாக 109 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றார்.

வேகப்பந்து வீச்சாளர் அணி என்றால் அது மேற்கிந்திய தீவுகள் தான் என்றிருக்கும் போது சுழல்பந்து வீச்சாளர்கள் வளரும் சந்தர்ப்பங்கள் அரிதாகவே உள்ளது. அதே நேரம் சுழல்பந்து வீச்சாளர் அணி என்றால் அது இந்திய அணியாகத்தான் இருக்கமுடியும். அப்படி என்றால் இந்திய வாசனை கொண்ட சந்திரபோலுக்கு சுழல்பந்து வீச தெரியவேண்டும் என்ற விதி இல்லாவிட்டாலும் கூட, சந்திரபோலுக்கு சுழல்பந்து வீச நன்றாகவே தெரிந்திருக்கிறது. 'வேர் ஓடி விளாத்தி முளைத்தாலும் தாய்வழி தப்பாது' என்று முன்னோர்கள் கூறியது இவ்விடத்தில் சந்திரபோலுக்கு பொருந்திவிட்டதல்லவா? பகுதிநேர பந்து வீச்சாளராக செயற்படும் இவர் 5 டெஸ்ட் விக்கட்டுக்களையும் 12 ஒருநாள் விக்கட்டுக்களையும் கழற்றியிருக்கிறார்.



மேற்கிந்திய துடுப்பாட்ட மலையாக கருதிய லாறாவும், கூப்பரும் அன்மைக்காலங்களில் எதிரணிக்கு தூசாகிவிட்ட நிலையில், சந்திரபோலின் வளரும் திறமைகள் மேற்கிந்தியாவுக்கு புதியதென்பை ஏற்படுத்தியிருக்கிறது. டெஸ்ட் போட்டியானாலும், ஒருநாள் போட்டியானாலும் வேறுபிரித்து ஆடும் தகுதியை உடைய இவரால் மேற்கிந்தியத் தீவுகள் மீண்டும் பலம் பெறுமா? இங்கிலாந்து திடல்களில் என்றுமே சளைக்காத மேற்கிந்திய தீவுகளுக்கு சந்திரபோல் எந்தளவுக்கு கைகொடுப்பார் என்பதற்கு உலகக்கிண்ணப் போட்டிகள் தான் விடை பகர வேண்டும்.

தொகுப்பு:
பொன். தாமோதரம்

## அறிவித்தல்

தமிழ்ச் சிறார்களின் நலன்கருதியும், தமிழ் மக்களின் விளையாட்டுத் தரத்தை வளர்க்கும் முகமாகவும், தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினால் விளையாட்டுப் பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதன் முதற்கட்டமாக, பூப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம், கூடைப்பந்தாட்டம் ஆகிய விளையாட்டுக்களின் பயிற்சிகளுக்கான மைதான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

எதிர்வரும் 3ம் திகதி ஞாயிற்றுக்கிழமை முதல் ஒவ்வொரு திங்கட்கிழமைகளிலும் மாலை 6.00 மணியிலிருந்து 8.00 மணி வரையிலும், மாதத்தில் முதல் இரண்டு ஞாயிற்றுக்கிழமைகளில் பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 6.00 மணி வரையும் 30, Rue Louis Lumierre, 75020 Paris-ல் அமைந்திருக்கும் Stade de France மைதானத்தில் பயிற்சிகள் நடைபெறும்.

மேலதிக விபரங்கட்கு: 01 43 58 11 42

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாணயமாற்று விகிதம்

| | $ | DM | £ | FFr | S.Fr |
|---|---|---|---|---|---|
| நியூயோர்க் | – | 0.61 | 1.66 | 0.18 | 0.75 |
| பிராங்பேட் | 1.64 | – | 2.79 | 0.30 | 1.24 |
| லண்டன் | 0.59 | 0.35 | – | 0.11 | 0.44 |
| பாரிஸ் | 5.53 | 3.35 | 9.36 | – | 4.15 |
| சூரிச் | 1.32 | 0.81 | 2.28 | 0.24 | – |
| பம்பாய் | 42.60 | 25.88 | 70.71 | 7.57 | 32.12 |
| கொழும்பு | 68.15 | 41.41 | 113.12 | 12.33 | 51.39 |

# நவசமசமாஜ கட்சி ஆண்டுவிழாவிற்கு புலிகளுக்கு அழைப்பு

நவசமசமாஜக் கட்சியின் 21-வது ஆண்டுவிழா நிகழ்வுகளில் கலந்துகொள்ள வருமாறு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அக் கட்சி அழைப்பு விடுத்துள்ளது. கட்சியின் 21-வது ஆண்டு விழா தொடர்பாக நடாத்தப்பட்ட பத்திரிகையாளர் மாநாட்டில் கட்சித் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்தின இதனைத் தெரிவித்துள்ளார்.

அப் பத்திரிகையாளர் மாநாட்டில், அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்ட தீர்வுத் திட்ட யோசனைகள் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை பூர்த்திசெய்யவில்லை என்பதைக் குறிப்பிட்ட கருணாரத்தின பரந்தன், கிளிநொச்சி சமர்களில் படைகளுக்கு ஏற்பட்ட தோல்வி அரசுக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ள போதிலும் யுத்தத்தைத் தொடர்ந்து நடாத்த வேண்டும் என அரசாங்கத்திலுள்ள ஒரு சாரார் தெரிவிக்கின்றனர்.

யுத்தம் காரணமாக நாட்டின் பொருளாதாரம் மிக மோசமான அளவிற்கு சீரழிந்துள்ளது. ஐ.தே. கட்சியும் இனவாதப் போக்கையே பின்பற்றுகிறது எனவும் தெரிவித்தார்.

(30ம் பக்கத் தொடர்ச்சி)

### எதையும் நான்....

தொலைக்காட்சிப் பேட்டியொன்றின்போது விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான கருத்தினை இவர் தெரிவித்திருந்தார் என குற்றம்சாட்டிய அரச தரப்பு அவர் மீது விசாரணைகள் நடாத்தப்பட வேண்டும் எனவும் கருதியது. நாடு திரும்பிய இவர் மீது பொலிசார் விசாரணைகளை மேற்கொள்வார்களா எனக் கேட்டபோதே திருகுமார்பொன்னம்பலம் மேற்கண்டவாறு தெரிவித்தார். இனவாதக் கோஷங்களிற்கு நான் ஒருபோதும் அடிபணியமாட்டேன். எனக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்பதற்காகவே என்மீது விசாரணை நடாத்தப்பட வேண்டும் என கோஷங்கள் எழுப்பப்படுகின்றன எனவும் அவர் குறிப்பிட்டார்.

(30ம் பக்கத் தொடர்ச்சி)

### படையினர் ஷெல்....

இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகளின் பீரங்கிப் படையணி மேற்கொண்ட தாக்குதலில் சில படையினர் காயமடைந்ததை அடுத்தே, ஆத்திரம் கொண்ட படையினர் கூட்டாக இத் தாக்குதலை நடாத்தியதாக மட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

(30ம் பக்கத் தொடர்ச்சி)

### பிரான்சிலிருந்து....

பெண் மீது பொலிசார் கடுமையான தாக்குதல்களை மேற்கொண்டதுடன், தமது தாக்குதல்கள் பற்றிய செய்தியை வெளியே தெரிவித்தால் நிர்வாணமாக தலைகீழாகத் தொங்க விடுவோம் எனவும் எச்சரித்துள்ளனர்.

மேற்படி விடயங்கள்யாவும் மனித கௌரவத்திற்கான மன்றத்தின் மூலம் தொல்லை தவிர்ப்புக் குழுவிடம் அவசரக்கடிதம் மூலம் விளக்கப்பட்டுள்ளது.

## கைக்குண்டு வீச்சில் இரு சிப்பாய்கள் பலி

நிலாவெளி பகுதியில் ரோந்து சென்ற இராணுவ அணி மீது விடுதலை புலிகள் நடாத்திய கைக்குண்டு தாக்குதலில் இரு சிப்பாய்கள் கொல்லப்பட்டு மேலும் இருவர் காயமடைந்துள்ளனர்.

## 6ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்: –



விண்ணில்: 01–01–93

### கார்த்திகேசு கந்தையா

உடுவிலை பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு கந்தையா 01-01-93 இறைவனடி சேர்ந்து ஆறு ஆண்டுகள் ஓடிவிட்ட போதும் அன்னாரை மனைவி புவனேஸ்வரி அவர்களும், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர் அனைவரும் நினைவு கூருகின்றார்கள்.

மனைவி, பிள்ளைகள்
உற்றார், உறவினர்

தகவல்:- க.குகன் (சுவிஸ்)


தை பிறந்தால் வழி பிறக்கும்

புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் தம் பொங்கல் - புதுவருட வைபவங்களிடையே

இடம்பெயர்ந்து – குடில் இழந்து உணவுக்கும் – உடைக்கும் அல்லலுறும் எம் மழலைகளுக்கு வழங்கும் புத்தாண்டு – பொங்கல் வாழ்த்துக்களை சேகரிக்கும்

உண்டியல் செயல்திட்டம்

09.01.99 முதல் 17.01.99 வரை

உங்கள் வீடுகளில் - உங்கள் தெருக்களில் நீங்கள் சந்திக்கும் எம் புனர்வாழ்வுக் கழகச் செயற்திட்ட உறுப்பினர்களின் உண்டியல்களை நிரப்பி, அந்த மழலைகளுக்கு உங்கள் பொங்கல் - புதுவருட வாழ்த்துக்களைத் தெரிவியுங்கள்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் - பிரான்ஸ்
26, Rue de département, 75018 PARIS
Tel: 01 40 38 30 74

Mano Photo Service
மனோ புகைப்படச்சேவை

உங்கள் வீட்டில் நடைபெறும் சகல மங்கலகரமான நிகழ்ச்சிகளையும் புகைப்படம் பிடித்து சிறியோர் முதல் பெரியோர் வரை என்றென்றும் பார்த்து மகிழ்ந்திட வேண்டுமா! உங்கள் விருப்பம் போல் புகைப்படம் எடுத்திட இன்றே நாடுங்கள்

தொடர்புகளுக்கு:
17, Allee du Dauphine, 93150 Blanc Mesnil.
Tel: 01 48 79 25 44

உலகம் தூங்கினாலும் - நாங்கள் விழித்திருப்போம்!

எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்...
- பொன் கலைக்கூடம்

எதிர்பாருங்கள்!
வெகுவிரைவில்!
ஐரோப்பிய திரையரங்குகளில்!...

பொன்கலைக்கூடம்
வழங்கும்..
கீழ்கரவை. பொன்னையனின்
தீ..மழை

காலம் அவர்களைத்
துரத்தியது...
காலம் மட்டுமா....

வாடிக்கையாளர்கள் நண்பர்கள் அனைவருக்கும் எமது புதுவருட வாழ்த்துக்கள் உரித்தாகுக

AMV
IMPORT - EXPORT

அனைத்து மீன் வகைகளும் மொத்த விலையில் கொடுக்கப்படும். மரக்கறி வகைகளும் மலிவான விலையில் மொத்தமாகப் பெற்றுக்கொள்ளலாம். Rungis மரக்கறி வகைகளும் மொத்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

208, Rue du Fbg. St. Denis,
75010 Paris.

ஏற்றுமதி இறக்குமதியாளர்கள்

Tel: 01 44 72 91 25
Fax: 01 44 72 91 30

Pub


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழமுரசு

Eelamurasu Weekly



அனைத்துத் தொடர்புகளுக்கும்:

"EELAMURASU"
22, Rue Perdonnet
75010 Paris

Tél: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64



KING Telecom

தமிழ் ஈழம்
இலங்கை
இந்தியா

45 32


நிமிடம்

King தொலைபேசி அட்டையை பாவிப்பதன் மூலம் தொலைபேசி அழைப்பில் 65% வரை சேமியுங்கள்

92, Rue de Bellville, 75020 Paris (M°: Pyrénées)
Tél.: 01 44 62 93 96 Fax: 01 44 62 94 96

33, Place de Général de Gaulle
60100 Creil (Place de la Gare)
Tél.: 03 44 55 41 59 Fax: 03 44 55 42 51

www.kingtelecom.com.




# இந்தியா - சிறீலங்கா வணிக உடன்பாடு கைச்சாத்திடப்பட்டது

(28.12.98)

இந்திய - சிறீலங்கா தலைவர்கள் தமக்கிடையேயான வணிக உடன்பாடொன்றை இன்று கைச்சாத்திட்டுள்ளனர். இரு நாடுகளுக்கும் இடையேயான ஏற்றுமதி — இறக்குமதி வரி நீக்கலை மையமாகக் கொண்ட இவ் உடன்பாட்டில் சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகாவும், இந்தியப் பிரதமர் வாஜ்பாயும் இன்று டெல்லியில் கைச்சாத்திட்டனர்.

இது பொருளாதார முன்னேற்றத்திற்கான ஒரு படிக்கல் என இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வன்சிங்கா தெரிவித்த அதேவேளை, தமது இரு நாடுகளுக்கும் இடையேயான உறவுகளில் ஒரு புதிய அத்தியாத்தை இது ஆரம்பித்துள்ளது என சிறீலங்கா அமைச்சர் கதிர்காமர் கூறினார்.

இந்தியா — சிறீலங்காவிற்கு 560 மில்லியன் டொலர் பெறுமதியான பொருட்களை ஏற்றுமதி செய்கிறது. 42.7 மில்லியன் டொலர் பெறுமதியான பொருட்களை சிறீலங்கா இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்கிறது.

இவ் வரிநீக்க உடன்பாடு இந்தியாவிற்கு சாதகமானது என கொழும்பு வணிக நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.



# படையினர் ஷெல் வீச்சு 10 பேர் படுகாயம்

மட்டக்களப்பு இராணுவ முகாங்களில் இருந்து படையினர் குடிமனைகளை நோக்கி மேற்கொண்ட ஷெல் தாக்குதலினால் பத்து பொதுமக்கள் படுகாயம் அடைந்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை அதிகாலை இரண்டு மணியளவில் மட்டக்களப்பு கறுத்தப்பால இராணுவ முகாம், பிரிகேடியர் முகாம், விமானத்தள முகாம், கொம்மாந்துறை முகாம் ஆகியவற்றில் இருந்து ஏக காலத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் பொதுமக்களின் குடிமனைகளை நோக்கி நடாத்தப்பட்ட தாக்குதலில் கொடுவாமடு பகுதியில் வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் உறவினர்கள் 10 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

காயமடைந்த கணபதிப்பிள்ளை ராணி (35), கணபதிப்பிள்ளை பிள்ளையான் (32), கணபதிப்பிள்ளை செல்லையா (45), செல்லையா மஞ்சுளா (23), செல்லையா குகன் (15), பிள்ளையான் உருத்திரன் (12), பிள்ளையான் இராசமணி (10), பிள்ளையான் லவன் (9), பிள்ளையான் காண்டீபன் (8), பிள்ளையான் ஞானேஸ்வரன் (4) ஆகியோர் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு கறுத்தப்பால

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# எதையும் நான் எதிர்கொள்ளத் தயார்

## - குமார் பொன்னம்பலம்

என் மீது எந்த விசாரணையை வேண்டுமானாலும் சிறீலங்கா அரசு நடாத்தட்டும். நான் எதனையும் எதிர்கொள்ளத் தயாராக இருக்கிறேன். இவ்வாறு அகில இலங்கைத் தமிழ் காங்கிரசின் தலைவரான குமார் பொன்னம்பலம் கொழும்பு திரும்பிய பின்னர் தெரிவித்துள்ளார்.

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# பிரான்சிலிருந்து திருப்பி அனுப்பப்பட்ட யுவதி மீது பொலிசார் சித்திரவதை

பிரான்சிலிருந்து நாடு கடத்தப்பட்ட முத்துத்தம்பி வனிதா என்ற இளம் பெண்ணை கொட்டாஞ்சேனைப் பொலிசார் கைதுசெய்துள்ளனர்.

இவர் மீது நடாத்தப்பட்ட விசாரணைகளில் சித்திரவதைகளும் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவருகிறது. சாவகச்சேரி மீசாலையைச் சேர்ந்த இவர் பிரான்சிலிருந்து திருப்பி அனுப்பப்பட்ட பின்னர் கொட்டாஞ்சேனை விடுதியொன்றில் தங்கியிருந்தார்.

கடந்த நவம்பர் மாதம் 19ம் திகதி இவர் கொட்டாஞ்சேனைப் பொலிசாரால் எவ்வித காரணமும் அற்ற நிலையில் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டார்.

பொலிஸ் நிலையத்தில் இரும்புக் குழாய் ஒன்றினால் அடிவயிற்றில் தாக்கப்பட்டுள்ளார். இவர் தாக்குதலுக்குள்ளானதை இவரது தாயார் உறுதிப்படுத்தி அதுபற்றி மனித உரிமைச் சங்கங்களிற்கு முறையீடு செய்துள்ளார். இவரது முறையீட்டினை அடுத்து மனித கௌரவத்திற்கான மன்றத்தைச் சேர்ந்த பிரதிநிதி ஒருவர் இவரை பார்வையிடச் சென்றுள்ளார்.

அப் பிரதிநிதி பார்வையிட்டு திரும்பிய பின்னர் அப்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# ஈராக் மீது மீண்டும் குண்டு வீச்சு

(28.12.98)

இன்று ஈராக்கின் வான்பரப்பில் பறந்த அமெரிக்க யுத்த விமானங்கள் ஈராக்கின் விமான எதிர்ப்பு நிலைகள் மீது குண்டுகளை வீசி தாக்கியுள்ளன. இதன்போது நான்கு படையினர் பலியானதாக ஈராக் அறிவித்துள்ளது.

இத் தாக்குதலை அமெரிக்க இராணுவத் தலைமையகம் உறுதிப்படுத்தியதுடன் தங்களது விமானங்களின் சுய பாதுகாப்பிற்காகவே இத் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக கூறியுள்ளது.


பாரிஸ் லாசப்பலில்

தர்ஷனா உணவகம்

வாடிக்கையாளர், நண்பர்கள் அனைவருக்கும் எமது புதுவருட வாழ்த்துக்கள்

நீங்கள் விரும்பிய சுத்தமான, சுவையான இலங்கை, இந்திய அறுசுவை உணவு வகைகளை சுவைத்து மகிழ்ந்திடவும் அனைத்துவிதமான உணவு வகைகளையும் ஓடருக்குப் பெற்றுக்கொள்ளவும் இன்றே நாடுங்கள்

23, Rue Perdonnet, 75010 Paris. - Tel: 01 40 05 08 36 / 06 80 02 93 41


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org